ரூபா 20.00

விலைக்கு 
அனுமதி 
படுவதற்குரியது 


பக்கம் 08 | பக்கம் 10 | பக்கம் 17 | பக்கம் 23

www.onlineuthayan.com

பக்கங்கள் : 24

# உதயன்

சுடர் 27
கதிர் 226

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 25 திங்கட்கிழமை (09/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# அரச உயர்மட்ட உத்தரவுப்படியே நிமலரூபன் அடித்துக் கொலை

## குற்றஞ்சாட்டுகிறார் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, ஜூலை 9

நிமலரூபனை மிகக் கொடூரமான முறையில் தாக்கிக் கொலை செய்த சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் மீது அரசு, கொலைக்குற்றம் சுமத்தி, பணிநீக்கம் செய்து, உரிய சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று வலியுறுத்தினார்.

இவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வில்லையெனில், அரச உயர்மட்டத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கிணங்கவே இந்தத் தாக்குல் சம்பவம் இடம்பெற்றதென எமக்குக் கிடைத்திருக்கும் செய்தி நிரூபணமாகும் எனவும் அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச பாதுகாப்பில் இருந்த கைதி ஒருவரைக் கடுமையாகத் தாக்கிக் கொலைசெய்ததே குற்றமாகும். அதிலும், அவரது உடலை 04

### தமிழினிக்கு மணப்பெண் அலங்காரப் பயிற்சி

கொழும்பு, ஜூலை 9

வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு மையத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு அரசியல்துறையின் முன்னாள் பொறுப்பாளர் சுப்பிரமணியம் சிவகாமி எனப்படும் தமிழினிக்கு மணப்பெண் அலங்காரப் பயிற்சி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஒருவருடகாலம் தமிழினிக்கு புனர் 04

### இலங்கைக்கு இன்னொரு இழப்பு

கொழும்பு, ஜூலை 9

கிறீஸ் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் இலங்கைக்கு 347 கோடி ரூபா இழப்பு ஏற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் இலங்கை மத்திய வங்கி 22,163,500 யூரோவை (இலங்கைப் பெறுமதி - 3,472,576,045 ரூபா) கிறீஸ் அரச பிணைகளில் முதலீடு செய்திருந்தது.

இதன் தற்போதைய பெறுமதி சுமார் 30 மில்லியன் ரூபாவாக இருக்கும் என்று கணிக்கப்படுகிறது.

கிறீஸில் தற்போது மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் அந்த நாடு வங்குரோத்து நிலையை அடைந் 04

## புலம்பெயர்ந்தோரால் அச்சுறுத்தல்; முறியடிப்பதற்கு முன்வாருங்கள்

### இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, ஜூலை 9

"வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் சமூகம்தான் இப்போதைக்கு இலங்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாகத் திகழ்கின்றது. இந்த அச்சுறுத்தலை முறியடித்து வெற்றியை நிலைநாட்ட வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் ஆகியோர் அர்ப்பணிப்புடன் செயலாற்றவேண்டும்."

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சனிக்கிழமை தியத்தலாவையில் இடம்பெற்ற இலங்கையின் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் தூதுவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகை 04

## கிழக்கில் அரசைத் தோற்கடிக்கவே களத்தில் குதிக்கிறது கூட்டமைப்பு

### திருமலையில் சம்பந்தன் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசு வெற்றி பெறக் கூடாதென்ற நோக்குடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகிறது. எனவே, கிழக்கில் அரசு வெல்லக் கூடாது. அரசைப் பிரதிபலிக்கும் தமிழ்க் கட்சியும் வெல்லக் கூடாது. அதற்காக நாம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ்க் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஓர் இணக்கப்பாடு ஏற்படுவதையே தாம் விரும்புகின்றனர் என்றும் இதுவிடயமாக கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் தமிழ்க் கூட்டமைப்பு பேசியிருக்கின்றது என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி உறுப்பினர்களுக்கான கூட்டமொன்று திருகோணமலையில் சம்பந்தனின் இல்லத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய இரா.சம்பந்தன் மேலும் கூறியவை வருமாறு -

நடக்கவிருக்கும் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் தமிழ் மக்களுக்கு முக்கியமான ஒன்றாகும். வடக்குக் கிழக்கு பிரிக்கப்பட்டிருப்பதை எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. இத் தேர்தலில் அரசு வெற்றி பெறுமானால் இதனைக் கொண்டு சர்வதேச 04

## பாலியல் வன்முறைகளில் இலங்கைக்கே முதலிடம்

### இந்தப் பெருமை அரசுக்கே என்கிறார் மங்கள சமரவீர

கொழும்பு, ஜூலை 9

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் உலகில் அதிகளவில் இடம்பெறும் நாடாக இலங்கையை மாற்றியமைத்து அரசு உறுதியளித்தபடி இந்த விடயத்தில் நாட்டை ஆச்சரியமாக்கியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிரணிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் அதிகளவில் இடம்பெறும் நாடாக இலங்கை தற்போது மாறியுள்ளது. உலகில் இந்த விடயத்தில் முதன்மை வகித்து தான் உறுதியளித்தபடி இந்த நாட்டை அரசு மேற்படி விடயத்தில் ஆச்சரியமாக்கியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்குள் நாட்டில் 700 இற்கும் மேற்பட்ட சிறுவர் 04

### பயிற்சி வழங்க பாகிஸ்தான் தயார்

கொழும்பு, ஜூலை 9

இந்தியாவில் பயிற்சி பெற்று வரும் இலங்கை விமானப்படையினரை அங்கிருந்து வெளியேற்றினால், அவர்களுக்கு பயிற்சி வழங்க பாகிஸ்தான் தயாராக இருப்பதாக அந்த நாட்டு இராஜதந்திர தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. இவ்வாறு கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழக முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட தமிழகத் தலைவர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக சென்னை தாம்பரத்தில் உள்ள இந்திய விமானப்படை முகாமில் இலங்கை படையினருக்கு வழங்கப்பட்டு வந்த பயிற்சிகள் நிறுத்தப்பட்டன.

அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவில்லை என பின்னர் தகவல்கள் வெளியாகி 04

### புலிகளுக்காகவே ஆட்சியை இழந்தேன்

#### –கருணாநிதி

சென்னை, ஜூலை 9

தமிழீழ விடுதலைப் புலிகளுக்காகத்தான் 1991ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியை இழந்தது என்பதை இப்போதாவது மக்கள் புரிந்து கொண்டால்சரி. இவ்வாறு தி.மு.க. தலைவர் கருணா நிதி கூறினார்.

நேற்றையதினம் சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன் போது அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

கேள்வி: டெசோ மாநாட்டிற்கு மற்ற 04

### ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழர்களை கொன்ற அரசு கைதிகளையும் சாகடிக்கிறது

#### விக்கிரமபாகு குமுறல்



கொழும்பு, ஜூலை 9

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்களைக் கொன்ற அரசு இன்று தமிழ் அரசியல் கைதிகளையும் அடித்து முறித்துப்படு கொலை செய்கிறது - என்று பொது எதிரணிக்கட்சிகளின் சார்பில் விக்கிரமபாகு கருணாரட்ண குமுறியுள்ளார்.

வடக்கில் தேர்தல் நடத்தினால் நூற்றுக்கு ஐந்து சதவீதமான வாக்குகள் கூட அரசுக்குக் கிடைக்கா. இருப்பினும், அது நூற்றுக்கு இருபத்தைந்து சதவீத வாக்குகளைப் பெற்று வரும் எனத் தெரிவித்த பொது எதிரணிக் கட்சிகள், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் கள்ள வாக்குப் போடுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர் எனத் தேர்தல் ஆணையாளர் கூறியது அரசுக்குப் பொருந்தும் எனவும் தெரிவித்தன.

தமிழ் பேசும் மக்கள் இந்த அரசை 04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 924 பாடசாலைகள் தற்போது செயற்படுகின்றன

## யாழ். மாவட்டத்திலேயே அதிக பாடசாலைகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 9

*வட மாகாணத்தில் உள்ள ஆயிரத்து 33 அரச பாடசாலைகளில் 924 பாடசாலைகளே இயங்கிக் கொண்டிருக்கின்றன. 109 பாடசாலைகள் இயங்காத நிலையிலேயே உள்ளன என்று கல்வித் திணைக்களத் தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

வடமாகாணத்திலுள்ள 75 '1 ஏபி' பாடசாலைகளில் 2 இயங்கவில்லை 120 '1சி' பாடசாலைகளில் ஒன்று இயங்கவில்லை. 338 இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் 21 இயங்கவில்லை. 500 மூன்றாம் நிலைப் பாடசாலைகளில் 80 இயங்கவில்லை.

வடமாகாணத்தில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ். மாவட்டத்திலேயே அதிக பாடசாலைகள் உள்ளன. அதே போன்றே ஏனைய மாவட்டங்களை விட யாழ். மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான பாடசாலைகள் இயங்காமல் உள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள 491 பாடசாலைகளில் 67 பாடசாலைகள் இயங்கவில்லை. வவுனியாவில் உள்ள 107 பாடசாலைகளில் 14 பாடசாலைகள் இயங்கவில்லை. கிளிநொச்சியில் உள்ள 112 பாடசாலைகளில் 18 பாடசாலைகள் இயங்கவில்லை. முல்லைத்தீவில் உள்ள 126 பாடசாலைகளில் 07 பாடசாலைகள் இயங்கவில்லை. மன்னாரிலுள்ள 197 பாடசாலைகளில் 3 பாடசாலைகள் இயங்கவில்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள 45 '1ஏபி' பாடசாலைகளில் 2 பாடசாலைகள் இயங்கவில்லை. 48 '1சி' பாடசாலைகளும் இயங்குகின்றன. 162 இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் 2 பாடசாலைகள் இயங்கவில்லை. 236 மூன்றாம் நிலைப் பாடசாலைகளில் 57 பாடசாலைகள் இயங்கவில்லை.

வவுனியாவில் உள்ள 6 '1ஏபி' பாடசாலைகளில் ஒன்று இயங்கவில்லை. 15 '1சி' பாடசாலைகளில் ஒன்று இயங்கவில்லை. 42 இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் 2 இயங்கவில்லை. 44 மூன்றாம் நிலைப் பாடசாலைகளில் 10 பாடசாலைகள் இயங்கவில்லை.

கிளிநொச்சியிலுள்ள 6 '1ஏபி' பாடசாலைகளும் இயங்குகின்றன. அதேபோன்று 12 'கே'பாடசாலைகளும் இயங்குகின்றன. 43 இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் 8 பாடசாலைகள் இயங்கவில்லை. 51 மூன்றாம் நிலைப் பாடசாலைகளில் 10 பாடசாலைகள் இயங்கவில்லை.

முல்லைத்தீவில் உள்ள 9 '1ஏபி' பாடசாலைகளில் 3 பாடசாலைகள் இயங்கவில்லை. 23 'கே' பாடசாலைகளும் இயங்குகின்றன. 41 இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் 3 பாடசாலைகள் இயங்குகின்றன. 53 மூன்றாம் நிலைப் பாடசாலைகளில் ஒரு பாடசாலை இயங்கவில்லை.

மன்னாரிலுள்ள 9 '1ஏபி' பாடசாலைகளும் இயங்குகின்றன. 22 '1சி' பாடசாலைகளும் இயங்குகின்றன. 50 இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் ஒரு பாடசாலை இயங்கவில்லை. 116 மூன்றாம் நிலைப் பாடசாலைகளில் 2 பாடசாலைகள் இயங்கவில்லை என அந்தத் தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

# ஜெய்ப்பூர் நிறுவன வெள்ளிவிழா நிகழ்வு



யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நேற்று முன்தினம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் மருத்துவர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும் மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், சமூக சேவைகள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், செஞ்சிலுவைச் சங்க அதிகாரி கிறிஸ்ரோ ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

ஜெய்ப்பூர் நிறுவன வெள்ளிவிழா மலரை சமூக சேவைகள் பணிப்பாளர் நளாயினி இன்பராஜ் வெளியிட்டு வைக்க அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பெற்றுக் கொண்டார்.

தற்போதைய தலைவர், முன்னாள் தலைவர், நிறுவன முன்றிலில் அமைக்கப்பட்ட சிலைகளை வடிவமைத்த சிற்பக் கலைஞர் கலாபூஷணம் சிவப்பிரகாசம் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். செஞ்சிலுவைச் சங்கத்தால் நினைவுப்பட்டயமும் வழங்கப்பட்டது. போட்டிகளில் வெற்றியீட்டிய வலுவிழந்த பயனாளிகள், பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (ம-135-17)

# இயக்குநர் சபை தெரிவில் கால தாமதம் ஏற்படுமாம்

## நீர்வேலி ப. நோ. கூ. ச. தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9


நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபையை தெரிவு செய்வதற்கு கால தாமதம் ஏற்படும் என்று சங்கத்தில் தலைவர் என். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-


சங்கத்தின் மொத்தமாகவுள்ள 34 கிளை நிலையங்களில் 29 கிளை நிலையங்களுக்கு மட்டுமே கிளைக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மீதியாகவுள்ள ஐந்து கிளை நிலையங்களுக்கும் எதிர்வரும் 29 ஆம் திகதி கிளைக்குழுத் தேர்தல் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இந்தக் கிளை நிலையங்களுக்குக் கிளைக்குழு தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் பிறிதொரு நாளில் பொதுச் சபைக் கூட்டம் நடத்தப்பட்டு புதிய இயக்குநர் சபை தெரிவு இடம் பெறவுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)



*யாழ். போதனா வைத்தியசாலைக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக் கட்டடத்தின் பணிகள் பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளன. நவீன வசதிகள் கொண்டதான இந்த மாடிக்கட்டடம் 'ஜெய்க்கா' நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.* (த-135)



*சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந் [illegible]நாதன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் சபையின் தலைவர் ஆர். இராஜாராம் உள்ளார்.* (ம-17)

# காலநிலை மாற்றத்தால் இறால் சிக்குவது குறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். குடாக் கடல் நீர் நிலையில் இறால் பிடிப்புக்கும் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பண்ணை, குருநாகர், அரியாலை மற்றும் தீவுப் பகுதி கடல் நீரேரியில் தற்போது இறாலின் வளம் அருகிக் காணப்படுகின்றது.

தற்போதைய கால நிலையில் இறால் அதிகம் பிடிபடுவதில்லை என்று கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணத்தால் இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பண்ணைக் கடல் ஓரத்தில் பல நூற்றுக் கணக்கான இறால் பிடிக்கும் கூடுகள் அமைக்கப்பட்டும் கூட அதில் இறால் சிக்குவது மிக அரிதாகி உள்ளதாக மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, நகரை அண்டிய கொட்டடி, குருநகர், பாஷையூர் சந்தையில் இறாலுக்கு பெரும் கிராக்கி நிலவி வருகின்றது.

இந்தச் சந்தைகளில் ஒரு கிலோ இறால் 600 ரூபா முதல் 800 ரூபா வரைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

### திறப்பு விழாக்கள்

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகம் மற்றும் களஞ்சிய அறை கிளாலி கிளை கட்டடம் ஆகியவை முற்பகல் 11.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன. சங்கத் தலைவர் செ.மார்க்கண்டு தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் கலந்துகொள்வர்.

* * *

பளை நகரப் பகுதியில் 50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலையக் கட்டடம் முற்பகல் 10.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது. வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலையத் திறப்பு விழா பச்சிலைப் பள்ளி பிரதேச சபை செயலாளர் சி.சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் கலந்துகொள்வர். (ம-9)

### சொல்லாடுகளம்

''யாழ்ப்பாணத்தின் பண்பாட்டை பதிவு செய்வதில் முன்னணி வகிப்பவர் கே.டானியலா? செ. கணேசலிங்கனா?'' எனும் தலைப்பிலான சொல்லாடுகளம் பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் தம்பர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் தொடக்கவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு நோயை கட்டுப்படுத்த விழிப்புணர்வு சிரமதானம்

வவுனியா, ஜூலை 9

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வுச் சிரமதான நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

நாடெங்கும் நுளம்பைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டம் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஓர் அங்கமாகவே வவுனியா மாவட்டத்தில் இந்த விழிப்புணர்வுச் சிரமதான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வவுனியா செயலகத்தில் இடம்பெறும் சிரமதானப் பணியை அடுத்து வவுனியா நகரப் பகுதியிலுள்ள முக்கிய இடங்களிலும், டெங்கு நோய் பரவக் கூடிய இடங்கள் என இனங்காணப்பட்ட பகுதிகளிலும் அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வவுனியா அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர தலைமையில் இடம்பெறவுள்ள இந்தச் சிரமதான நிகழ்வில் சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தின் தீவிர நடவடிக்கைகள் காரணமாக டெங்கு நோயை ஏற்படுத்தக் கூடிய டெங்கு நுளம்புகளின் பெருக்கம் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-400)

மன்னார் சாரதியும் நடத்துநரும் தாக்கப்பட்டதால்

# தனியார் பஸ் சேவையினர் திடீர் பணிப்புறக்கணிப்பு

## பயணிகள் பல மணிநேரம் அந்தரிப்பு

மன்னார், ஜூலை 9

**மன்னார் தனியார் பஸ் ஒன்றின் சாரதியும் நடத்துநரும் தாக்கப்பட்டமையால் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் நேற்று திடீரென பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் பல மணிநேரங்கள் ஈடுபட்டதால் பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர்.**

மன்னார் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பஸ் ஒன்று புத்தளம் வீதியூடாக மன்னாருக்கு வந்து கொண்டிருந்தது. அப்போது மன்னார் பஸார் பகுதியில் அதனை இடை மறித்த இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் சிலர் பஸ்ஸிலிருந்த சாரதியையும், நடத்துநரையும் மோசமாகத் தாக்கியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம் பெற்றது. காயமடைந்த தனியார் பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக மன்னார் தனியார் பஸ் சங்கத்தினர் பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தனர்.

ஆனால் இந்த முறைப்பாடு குறித்து பொலிஸார் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதனால் முற்பகல் 11 மணியிலிருந்து மன்னார் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் திடீர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் தனியார் பஸ்களில் பயணிக்க இருந்த பொது மக்கள் தாம் செல்லவேண்டிய இடத்துக்கு போகமுடியாமல் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

தனியார் பஸ் உரிமையாளர்களின் பணிப்புறக்கணிப்பை அடுத்து நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் நடத்துநரையும் சாரதியையும் தாக்கினர் என்ற சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்தனர்.

இதனையடுத்து மன்னார் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங-க-12)

## 'மின்னிணைப்பு இலவசம்' சொன்னது என்னாச்சு ?

### மீளக் குடியமர்ந்தோர் விசனம்

புதுக்குடியிருப்பு, ஜூலை 9

இலவசமாக மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட மீள்குடியமர்ந்த பிரதேசங்களில் தற்போது கட்டணம் அறவிடப்பட்டே மின் இணைப்பு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியமர்ந்த பிரதேசங்களுக்கு மின் இணைப்புக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்பொழுது மீள்குடியமர்ந்த புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு வீட்டுக்கான மின் இணைப்புக் கட்டணமாக 15 ஆயிரம் ரூபா அறவிடப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது வீட்டுக்கான மின்சார வேலைகளை நிறைவு செய்து நீண்ட நாள்களாகியும் இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லையென்றும், மின் இணைப்புக் கட்டணமாக 15 ஆயிரம் ரூபாவைக் கிளிநொச்சியிலுள்ள மின்சார சபையின் அலுவலகத்தில் செலுத்திவிட்டு மின் இணைப்புக்காகக் காத்திருப்பதாகவும் இங்கு வசிக்கும் பொதுமகன் ஒருவர் தெரிவித்தார்.

அரசு அறிவிப்பது ஒன்று ஆனால் செய்வது வேறாகக் காணப்படுவதாக மீள்குடியமர்ந்த மக்கள் விசனத்துடன் தெரிவிக்கின்றனர். (ங-க-20)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் கட்டடங்கள் அமையவுள்ள பகுதிகளை குறித்த பிரதேசத்தின் மருத்துவப் பொறுப்பதிகாரி சந்திக பஸநாயக்க பாடசாலை ஆசிரியைகள் சகிதம் பார்வையிடுகின்றார். (ங-18)

## வீதியைப் புனரமைக்குக

அக்கராயன், ஜூலை 9

பூநகரியிலிருந்து அக்கராயன் வரையான வீதியைப் புனரமைக்குமாறு இங்குள்ள மக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

பூநகரி 10 ஆம் கட்டைச் சந்தியிலிருந்து அக்கராயன் வரையான 15 கிலோ மீற்றர் தூரத்தைப் பயணிகள் பஸ் மூலம் கடப்பதற்கு சுற்றுச் சூழல் தொடர்பாக ஒரு மணித்தியாலத்துக்கும் மேலான நேரம் தேவைப்படுகின்றது.

இந்த வீதி மோசமான நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

அத்துடன் வீதிப் புனரமைப்புக்கென குவிக்கப்பட்ட கிரவல் மண்ணும் குவியலாகக் காணப்படுகின்றது.

அக்கராயனிலிருந்து பூநகரி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் 60 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்பட்டால் கிளிநொச்சி மேற்குப் பகுதிக்கான போக்குவரத்து இலகுவாகி விடுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## வாய்க்கால்கள் புனரமைப்பு

கிளிநொச்சி, ஜூலை 9

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தின் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் இந்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு இந்தக் குளத்தின் மூலம் நீரைப் பாய்ச்சக் கூடியதாக உள்ளது.

இதனால் நல்லநாதன், சின்னப்பல்லவராயன்கட்டு, தியாகம், காரையன்பிட்டி ஆகிய கமவெளிகள் பயன் பெறக் கூடியதாக இருக்கும். (க-18)

## போஷாக்குத் தொடர்பான கருத்தரங்கு

துணுக்காய் கோட்டைகட்டியகுளம் கிராமத்தில் போஷாக்கு தொடர்பான கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றுள்ளது.

ரி.டி.எச். நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றுள்ளது. போஷாக்கான உணவைப் பெறுதல், தயாரித்தல், இந்த உணவினால் கிடைக்கும் நன்மைகள், இதை உண்பதனால் நோய்களிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம் போன்ற விடயங்கள் இந்தக் கருத்தரங்கில் ஆராயப்பட்டன.

கருத்துரைகளை குடும்ப நல உத்தியோகத்தர் வ.மகிழினி, ரி.டி.எச்.நிறுவனத்தின் முகாமையாளர் பிரியா ஆகியோர் வழங்கினர். பெருமளவு பெண்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## கணித, விஞ்ஞான இலவச கருத்தரங்கு

வவுனியா, ஜூலை 9

வவுனியா தெற்குக் கல்வி வலயமும் ரெக்னோவேல்ட் கணினிக் கல்வி நிறுவனமும் இணைந்து நடத்திய கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

கடந்த 6 ஆம் திகதி இரசாயனவியல் பாடத்துக்கான செயலமர்வும், 7 ஆம் திகதி பௌதிகவியலுக்கான கருத்தரங்கும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியிலும் சமநேரத்தில் இடம்பெற்றன.

வவுனியா தெற்கு வலய கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாணிக்கவாசகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

வவுனியா தெற்கு வடக்கு வலயங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவ மாணவிகள் இதில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (க-400)

## கசிப்பு உற்பத்தி, விற்பனை; தண்டம் 2 லட்சம் ரூபா

கிளிநொச்சி, ஜூலை 9

கிளிநொச்சிப் பகுதியின் பல்வேறு இடங்களிலும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு சுமார் 2 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் சுமார் 3 ஆயிரத்து 750 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்த ஒருவருக்கு கடந்த 6 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தால் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இதனைச் செலுத்தத் தவறின் நான்கு மாத காலம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை பொன்னகர் பகுதியில் 4 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட ஒருவருக்கும் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஸ்கந்தபுரம் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை விநாயகபுரம் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பை வைத்திருந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஏற்கனவே இவர் இத்தகைய குற்றத்தைப் புரிந்தமையால் இரண்டு மாதகால சாதாரண கட்டாயச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒருபோத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட வேறொரு நபருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 12 ஆம் கட்டை விசுவமடுப் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பைத் தனது உடைமையில் மறைத்து எடுத்துச் சென்றவேளை கைது செய்யப்பட்ட ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் 20 ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவை வைத்திருந்த ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும், கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 20 ஆயிரம் ரூபாவும், இராமநாதபுரம் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபாவும், சுண்டிக்குளம் பகுதியில் 930 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் ஆறுமாதகாலச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன. (க-6)

## பரந்தன் முதல் முல்லைத்தீவு வரையில்

### பாடசாலை பஸ் சேவை இல்லை; மாணவர்கள் பாதிப்பு

புதுக்குடியிருப்பு, ஜூலை 9

தமக்கெனத் தனியான பஸ் சேவைகள் இல்லாததால் தினமும் உளப்பாதிப்புடன் கல்வி கற்றுவருவதாக முல்லைத்தீவு மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பரந்தனுக்கும் புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியில் பயணிக்கும் அரச, தனியார் பஸ்கள் அக்கறையுடன் மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லை எனவும் சில வேளைகளில் ஏற்றிச் செல்கின்ற பஸ் நடத்துநர்கள் கூட மாணவர்களைக் கண்டபடி திட்டித் தீர்த்தவாறே தமது பஸ்களில் ஏற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பாடசாலைகளில் வந்திறங்கும் மாணவர்கள் உளப் பாதிப்புடன் கல்வி கற்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போரினால் கடுமையான உடல் உளப் பாதிப்புக்களை எதிர்கொண்ட இந்தப் பிரதேச மாணவர்களுக்கெனத் தனியான பாடசாலைச் சேவைக்கான பஸ் வசதிகளை எவருமே இதுவரையில் மேற்கொள்ளாததால் இவர்கள் மனத்தாக்கத்துடன் பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். (க-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச உயர்மட்ட...

அவரின் பெற்றோரிடம் கையளிக்க மறுப்பதும், அவரது இறுதிக் கிரியைகளைச் சுதந்திரமாகச் செய்ய இடமளிக்காதிருப்பதும் மாபெரும் குற்றமாகும்.

கடந்த மாதம் வவுனியா சிறைச்சாலையிலுள்ள கைதிகளை சிறைச்சாலை அதிகாரிகளும், விசேட அதிரடிப்படையினரும் மிகக் கொடூரமான முறையில் தாக்கினர். இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த நிமலரூபன் மரணமடைந்தார். அத்துடன், ஒருவர் சுயநினைவற்ற நிலையில் இருப்பதோடு ஏனையோர் படுகாயமடைந்து பரிதாபமான நிலையில் உள்ளனர்.

இந்தத் தாக்குதலில் மரணமடைந்த நிமலரூபனின் சடலத்தை அவரின் பெற்றோரிடம் கையளிக்கவும் அரசு மறுக்கின்றது. அவரின் சடலத்தை கம்பஹா மாவட்டத்திலேயே அடக்கம் செய்யவேண்டுமென அது கூறுகின்றது.

இது மிகவும் கொடூரமான செயலாகும். அரச பாதுகாப்பிலிருந்த ஒரு கைதியைக் கொன்றது மட்டுமல்லாமல், அவரின் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்குக்கூட அரசு இடமளிக்க மறுக்கின்றது. நிமலரூபனின் இறப்புக்கு அரசே முழுப்பொறுப்பு ஏற்கவேண்டும். அத்துடன், அவரின் மரணம் தொடர்பில் உண்மையான வைத்திய பரிசோதனையையும் வெளியிடவேண்டும்.

இந்தத் தாக்குதலின்போது பல முறிவுக் காயங்களுக்குள்ளான ஏனைய கைதிகள் மஹர, போகம்பரை சிறைச்சாலைகளிலும் மற்றும் வைத்தியசாலைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நிமலரூபனின் மரணம் மாரடைப்பால் ஏற்பட்டதென புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கூறினார். உடலில் பல முறிவுக் காயங்களுடன் இருந்த ஒருவரை மாரடைப்பால் இறந்தார் என எவ்வாறு கூறுவது? இது தொடர்பிலான முழுமையான வைத்திய பரிசோதனை அறிக்கையை அரசு வெளியிடவேண்டும்.

அத்துடன், அரசியல் கைதிகள் மீதான இதுபோன்ற தாக்குதல்கள் இனிவரும் காலங்களில் இடம்பெறாமலிருக்க அரசு பொறுப்பேற்கவேண்டும் - என்றார்.

## புலம்பெயர்ந்தோரால்...

யில் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் இலங்கையில் இருந்த பெரிய சவால் புலிகளின் பிரசன்னமாகும். அது சர்வதேசத்துக்குமான சவாலாகும்.

இந்தச் சவாலைத் தோற்கடித்து நாட்டைப் பாதுகாத்து கௌரவமான சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்று அப்போது நான் கூறினேன். அனைவருக்கும் கனவாகத் தெரிந்த சமாதானம் இன்று நனவாகியுள்ளது.

30 வருடங்களாக சிறைப்படுத்தப்பட்டிருந்த மனித வாழ்க்கை 3 வருடங்களுக்குள் மீட்கப்பட்டுவிட்டது. அவசர காலச்சட்டம் மற்றும் அதி உயர்பாதுகாப்பு வலயங்கள் இப்போது இல்லை. கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன. பயணங்களில் தடைகள் இல்லை. சமாதானத்திற்காக வேகமாகப் பயணிக்கும் நாடு இலங்கை என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உறுதிப்படுத்திக்கொண்டு பொருளாதார சவாலை வெற்றிகொள்வதே எமது அடுத்த இலக்காகும்.

2011 ஆம் ஆண்டு 8.3 சதவீத பொருளாதார வளர்ச்சியை எம்மால் எட்ட முடிந்தது. முதலீட்டாளர்கள் மற்றும் பாவனையாளர்களுக்கிடையில் விசுவாசம் அதிகரித்திருந்தமை, மகிழ்ச்சியான பொருளாதார நிலைமையை அதிகூடிய அளவில் பயன்படுத்தியமை மற்றும் வடக்கு - கிழக்கில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவை இந்தப் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகின.

ஐக்கிய நாடுகள் சபையுடனும் ஏனைய சபையுடனும் இணைந்து செயற்படும் சர்வதேச கொள்கையை நாம் கொண்டுள்ளோம். நாம் மிகவும் தெளிவான சர்வதேசக் கொள்கையைப் பின்பற்றுகின்ற போதிலும் புலம்பெயர்ந்தவர்களின் செயற்பாடுகள் எமக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. இவற்றை முழுமையாக வெற்றிகொள்ள இராஜதந்திரிகள் உதவவேண்டும்.

இராஜதந்திரிகளான நீங்கள் பழைய முறைமையை மாற்றி வெளிநாடுகளில் உள்ள மக்கள், வியாபாரிகள் போன்றோரைச் சந்தித்து அவர்களுடன் ஒன்றிணைந்து நாட்டின் நற்பெயருக்காக - சர்வதேசத்தில் ஏற்படும் அச்சுறுத்தல்களை நீக்குவதற்காகப் பாடுபட வேண்டும்.

ஒரு நாட்டுக்காக இராஜதந்திரத்தின் பங்களிப்பு மிக முக்கியம். விருந்துபசாரங்கள் போன்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வதைவிடவும் இராஜதந்திரிகளுக்கு முக்கியமான பணிகள் இருக்கின்றன. அதற்காக இந்த விருந்துபசாரங்களில் கலந்துகொள்ளவேண்டாம் என நான் சொல்லவில்லை. கலந்துகொள்ளத்தான் வேண்டும். அதைவிட உங்கள் பணி மிக முக்கியம்.

பொதுவாக எமது நாட்டின் வெளிநாட்டு இராஜதந்திரிகள் நாட்டின் நன்மைக்காக அவர்களது பதவிக் காலத்தின் பெரும்பாகத்தைச் செலவிடுகின்றனர். ஏனைய இராஜதந்திரிகளுக்கு இதுவொரு நல்ல உதாரணமாகும்.

இந்த நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜதந்திரிகளாக நீங்கள் நியமிக்கப்பட்டிருப்பதால் இந்த நாட்டின் தேவைகள், அது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்றவற்றின் அறிவைப் பெற்றிருக்கவேண்டும்.

உங்களது பிரதிநிதித்துவம், அனைத்தையும் நிவர்த்தி செய்யும் ஒன்றாக இருக்கவேண்டும். நாட்டின் தேவை தொடர்பில் நீங்கள் விருப்பத்துடனும், தயார் நிலையிலும், ஆற்றலுடனும் திகழவேண்டும்.

## ஒரு இலட்சத்து...

ஏற்கவில்லை யென்பதை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டும் எனவும் அவை மேலும் தெரிவித்தன.

எதிர்க்கட்சித் தலைவ ரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவை மேற்கண்டவாறு தெரிவித்தன.

இதன்போது, கருத்துத் தெரிவித்த நவ சமசமாஜச் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறியவை வருமாறு:-

அரசியல் கைதிகளை அரசு கடுமையாகத் தாக்கி கொலை செய்கின்றது. இந்தச் சம்பவத்தை நாம் கடுமையாக எதிர்ப்பதோடு, இதற்கு எதிராக நாடு முழுவதும் பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்க உள்ளோம்.

இதனடிப்படையில் ஒரு மாதத்திற்கு நான்கு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம். இந்தப் போராட்டங்கள் சாதாரண போராட்டங்கள் அல்ல. தற்போது ஆட்சியிலுள்ள அரசைக் கவிழ்த்து, விரட்டியடிப்பதற்கான போராட்டங்களேயாகும். அதற்காக நாடு முழுவதிலுமுள்ள மக்களை ஒன்றுதிரட்டி செயற்படுவோம்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்களைக் கொன்ற அரசு இது. அதுமட்டுமல்லாமல், முஸ்லிம் பள்ளிவாசலை உடைத்த அரசுதான் இது. இந்த அரசை ஆட்சியிலிருந்து விரட்டியடிக்க வேண்டும். அதற்காக மிகவும் சிறப்பான முறையில் செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அரசின் அராஜக செயல்களுக்கு எதிராக நாம் குரல் கொடுக்கும்போது, எம்மீது சேறுபூசும் வகையில் அது கருத்து வெளியிடுகிறது. அரச அடக்குமுறையின் உச்சக்கட்டமாக நாட்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கான சம்பளம் வெட்டப்படுவதுடன், அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி, சுகாதார சேவைகள் ஆகியனவும் தடைசெய்யப்படுகின்றன. அரசின் இந்தச் செயல்களுக்குப் பொது எதிரணியினர் என்றவகையில் நாம் எமது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம் - என்றார்.

## புலிகளுக்காகவே...

மாநிலங்களைச் சேர்ந்தவர்களையும், இலங்கையிலே உள்ள தமிழ்க் கட்சிகளையும் அழைப்பீர்களா?

பதில்: அழைப்போம்.

கேள்வி:- இலங்கை விமானப்படை வீரர்களுக்கு தமிழகத்திலே பயிற்சி அளிப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்ததற்கு தமிழக முதல்வர் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளாரே?

பதில்: தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, 3-2-2009 அன்று தமிழக அரசின் சார்பில் வெளியிட்ட செய்திக் குறிப்பை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த விமானப்படை வீரர்கள் சிலர் தாம்பரத்திலுள்ள வான்படை பயிற்சிக் கூடத்துக்கு வந்திருப்பதாகவும், அவர்களுக்கு பதிவு வழங்குமாறும் தாம்பரம் விமானப்படையினர் சேலையூர் பொலிஸ் நிலையத்தில் கேட்டுக்கொண்ட செய்தி அறிந்து, முதலமைச்சரின் அறிவுரைப்படி தலைமைச் செயலாளர் மத்திய அரசின் பாதுகாப்புத் துறையிடம் தொடர்பு கொண்டு, அவர்களை உடனடியாக திருப்பி அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

முதல்வர் கருணாநிதியின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு அந்த இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த வீரர்களை தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்ப உத்தரவிட்டதோடு, அந்தச் செய்தியை முதலமைச்சருக்கு தெரிவிக்குமாறு கூறியுள்ளது - இதுவே அந்தச் செய்திக் குறிப்பு.

இதிலிருந்தே இத்தகைய சம்பவம் தி.மு.க. ஆட்சியிலே நடந்தபோது எந்த அளவுக்குச் செயற்பட்டோம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கேள்வி: இலங்கையில் இறுதிப்போர் நடைபெற்றபோது, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நீங்கள் மத்திய அரசை எதிர்த்து ஆட்சியை இழந்திருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களே, 1991ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சியை மத்திய அரசு கலைத்ததற்குக் காரணம், விடுதலைப் புலிகளை நீங்கள் ஆதரித்தீர்கள் என்பதுதானே?

பதில்: 4-7-2012 திகதி ஆனந்த விகடன் இதழில், ''அபாண்டமாக பழி சுமத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைத்தீர்கள் என்று உங்கள் மேல் உள்ள குற்றச்சாட்டு குறித்து என்ன சொல்கிறீர்கள்?'' என்று சுப்பிரமணிய சுவாமியிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில்,

தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் விடுதலைப்புலிகளுக்கு கருணாநிதி எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார். விடுதலைப்புலிகள் இங்கே எரிபொருள் நிரப்பு நிலையம் நடத்தினார்கள், கோயம்புத்தூரில் நாட்டு வெடிகுண்டு தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தியிருந்தார்கள். புலிகளுக்குச் சீருடைகளைக் கூட கருணாநிதி தன்னுடைய செலவில் தைத்துக் கொடுத்துள்ளார். இதைப்பற்றி எல்லாம் எனக்கு அறிக்கை வந்தது.

நான்தான் அப்போதைய பிரதமர் சந்திரசேகரிடம் எடுத்துச் சொல்லி, ''கருணாநிதி, தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார். எனவே அவரது அரசைக் கலைக்க வேண்டும்'' என்று சொன்னேன். அவர் பயந்தார். சுற்றி இருந்தவர்கள் எல்லாம் இந்தக் காரணத்துக்காக அரசைக் கலைத்தால், தமிழ்நாட்டில் பெரிய கலவரம் வெடிக்கும் என்று பயமுறுத்தினார்கள். ''அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. கலையுங்கள்'' என்று தைரியம் கொடுத்து நான்தான் கலைக்க வைத்தேன். அதில் என்ன தப்பு? என்று சொல்லியிருந்தார்.

சுப்பிரமணிய சுவாமி இந்தப் பேட்டியில் கூறிய குற்றச்சாட்டுகள் உண்மையோ இல்லையோ ஆனா அதற்காகத் தான் தி.மு.க. பதவியை இழந்தது என்பது மட்டும் உண்மை.

இதிலிருந்தாவது ஒரு சிலர் வேண்டுமென்றே என்மீது பழி போடுகின்ற செயலை நிறுத்திக் கொண்டால், அதைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டால், அதுவே போதுமானது.

(ங)

## தமிழினிக்கு...

வாழ்வு அளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் தற்போது தமிழினிக்கு மணமகள்களை அலங்காரம் செய்யும் விசேட பயிற்சியுடன் வேறு சில பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ங)

## இலங்கைக்கு....

துள்ளது. இதனால் இலங்கை அரசு அங்கு தான் செய்தி ருந்த முதலீட்டைப் பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிறீஸில் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டுவரும் விடயம் தெரிந்திருந்தும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அங்கு பெருந்தொகைப் பணத்தை பிணைகளில் ஏன் முதலீடு செய்தார்? என்ற கேள்வி இலங்கைப் பொருளாதார வட்டாரங்களில் எழுந்துள்ளது. (ங)

## பயிற்சி வழங்க...

யிருந்தன. தற்போது அவர்களுக்கான பயிற்சிகள் பெங்களூரில் வழங்கப்பட்டு வருகின்றன. இலங்கை விமானப்படையினரை திருப்பி அனுப்புவது குறித்து இலங்கை அரசுக்கு இந்தியா இதுவரை எந்தவொரு முடிவையும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், இலங்கை விமானப்படையினரை, திருப்பி அனுப்ப இந்தியா முடிவு செய்தால், அவர்களுக்கு பாகிஸ்தான் பயிற்சியளிக்கத் தயாராக இருப்பதாக அந்த நாடு அறிவித்துள்ளது. இதேவேளை விமானப் படையினரைத் திருப்பி அனுப்பும் முடிவை இந்தியா எடுக்குமானால், அவர்களை அழைத்து வர பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுக் கும் என இலங்கையின் முப்படைகளின் பிரதான அதிகாரி ரொஷான் குணதிலக அறிவித்துள்ளார் - என்றுள்ளது. (ங)

## கிழக்கில் அரசை...

சமூகத்தின் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவில்லை என்ற பாரிய பிரசாரத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இத்தேர்தலில் அரசு வெற்றி பெறக்கூடாது. அரச கட்சியுடன் இணைந்து போட்டியிடும் எந்தத் தமிழரும் இத்தேர்தலில் வெற்றிபெறக்கூடாது. இதனை தமிழ் மக்கள் எவரும் அனுமதிக்கக் கூடாது. அரசு வெற்றி பெறக் கூடாது என்பதற்காகவே நாம் இத்தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம் - என்றார் அவர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை நகரசபைத் தலைவருமான க.துரைரெட்ணசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள், தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் வேறு அரசியல் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

## பாலியல் வன்முறை..

துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளதன் மூலம் குறித்த விடயம் உறுதியாகின்றது.

அம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை ஆகிய தெற்குப் பிரதேசங்களில் மட்டுமல்லாது நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் துஷ்பிரயோக சம்பவங்கள் இன்று அதிகரித்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

தனது சிறிய மகள் பாடசாலைக்கோ அல்லது பிரத்தியேக வகுப்புக்கோ சென்றுவிட்டு வீடு திரும்பும்வரையில் தங்களுக்கு நிம்மதி இருக்காதென்றும் அச்சமும், சந்தேகமும் தங்களை வாட்டி வதைக்கும் என்றும் மாத்தறையிலுள்ள அன்னை ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

யுத்த காலத்தில் கூட இவ்வளவு அச்சத்துடன் - பயத்துடன் - சந்தேகத்துடன் தாம் வாழவில்லையென்றும் அந்தத் தாயார் என்னிடம் சுட்டிக்காட்டினார். இன்று சிறுவர்களுக்கோ அல்லது பெண்களுக்கோ சுதந்திரமாக வீதியில் செல்ல முடியாத ஒரு நிலைமையை அரசு உருவாக்கியுள்ளது.

நாட்டில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் ஆகிய சம்பவங்களின் பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷ அரசின் அனுசரணையைப் பெற்றுத் தாங்கள் சக்தி மிக்கவர்கள் எனக் கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகளும், போதை வியாபாரிகளுமே ஈடுபட்டு வருகின்றனர் என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டவேண்டும்.

கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்கள் நாட்டில் பிரதான போதை விற்பனை மாவட்டங்களாக மாறியிருப்பதுடன், இவற்றை மையமாகக் கொண்டே நாட்டில் ஏனைய பாகங்களிலும் போதை விற்பனை அதிகளவில் இடம்பெறுகின்றன. அரச அனுசரணையுடன் இடம்பெறும் போதைப்பொருள் விற்பனை துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜூலம்பிட்டி அமரேயைத் தம்பி என அழைக்கையில் பதிலுக்கு அவர் ஜனாதிபதியை அண்ணா என அழைப்பதன் மூலம் இரு தரப்புகளுக்குமிடையில் இருந்து வரும் உறவு தெளிவாக அம்பலமாகின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வல்லுறவு ஆகியவற்றுடன் தொடர்புபட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை அரசு நாடாளுமன்ற உறுப்பினராக்கி பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராகவும் நியமித்துள்ளது. இந்த ஆட்சியாளர்களுடன் இணைந்திருந்தால் எவ்வாறான குற்றச்செயல்களைப் புரிந்தாலும் இலகுவில் விடுபட்டு விடலாம் என்ற விடயம் இதன்மூலம் அம்பலமாகின்றது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டெசோ மாநாட்டினால் நன்மை விளையுமா?

''டெசோ'' தமிழ் ஈழ ஆதரவாளர்கள் எனும் அமைப்பின் மாநாடு சென்னையில் விரைவில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டு அரசியலில் மிக முக்கிய பங்கு பணியாற்றிக்கொண்டிருந்த கலைஞர் மு.கருணாநிதி இலங்கை விடயத்தில் கடைப்பிடித்த சொதப்பல் கொள்கையில் இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல தமிழகத் தமிழர்களும் மனமுடைந்து போனார்கள். மத்திய அரசின் கபடத் திட்டத்துக்கு கலைஞர் துணைபோனார் என்பதே இந்த மக்களின் கருத்து. அதன் விளைவை கடந்த தேர்தலின் போது கலைஞரும் உணர்ந்து கொண்டார்-இந்திய மத்திய அரசும் புரிந்து கொண்டது. ஆனால் அது சுடலை ஞானம் போன்றதே.

மத்திய அரசின் பிடரியில் பிடித்து ஆட்டி இலங்கை விடயத்தில் இறுக்கமானதொரு நிலைப்பாட்டை எடுக்கச் செய்து ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்து விட்டு கண்ணீரும் கம்பலையுமாக எம்மக்கள் தவித்துக் கொண்டிருக்க நேர்ந்துள்ள நிலைமையை அன்று தவிர்த்திருக்கக் கூடிய ஆற்றல் உள்ளவராய் அப்போது இருந்தார் அவர். அடுத்துவந்த தேர்தலில் தமிழக மக்கள் முறையாக அவருக்குப் பாடம் புகட்டினார்கள். அதனால் விழித்துக் கொண்டு விட்ட கருணாநிதியும், அவர் போன்ற மற்றவர்களும் புதிய வியூகங்களை அமைத்து வரப்போகும் தேர்தலுக்காக தம்மைத் தயார்ப்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தான் கலைஞர் மீண்டும் டெசோ என்றும் மாநாடென்றும் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார் என்று அவரது சந்தர்ப்பவாத அரசியல் பற்றி அறிந்தவர்கள் விமர்சிக்கிறார்கள்.

எதுவானாலும் மு.கருணாநிதி தமிழ்நாட்டில் தேர்தலில் தோற்றாலும் கூட மாபெரும் ஓர் இயக்கத்தின் தலைவர் என்பதை மறந்து விடவோ மறைத்துவிடவோ முடியாது. கடந்த காலங்களில் 5 தடவைகள் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடன் ஆட்சியில் அமர்ந்து முதலமைச்சராகவும் பதவி வகித்தவர். அரசியலுக்கப்பால் தமிழ் அறிஞராகவும் மதிக்கப்படுபவர். மத்தியில் இன்று ஆட்சி புரியும் காங்கிரஸ் கூட்டணித் தலைவர்களால் மதிப்புடன் கவனிக்கப்படும் ஒருவர். தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுவதுமுள்ள அரசியல் தலைவர்களால் முதுபெரும் அனுபவமிக்க அரசியல் வாதியாகக் கருதப்படுபவர். அதனால் தான் அவர் நடத்தவிருக்கும் தமிழீழம் அமைப்பது தொடர்பான டெசோ மாநாடு பற்றி இலங்கையில் உள்ள சில தென்னிலங்கை அரசியல் வாதிகள் அச்சத்தில் ஆழ்ந்து போய் சிலபல கருத்துகளை வெளியிட்டு வருகிறார்கள். இலங்கையில் மட்டுமல்ல இந்திய மத்திய அரசும் கூட கருணாநிதியின் இந்த முயற்சி குறித்து மகிழ்ச்சியடையவில்லை.

டெசோ மாநாட்டை நடத்துவது பற்றி அறிவித்த சமயத்தில் கருணாநிதி வெளியிட்ட கருத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் ஈழம் அமைவதன் மூலமே விமோசனம் பிறக்கும் என்றார். இந்தக் குறிக்கோளை சாத்வீக முறையிலேயே அடைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்து பத்திரிகைக்கு அவர் அளித்திருந்த பேட்டியொன்றில், இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் விரைவில் ஐ.நா.ஒரு முடிவுக்கு வரும். அவர்களே ஒரு கருத்துக்கணிப்பின் மூலம் அதைத் தீர்மானித்துக் கொள்ள அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். ஏற்கனவே புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது 1977 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தின் அடிப்படைக் கொள்கையை அங்கீகரிப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதாய் இருக்கும் என்று கூறியிருந்தார்.

1985 ஆம் ஆண்டு கருணாநிதியால் உருவாக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டிருந்த டெசோ அமைப்புக்கு அண்மையில் மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. சென்னையில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது. அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கலந்துகொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இது பற்றி இலங்கை நாடாளுமன்றத்திலும் சிலர் குரல் எழுப்பியிருக்கின்றனர். அரசுக்கு ஆதரவளித்து வரும் சில கட்சிகளின் தலைவர்களும் இந்த மாநாட்டின் மூலம் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றி கவலை கொள்ளத் தொடங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

இன்று இலங்கையில் நடைபெற்றுவரும் சம்பவங்களும் அரசின் செயற்பாடுகளும் சர்வதேசத்தின் கவனத்தைத் திருப்புவதாய் உள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இன்னமும் ஆக்கபூர்வமாகச் செயற்படவில்லை. அமெரிக்க ஆதரவிலான மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தின் நிபந்தனைகள் அலட்சியப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் காணிகள் அடாத்தாக அபகரிக்கப்படுகின்றன. ராணுவத்தின் பிரசன்னம் எந்த வகையிலும் குறைந்தபாடாக இல்லை.

வருடக்கணக்கில் சிறையில் இருக்கும் தமிழ்க் கைதிகள் விடயத்தில் வெளிப்படையாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. போதாக்குறைக்கு சிறைக்கைதிகள் பலர் அதிகாரிகளால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளதுடன் ஒருவர் உயிர்நீத்தும் இருக்கிறார்.

இவையும் இவை போன்ற விடயங்களும் சர்வதேசத்தின் அக்கறையையும் அவதானத்தையும் டெசோ மாநாடு மேலும் வலுப்பெறச் செய்யும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தமிழர் பிரச்சினைகளில் அரசு தொடர்ந்து காட்டி வரும் அலட்சியமும் அசமந்தமும் அதற்கும் நல்லதல்ல நாட்டின் எதிர்காலத்துக்கும் நல்லதல்ல என்பதை மட்டும் இப்போது சொல்லி வைப்போம்.

# இலங்கை - இந்தியா கடல் எல்லையில் இரு கடற்படைகளினதும் விசேட சந்திப்பு

கொழும்பு, ஜூலை 9

இலங்கையின் கடல் எல்லைப் பிரதேசத்தில் வைத்து இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இலங்கை - இந்திய கடல் எல்லையில் இருநாட்டு கடற்படையினருக்கும் இடையிலான பேச்சுக்களை மேற்கொள்வதற்கு இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையின் தலைவர் சத்தியப்பிரகாஸ் சர்மா நடவடிக்கை எடுத்து வருகிறார்.

கடந்த வாரத்தில் இலங்கை கடற்படையினால் இலங்கையின் கடல் எல்லையில் வைத்து இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இருந்த போதும் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் தலையீட்டின் காரணமாக அடுத்த நாளே அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் கடந்த வாரம் மீண்டும் இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டிருந்தமை குறித்து குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. ஆனால் இலங்கை கடற்படையினர் அப்படியான சம்பவம் ஏதும் நடத்தவில்லை என்று மறுத்துள்ளனர்.

இந்த நிலையில் அண்மைய கைதுகள் காரணமாக மீளவும் இரு நாடுகளுக்கு இடையில் ராஜதந்திர மட்டத்தில் தீர்வுகாணப் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-22)

## பண்பாட்டு பெருவிழா மலர்

அச்சுவேலி, ஜூலை 9

அச்சுவேலி பண்பாட்டு பெருவிழா மலருக்கு பொருத்தமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'மலர்க்குழு, அச்சுவேலி கலைபண்பாட்டு மன்றம், அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி' என்ற முகவரிக்குச் சேர்ப்பிக்குமாறு அச்சுவேலி கலை பண்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி மேற்கு, பத்தமேனி, கதிரிப்பாய்-தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய ஏழு கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக பண்பாட்டுப் பெருவிழா ஓகஸ்ட் மாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளது.

பண்பாட்டுப் பெருவிழாவை முன்னிட்டு மலரும், இறுவெட்டும் வெளியிடப்படவுள்ளன. குறித்த பிரதேசத்தின், கலை, பண்பாடு, பாரம்பரியங்கள், பொருண்மிய மேம்பாடு, துறைசார் அபிவிருத்தி, ஆன்மிகம், தொல்பொருள் மற்றும் பாரம்பரிய கலை வடிவங்களை உள்ளடக்கியதாக ஆக்கங்கள் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-11)

# பொது நூலகங்களை தரப்படுத்த ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 9

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினர் நாட்டில் உள்ள அனைத்துப் பொது நூலகங்களையுழ் தரப்படுத்தி அவற்றின் அபிவிருத்திக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கவுள்ளனர்.

மூன்றாம் தர பொது நூலகங்கள் தவிர்ந்த ஏனைய தரங்களுக்கு பொது நூலகங்களை தரம் உயர்த்துதல், நூலகத்தை மதிப்பீடு செய்தல், மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இவற்றை மேற்கொள்வதற்கு வசதியாக தற்போது இயங்கும் பொது நூலகங்களை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதி உயர்தரம், முதல் தரம், இரண்டாம் தரம் போன்றவற்றுக்கு உரிய நூலக மதிப்பீட்டின் பிரகாரம் 5 ஆயிரம் ரூபா, 4 ஆயிரம் ரூபா, 2 ஆயிரத்து 500 ரூபா தொகை செலுத்தி விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

மூன்றாம் தர நூலகத் தரமுயர்வுக்கு மதிப்பீடு அவசியமில்லை. எனினும் மாகாண ஆணையாளரின் விதந்துரையுடன் 500 ரூபாவினை சேவைக் கட்டணமாகச் செலுத்தி விண்ணப்பித்தால்அந்த நூலகத்தை மூன்றாம் தரத்துக்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் தரம் உயர்த்தப்படும் என சபையின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ காரிய வாசம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளால் இயக்கப்படும் பொது நூலகங்களை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் பதிவு செய்வதற்கு பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலரின் ஆலோசனைக்கு அமைவாக விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் தெரிவித்துள்ளார். (ம-9)

# திருட்டு முயற்சி ஒருவர் பிடிபட்டார்

உடுவில் அம்பலவாணர் வீதியிலுள்ள வீட்டில் நேற்று அதிகாலை திருட்டு முயற்சி ஒன்று இடம் பெற்றுள்ளது. இதில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் ஒருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வீட்டில் இருந்தவர்கள் விழித்துக் கொண்டு கூக்குரல் இடவே அயலவர்களும் அங்கு ஒன்றுகூடி தப்பியோட முயன்ற இருவரில் ஒருவரைப் பிடித்தனர். சுன்னாகம் பொலிஸாருக்கும் இதுபற்றி அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரிடம் குறித்த நபர் ஒப்படைக்கப்பட்டார். (ம-4)

# உலக உரிமைப் பட்டியலில் வடக்கு கிழக்கிலும் தலங்கள்

## அரசு தீர்மானம் எடுத்தது

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அமைந்துள்ள புராதன பௌத்த வணக்க தலங்கள் மற்றும் கோயில்களை உலக உரிமைப்பட்டியலில் சேர்த்து விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அமைந்துள்ள துறைமுகங்கள் மற்றும் கோட்டைகளும்கூட உலக உரிமையாக்குவதற்கு குறிப்பிடப்படவுள்ளன.

இது தொடர்பான கோரிக்கை ''யுனெஸ்கோ'' அமைப்புக்கு முன் வைக்கப்படவுள்ளது.

அதைத் தொடர்ந்து 'யுனெஸ்கோ' வால் அது சம்பந்தமான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டுக் குறிப்பிட்ட தலங்களை உலக உரிமையாக்கிவிடுவதற்கு அமைந்துள்ள ஆற்றல்கள் குறித்து ஆராயப் படவுள்ளன.

எதிர்கால சந்ததிகளுக்கு அத்தகைய தலங்களைப் பேணிப்பாதுகாத்து வழங்குவது தொடர்பாகவே அரசால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ம-22)

# யாழ். மாவட்டத்தில் கடந்த வருடத்தில் ஆயிரத்து 785 பேர் விபத்தில் சிக்கினர்

## இவர்களில் 37 பேர் உயிரிழப்பு என்கிறது புள்ளிவிவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் வீதி விபத்துக்களில் சிக்கி ஆயிரத்து 785 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் சிகிச்சை பயனளிக்காது 37 பேர் உயிரிழந்துள்ளனர். மாகாண வைத்தியசாலைகளில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலேயே சிகிச்சைக்காக அதிகமானோர் அனுமதிக்கப்பட்டிருந்தமை யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிமனை அறிக்கை ஊடாகத் தெரியவந்துள்ளது.

வீதி விபத்துக்களில் சிக்கி யாழ். போதனா வைத்தியசாலையில் ஆயிரத்து 90 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 35 பேரும் ஏனைய வைத்தியசாலைகளைச் சேர்ந்த 2 பேருமாக 37 பேர் சிகிச்சை பயனளிக்காது மரணமாகினர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 214 பேரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 110 பேரும் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் சிகிச்சை பயனளிக்காது ஒருவர் உயிரிழந்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 89 பேரும், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 80 பேரும், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் 45 பேரும், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் 35 பேரும், சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 30 பேரும், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் 28 பேரும் இவ்வாறு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டனர்.

காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் 21 பேரும், வேலணை பிரதேச வைத்தியசாலையில் 17 பேரும், அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில் 16 பேரும், நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் 8 பேரும், வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் ஒருவரும், நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் ஒருவரும் இவ்வாறு வீதி விபத்துச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்று புள்ளி விவரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மளங்காடு பகுதியில்

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

## வினோ எம்.பி. அவசர வேண்டுகோள்

மன்னார், ஜூலை 9

மன்னார் மளங்காடு பகுதியில் மீள்குடியமர்ந்திருக்கும் முள்ளிக்குளம் மக்களுக்கான அடிப்படை வசதிகள் துரித கதியில் செய்து கொடுக்கப்படவேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்திருக்கின்றார்.

2007ஆம் ஆண்டு முசலிப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் காரணமாக அந்தப் பகுதியில் இருந்து பொதுமக்கள் வெளியேறியிருந்தனர்.

இந்த நிலையில் நீண்ட நாள்களின் பின்னர் முள்ளிக்குளம் மக்கள் தமது பூர்வீக கிராமமான முள்ளிக்குளத்துக்கு அருகில் உள்ள மளங்காடு எனப்படும் பெரிய குளம் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

> பெண்களைப் பொறுத்தமட்டில் அசௌகரியம் நிறைந்த ஒரு மீள்குடியமர்வாகவே பார்க்கப்படுகிறது.

ஆயினும் அங்கு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்த நிலையில் அவர்களது அன்றாட வாழ்வியல் செயற்பாடு காடுகளுக்குள்ளேயே இடம்பெற்று வருகின்றது.

அரச தரப்பால் இப்போதுதான் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுத் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முள்ளிக்குளம் மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாகும் போது எவ்வாறு அங்கிருந்து வெளியேறினார்களோ, அதேபோன்றுதான் தற்போதைய மீள்குடியமர்வையும் பார்க்க வேண்டியுள்ளது.


இந்த நிலையில் பெண்களைப் பொறுத்தமட்டில் அசௌகரியம் நிறைந்த ஒரு மீள்குடியமர்வாகவே இது பார்க்கப்படுகின்றது.

சுகாதார மற்றும் வைத்திய வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் முகம் கொடுத்திருக்கும் இந்தக் குடியமர்வு பலத்த சவாலாகவே அந்த மக்களுக்கு உள்ளது.

எனவே அரசும் அரசு சாரா அமைப்புக்களும் இந்த மக்களது நலனில் கரிசனை கொண்டு அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுக்க முன்வர வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, இந்த மக்களை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப்பு, நாடாளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன, ஸ்ரீரங்கா, மன்னார் குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை ஆகியோர் ஒன்றாகச் சென்று சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடியதாகத் தெரிய வருகின்றது. (க-12)

## மாம்பழமாம் மாம்பழம் மல்கோவா மாம்பழமா...?



நெளுக்குளம், ஜூலை 9

வவுனியா விவசாயத் திணைக்களத்தால் புதிய வகை மாம்பழங்களை உற்பத்தி செய்யும் முயற்சிகள் வெற்றியளித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மாம்பழங்களைக் கொண்டிருக்கும் மா மரங்கள் வருடம் முழுவதும் காய்க்கக் கூடியன. இவற்றிலிருந்து மெல்லிய விதையை உடையதும், தசைப்பிடிப்பைக் கொண்டதுமான 500 கிராம் நிறையையுடைய மாம்பழங்களைப் பெற முடியும்.

இத்தகைய மா மரக் கன்றுகள் அண்மையில் அநுராதபுரம், கெக்கிராவ ஆகிய பகுதிகளிலிருந்து வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

அத்துடன் சுமார் 261 மா மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதன் பயனை அறிந்த வவுனியாக் கிராம விவசாயிகள் இத்தகைய மாமரக் கன்றுகளை வாங்குவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். (க-402)


## வட்டக்கச்சி ம.வி. மாணவி முதலிடம்

வட்டக்கச்சி, ஜூலை 9

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான "உங்களுக்குத் தெரியுமா?" போட்டிப் பரீட்சையில் வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவிகள் இருவர் இடம்பிடித்து மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

முதலாம் இடத்தை காசிலிங்கம் தனுஷாவும், மூன்றாம் இடத்தை குமாரதாசன் விதுசாவும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து ஏழு மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-க)



அண்மையில் இராணுவத்தால் வலயக் கல்வி அலுவலகத்தினரிடம் கையளிக்கப்பட்ட பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட ஓலை வேலியுடன் காட்சியளிக்கின்றது. (க-18)

## நெடுங்கேணியில் 200 வீடுகள்

வவுனியா, ஜூலை 9

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் 200 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு பல்வேறு நிறுவனங்கள் நிரந்தர வீட்டுத் திட்டங்களை வழங்கி வருகின்றன.

அந்த வகையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இந்தப் பிரதேசத்தில் 200 வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்து உள்ளது. கட்டுமானப் பணிகளையும் ஆரம்பித்துள்ளது.

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சின்ன அடம்பன் கிராமத்தில் 134 வீடுகளையும், மாமடுப் பகுதியில் 35 வீடுகளையும் நெடுங்கேணியில் பரந்தன் பகுதியில் 31 வீடுகளையும் அமைக்கும் பணிகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதனால் நிரந்தர வீடுகள் கிடைக்காது தற்காலிக வீடுகளில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வாழ்ந்து வரும் மக்களில் ஒரு பகுதியினர் நன்மை பெறுவரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

## தகவல் தொழில்நுட்ப கண்காட்சி வவுனியாவில்

வவுனியா, ஜூலை 9

கிராமப் புறங்களில் தகவல் தொழில் நுட்பத்தைப் பரப்புதல் என்னும் தொனிப் பொருளில் வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் தகவல் தொழில் நுட்பக் கண்காட்சி ஒன்று இடம் பெற்றுள்ளது.

வித்தியாலய அதிபர் சு.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தக் கண்காட்சியை வவுனியா தெற்குக் கல்வி வலயத் தகவல் தொழில்நுட்பப் பாட ஆசிரிய ஆலோசகர் எஸ். தமிழழகன் திறந்து வைத்தார்.

இதில் சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மேம்பாட்டு வேலைத் திட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினர் திருமதி விஜயகாந்தன் கலந்து கொண்டார். வித்தியாலயத் தகவல் தொழில் நுட்பப் பாட ஆசிரியர் செ. நிர்மலனின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் தரம் 10 முதல் 12 வரையான மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

> தம்மிடம் இருந்த வளங்களைப் பயன்படுத்தி இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் காணப்படும் இந்தப் பாடசாலைச் சமூகம் தம்மிடம் இருந்த வளங்களைப் பயன்படுத்தி இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது. இதனைப் பலரும் பார்த்துப் பயன்பெற்றனர். (க-400)

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி

முல்லைத்தீவு, ஜூலை 9

முல்லைத்தீவு வள்ளிபுனம் கிராமத்தில் பெண்கள் தலைமை தாங்கும் பதினொரு குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வரையான கடன்களை கிராம அபிவிருத்திச் சங்கம் சுழற்சி முறையில் வழங்கியுள்ளது .

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் கிராமத்தின் அபிவிருத்திக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தால் சுழற்சிமுறை நிதியாக வழங்கப்பட்ட ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபா நிதியையே இந்தக் கிராம அபிவிருத்திச் சங்கம் வழங்கியுள்ளது.

தையற் பயிற்சிகளைப் பெற்றிருந்த இவர்கள் தையல் இயந்திரங்களைப் பெற்றுத் தொழில் செய்யக் கூடிய விதத்தில் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் இலகு கடன் அடிப்படையில் இது வழங்கப்பட்டுள்ளது. (ம-6)

## அக்கராயன் –துணுக்காய் பஸ்சேவை இடைநிறுத்தம்

### பயணிகள் பெரும் நெருக்கடியில்

அக்கராயன், ஜூலை 9

அக்கராயனில் இருந்து துணுக்காய் வரை பஸ்சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம் தென்னியங்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு, ஆலங்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தப் பாதையில் ஒரேயொரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வந்தது. இந்தப் பணியும் இடை நிறுத்தப்பட்டுள்ளமையால் அக்கராயன் மருத்துவமனை, அக்கராயன் மகாவித்தியாலயம் போன்றவற்றுக்குச் சென்று வருவோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ம-18)

## விளையாட்டு மைதானம் திறந்து வைப்பு

வவுனியா, ஜூலை 9

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்தில் பல்வேறு நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது விளையாட்டு மைதானம் வவுனியா அரச அதிபரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணிப் பிரதேசத்தில் சுமார் எட்டு ஏக்கர் காணி விளையாட்டு மைதானத்துக்கெனத் தெரிவு செய்யப்பட்டு இரண்டு மாத காலத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

சோஆ, சேவாலங்கா, ஹன்டிக்கப், சினோகைற்றோ ஆகிய நிறுவனங்களின் நிதி உதவியுடன் சுமார் பத்து மில்லியன் ரூபா செலவில் இந்த விளையாட்டு மைதானம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதனைக் கடந்த 5 ஆம் திகதி நெடுங்கேணிக்கு வருகை தந்த மாவட்ட அரச அதிபர் திறந்து வைத்ததுடன் பிரதேச செயலர் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான போட்டிகளையும் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தாவிலில் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம்

பளை, ஜூலை 9
பளைப் பிரதேசத்தில் இத்தாவில் வேம்பொடுகேணிப் பிரிவுகளில் அண்மையில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான நிவாரண உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இத்தாவில் சந்தியில் நாளைமறுதினம் புதன்கிழமை நிவாரணம் உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்று பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மார்க்கண்டு அறிவித்துள்ளார். (ம-9)

## விவசாய இரசாயனப் பசளை விற்பனையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 9
இலங்கை பீடைநாசினி சட்டத்துக்கு அமைவாக யாழ். குடாநாட்டில் விவசாய இரசாயனப் பசளை விற்பனையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் உள்ள சகல விவசாய இரசாயன சில்லறை விற்பனையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் கேட்டுள்ளார். (ம-17)

## கடந்த 6 மாத காலத்தில் காச நோயால் 151 பேர் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் கடந்த ஆறு மாத காலப் பகுதியில் 151 பேர் காச நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி எஸ். யமுனாநந்தா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய சூழ்நிலையில் காசநோயின் தாக்கம் திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தக் காச நோயை முழுமையாக கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 2011 ஆம் ஆண்டில் 300 இக்கும் மேற்பட்டோர் காசநோயால் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த ஆண்டின் முதல் ஆறுமாத காலப் பகுதியில் மட்டும் 151 பேர் வரையில் காசநோய்க்கு இலக்காகி உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது அதிக எண்ணிக்கையான மக்கள் காசநோயின் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளதால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-17)

## முன்னுரிமை அடிப்படையில் வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் முன்னுரிமை அடிப்படையில் 50 கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேச சபை வீதிகள் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்து வழங்குமாறு உள்ளூர் ஆளுகை நிறுவனம் சகல பிரதேச சபைகள்- நகர சபைகளைக் கேட்டுள்ளது.

முதற்கட்டமாக சபைகளால் தெரிவு செய்யப்பட்டு புள்ளி ஒழுங்கு அடிப்படையில் முன்னுரிமைத் தெரிவில் உள்வாங்கப்பட்ட 50 கிலோமீற்றர் வீதிகளுக்கே இந்த மதிப்பீடு பெறப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உள்ளூர் ஆளுகை நிறுவனம் சகல சபைகளுக்கும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-41)



யாழ். பிரதான வீதியை அகலித்து 'காப்பெற்' வீதியாக அமைக்கும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ். சிறைச்சாலைப் பகுதியில் இருந்து கோயில் வீதிச் சந்திவரையான பகுதி முதற்கட்டமாக காப்பெற் இடுவதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-135)

### வேலணை வைத்தியசாலை மருத்துவ மாது மரணம் தொடர்பில்

# கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் அழைப்பாணை

யாழ்ப்பாணம், ஜூலை 9
வேலணை பிராந்திய வைத்தியசாலையில் 2010 ஆம் ஆண்டு கைதடியைச் சேர்ந்த குடும்பநல மருத்துவ மாது கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் சீருடையுடன் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கில் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியை நீதிமன்றில் ஆஜராகுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

சம்பவம் நடந்து நாளை இரண்டு வருடங்கள் நிறைவுறும் நிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை தொடர்பான அறிக்கை எதுவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாததனாலேயே மன்றில் ஆஜராக உத்தரவிட்டுள்ளது.

கைதடி தெற்கு கைதடியைச் சேர்ந்த செல்வி சரவணை தர்சிகா (வயது-27) என்ற குடும்பநல மருத்துவ மாதே சீருடையில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் 2010 ஜூலை 10 ஆம் திகதி அவர் தங்கும் அறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

யுவதியின் கைத்தொலைபேசி மற்றும் பிற தடயப் பொருள்களைக் கைப்பற்றிய பொலிஸார் அது தொடர்பான விசாரணையை அடுத்து ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவுக்கமைய வேலணை பிராந்திய வைத்தியசாலையின் அக்காலப் பொறுப்பதிகாரியாக இருந்த வைத்தியர் பிரியந்த சென விரத்னவைக் கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனால் அவர் சட்டத்தரணி மூலமாக நீதிமன்றில் சரணடைந்தார். அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கைதடியில் அடக்கம் செய்யும் தினத்தன்று ஏ-9 வீதியில் கைதடிச் சந்தியில் நீதி கேட்டு பெரும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றிருந்தது.

மருத்துவ மாதுக்கள் தொழிற்சங்கம், பொதுச் சுகாதார சேவைகள் சங்கம் என்பன திணைக்கள மட்ட விசாரணை நடத்த வேண்டும் என்று சுகாதாரப் பணிமனைக்கு மனுக் கையளித்திருந்தன. 2010 ஜூலை 13 ஆம் திகதியன்று சுகாதாரத் திணைக்களத்துக்கு முன்பாக அவர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்திய வண்ணம் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

சந்தேகநபரான வைத்தியரை பிணையில் விடும்படி யாழ். மேல் நீதிமன்றில் மனுச் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த அப்போதைய நீதிபதி எஸ்.பரமராஜா பிணையில் விடுவித்தார். இரத்தினபுரியைச் சேர்ந்த சந்தேக நபரின் தாயின் சகோதரிகள் பிணை எடுத்துச் சென்றனர்.

சடலத்தைத் தோண்டி எடுத்து கொழும்புக்கு அனுப்பிப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரியதை அடுத்து மன்று அதற்கு அனுமதித்தது. மருத்துவ மாது வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான வேளையில் சடலத்தில் சில உடற்பாகங்கள் காணாமல் போயிருந்தமை கொழும்பில் தெரியவந்தது.

அதை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் பணிபுரியும் 2 சிற்றூழியர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டதன்படி கொட்டடி மீன் சந்தைக்கு அருகிலுள்ள புதைகுழி ஒன்றிலிருந்து துணியில் கட்டப்பட்ட நிலையில் காணாமல் போயிருந்த உடல் உறுப்புக்கள் மீட்கப்பட்டன.

கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட தர்சிகாவின் சடலம் மீண்டும் 30.07.2012 அன்று கைதடிக்குக் கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. மீட்கப்பட்ட உடல் உறுப்புகள் 02.8.2012 அன்று கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பப்பட்டு அது தொடர்பான அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பிக்கும்படி அப்போதைய நீதிவான் இ.வசந்த சேனன் உத்தரவிட்டார்.

சம்பவம் நடைபெற்று 2 வருடங்களாகும் நிலையில் கடந்த வாரம் இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. தர்சிகாவின் குடும்பத்தினர் சார்பில் சட்டத்தரணிகள் பி.குகனேஸ்வரன், கே.சுகாஷ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

விசாரணையின் பின்னர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவு பிறப்பித்தார் நீதிவான் ஆர். எஸ்.மகேந்திரராஜா. (ஒ-4)



வன்னியில் இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்டு இடுப்புக்கு கீழே செயலிழந்த நிலையில் இருக்கும் கைதடி தெற்கைச் சேர்ந்த பொன்னுத்துரை சதீஸ் என்பவருக்கு அவரின் தொழில் வாய்ப்புக்காக சுவிஸில் வசிக்கும் கைதடி வாழ் உறவுகள் கணினி கொள்வனவுக்காக ஒரு லட்சம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ம-288)

## விழிப்புலனிழந்தோரை பஸ்ஸில் ஏற்றத் தயங்கும் சாரதிகள்

கைதடி, ஜூலை 9
கைதடி மத்திய மருந்தகத்துக்கு முன்னால் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நின்று பஸ்ஸில் பயணம் செய்யக் காத்திருக்கும் விழிப்புலனிழந்தோரை அரச மற்றும் தனியார் பஸ் சாரதிகள் பஸ்ஸில் ஏற்றாது செல்வதாக பலராலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள தொழில் பூங்காவில் தங்கியுள்ள விழிப்புலனிழந்தோர் காலை வேளைகளில் யாழ்ப்பாணம் செல்லும் போதும், நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்கும் விழிப்புலனிழந்தோர் பாடசாலை முடிந்து வீடு செல்லும் போதும் இந்த நிலை ஏற்படுவதாகவும் விழிப்புலனிழந்தோர்களின் கைகளில் உள்ள வெள்ளைப் பிரம்பைக் கண்டும் காணாதது போல் பஸ்ஸை வேகமாகச் செலுத்திச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விடயத்தில் பஸ் சாரதிகள் மனிதாபிமானத்தையும் கருணையையும் கருத்தில் கொண்டு இவர்களையும் பஸ்களில் ஏற்றிச் செல்ல வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (ம-288)

## பற்றைகளால் மூடப்படும் மிருசுவில் பொதுச்சந்தை

பளை, ஜூலை 9
பாவனையின்றியும் பராமரிப்பின்றியும் பற்றைகளால் மூடப்பட்டு மிருசுவில் பொதுச்சந்தையும் இறைச்சிக் கடையும் காணப்படுகின்றது.

அழிவடைந்து காணப்பட்ட பொதுச்சந்தையை சாவகச்சேரி பிரதேச சபையினர் மிருசுவில், உசன், விடத்தல்பளை, பழைய வாய்க்கால், படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், கெற்பேலி ஆகிய பகுதி மக்களின் நலன்கருதி கடந்த வருடம் புனரமைத்துள்ளனர்.

புனரமைக்கப்பட்டு பல மாதங்களாகியும் எந்தவொரு வியாபாரியும் இங்கு வந்து வியாபாரம் செய்வதில்லை. புனரமைக்கப்பட்ட இறைச்சிக் கடையும் எவரும் குத்தகைக்கு எடுக்காததால் மூடப்பட்டுள்ளது.

**புனரமைக்கப்பட்டு பல மாதங்களாகியும் எந்தவொரு வியாபாரியும் இங்கு வந்து வியாபாரம் செய்வதில்லை. புனரமைக்கப்பட்ட இறைச்சிக் கடையும் எவரும் குத்தகைக்கு எடுக்காததால் மூடப்பட்டுள்ளது**

இதனால் பொதுமக்கள் எவரும் சந்தை வளாகத்தினுள் செல்லாததால் எதுவித பராமரிப்பும் இல்லாத நிலையில் பற்றைகள் வளர்ந்து வருகின்றன.

மக்களின் பயன்பாட்டுக்கென புனரமைக்கப்பட்ட மிருசுவில் பொதுச்சந்தையைப் பயன்படுத்தாது இருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

உசன் சந்தியில் ஏ-9 வீதியுடன் இணைந்த நிலையில் காணப்படும் பொதுச் சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரணாப்புக்கு எதிராக காந்திய இயக்கமும் வழக்கு



இந்திய ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான தமிழின அழிப்பில் சிங்களத்துடன் அனைத்து வகையிலும் ஒருங்கிணைந்து இந்தியா குறிப்பாக சோனியாவின் சார்பாக செயற்பட்ட பிரணாப் முகர்ஜி மீது காந் திய மக்கள் இயக்கத்தின் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழருவி மணியனைத் தலைவராகக் கொண்டு செயற்பட்டு வரும் காந்திய மக்கள் இயக்கத்தின் தலைமை நிலையச் செயலாளர் இனியன் இந்த வழக்கை பதிவு செய்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய ஒருவர் மிக உயர்ந்த ஒரு பதவிக்கு போட்டியிடுவதை அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தி இந்த வழக்கைப் பதிவு செய்துள்ளனர்.

ஏற்கனவே எதிரணி வேட்பாளரான சங்மாவும் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# தமிழருக்கு மீண்டும் கருணாநிதி துரோகம்


## சாடுகிறார் நாஞ்சில் சம்பத்

சென்னை, ஜூலை 9

தமிழர்களுக்கு மீண்டும் துரோகம் இழைத்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி என்று ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் சாடியுள்ளார்.

திருப்புவனத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத் தில் அவர் கலந்துகொண்டு மேலும் தெரிவித்ததாவது:-

ஆரியத்தைத் தாக்கிப் பேசும் கருணாநிதி, ஜனாதிபதித் தேர் தலில் நியாயமாக ஆதரிக்க வேண்டியவர், பழங்குடி இனத்தைச் சேர்ந்த சங்மாவைத்தான். பிரணாப்பை ஆதரிப்பதால் மீண்டும் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்துள்ளார்.



ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசுக்கு மத்திய அரசு உதவி செய்தபோது, அதில் அங்கம் வகித்தவர் கருணாநிதி. இலங்கை அரசுக்கு நிதி உதவி செய்தவர் பிரணாப் முகர்ஜி.

தற்போது ஜனாதிபதி வேட்பாளர் பிரணாப் முகர்ஜியை, கருணாநிதி ஆதரிப்பதால், தமிழர்களுக்கு துரோகம் இழைத்துள்ளார். ஈழம் மலர 'டெசோ' மாநாடு கூட்டி நாடகம் போடுகிறார். மத்தியில் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தவர் வைகோ. ஆனால் கருணாநிதி செம்மொழி அந்தஸ்துப் பெற்றுத் தந்ததாக விளம்பரம் தேடிக் கொள்கிறார் - என்றார். (வ)

## காந்தியின் அரிய ஆவணங்களை விலைக்கு வாங்குகிறது இந்தியா





தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி வாழ்ந்தபோது எழுதிய அரிய கடிதங்கள், அவருடைய ஆவணங்கள், புகைப்படங்களை விலைக்கு வாங்க ஏல நிறுவனத்துடன் இந்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதனால் நாளை நடக்க இருந்த ஏலம் ரத்து செய்யப்பட்டு விட்டது. தென்னாபிரிக்காவில் கடந்த 1904 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காந்தி பணி செய்தபோது, அவருடைய நெருங்கிய நண்பராக ஹெர்மான் கலன்பேக் இருந்தார்.

அப்போது காந்தி நிறைய கடிதங்கள் எழுதியுள்ளார். ஆயிரத்துக்கும் அதிகமான இந்த அரிய கடிதங்கள், ஆவணங்கள், புகைப்படங்களை சர்வதேச ஏல நிறுவனமான சோத்பி நாளை செவ்வாய்க்கிழமை ஏலம் விடுவதாக அறிவித்திருந்தது.

இதையடுத்து, ஏல நிறுவனத்துடன் இந்திய கலாசாரத்துறை அமைச்சக அதிகாரிகள் பேச்சு நடத்தினர். காந்தியின் அரிய கடிதங்கள், படங்களை விலைக்கு வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்திய அதிகாரிகள் கையெழுத் திட்டனர்.

இதனால் நாளை நடக்க இருந்த ஏல நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதாக சோத்பி நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிவித்தது. காந்தியின் அரிய கடிதங்கள் 5 லட்சம் பவுண்ட் முதல் 7 லட்சம் பவுண்ட் வரை விலை போகும் என்று ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால், இந்திய அரசு எவ்வளவு பணம் தரப்போகிறது என்ற விவரம் வெளியிடப்படவில்லை.(வ)

## 'ஜெ'யின் சொத்துக் குவிப்பு வழக்கு ஒத்திவைப்பு

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு தொடர்பான வழக்கை நாளை செவ்வாய்க்கிழமைக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் தள்ளிவைத்தது.

ஜெயலலிதாவின் தரப்பு வாதம் முடிந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் அரசு தரப்பு விவாதம் நடைபெறுவதாக இருந்தது.

அரச சட்டத்தரணி உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்துக்கு வரவில்லை, இதனையடுத்து நீதிபதி ஒத்திவைத்தார்.(வ)



திரிபுரா மாநிலம் அகர்தலாவில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பிரணாப் முகர்ஜிக்கு மரியாதை செலுத்திய அம்மாநில உயர்கல்வி அமைச்சர் அனில் சர்கார் அருகில் முதல்வர் மானிக் சர்கார்.

## 65 வருடங்களின் பின்னர் பஸ்ஸைக் கண்ட மக்கள்

நெல்லை, ஜூலை 9

இந்தியா சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் கடந்தும் பஸ் வசதி இல்லாமல் இருந்த கிராமத்துக்கு முதன் முதலாக அரச பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் மேல நீலித நல்லூர் ஒன்றியம் வன்னி கோனேந்தல் பஞ்சாயத்தைச் சேர்ந்தது அடைக்கலாபுரம் கிராமம். சங்கரன் கோயில்- நெல்லை பிரதான வீதியில் இருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்தக் கிராமத்துக்கு இந்தியா சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் கடந்தும் பஸ் வசதி இல்லாமல் இருந்தது. தேர்தலுக்கு தேர்தல் கோரிக்கை வைத்தும் யாரும் செவிசாய்க்கவில்லை.

இந்தநிலையில் இந்தப் பகுதியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள வந்த அமைச்சர் செந்தூர் பாண்டியனிடம் இந்தப் பகுதி மக்கள் சார்பில் யூனியன் தலைவர் முருகையா பாண்டியன் பஸ் வசதி கேட்டு மனு கொடுத்தார். அந்த மனுவை பரிசீலித்த அமைச்சர் உடனடியாக சங்கரன் கோயிலில் இருந்து பல்வேறு கிராமங்கள் வழியாக தேவர்குளம் செல்லும் அரசு பஸ்ஸை அடைக்கலாபுரம் வழியாக இயக்க நடவடிக்கை எடுத்தார்.

இதற்கான விழாவுக்கு தலைமை வகித்த யூனியன் செயலாளர் முருகையா பாண்டியன் கொடியசைத்து பஸ்ஸை இயக்கி வைத்தார். (வ)

## நாட்டில் முதுகெலும்பில்லாத அரசியல்வாதிகள் அதிகரிப்பு

கொல்கத்தா, ஜூலை 9

நாட்டில் முதுகெலும்பு இல்லாத அரசியல்வாதிகள் அதிகரித்து வருகின்றனர் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தனது முகத்திரை (பேஸ்புக்) பக்கத்தில் எழுதியிருக்கிறார்.

ஆயினும் அவர் எந்த அரசியல் தலைவரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சி உறவில் ஏற்பட்டிருக்கும் கசப்பு இதற்கு அடிப்படையாகக் கருதப்படுகிறது. ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பில் எழுந்த கருத்து வேறுபாடும் அண்மையில் மேற்கு வங்க சட்ட ஒழுங்கு நிலையை மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்ததும் மம்தா வுக்கு கோபமூட்டுவதாக அமைந் துள்ளது.

அவரது பேஸ்புக்கில் தெரிவித் ததாவது:-

பண்டைக்காலம் முதல் இருந்து வரும் நற்பண்புகள், வீரம், சாதாரண மக்களுடன் தொடர்பு இவையெல்லாம் இந்தக் காலத்தில் காணக் கிடைப்பதில்லை. அரசியல் தலைவர்கள் என்று அறியப்



படுபவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்களாக இருப்பது அதிகரித்து வருவதில் எனக்கு வியப்பில்லை. அவர்கள் சாதாரண மக்களுக்காகவும் உண்மைக்காகவும் போராடத் துணிவில்லாமல் கோழைகளாக உள்ளனர். இவை குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

மக்களின் தேவைகளை முன்னிறுத்துவதுதான் தலைவர்களின் கடமை. இளைய தலைமுறையினர் தற்காலத் தலைவர்கள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். அச்சமற்ற மனதுடன் இளைஞர்கள் சாதாரண மக்களின் பிரச்சினைகளுக்காகப் போராடும் வகையில் நம்மைப் பொதுவாழ்வில் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் - என்று அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (வ)

## அன்புமணி ராமதாஸுக்கு பிடியாணை

பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த இந்தியாவின் முன்னாள் சுகாதார அமைச்சரான பா.ம.க.வின் டாக்டர் அன்புமணி ராமதாஸு எதிராக பிணையில் வெளிவரக்கூடிய பிடியாணை ஒன்றை டில்லி நீதிமன்றம் ஒன்று பிறப்பித்துள்ளது.

மருத்துவக் கல்லூரி ஒன்று தொடர்ந்து மாணவர் சேர்க்கையில் ஈடுபட முறை தவறி அனுமதி வழங்கியது தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதற்காக அன்புமணிக்கு எதிராக டில்லியில் உள்ள சி.பி.ஐ. விசேட நீதிமன்றம் இந்தப் பிடியாணையை வழங்கியது.

நீதிமன்றத்தின் அழைப்பாணையை அன்புமணியிடம் வழங்க சென்னை சென்றபோது அவர் மருத்துவ சிகிச்சைக்காக பெங்களூர் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பத்தாயிரம் ரூபா அபராதத் துடன் கூடிய இந்தப் பிடியாணையை நீதிபதி பிறப்பித்தார். (வ)

## ஜம்முவில் நிலச்சரிவு; 400 பேர் சிக்கினர்

ஜம்மு, ஜூலை 9

ஜம்மு காஷ்மீரில் லே பகுதியில் ஏற்பட்ட திடீர் நிலச்சரிவில் சிக்கி, கிராமத்தினர்,சுற்றுலாப் பயணிகள் என 400 இற்கும் மேற்பட்டோர் சிக்கினர். அவர்களை மீட்க இராணுவத்தினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் லே மாவட்டத்தின் துர்பக் நகரில் இருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. சாங்லா கணவாய் மலைப் பகுதி. இது கடல் மட்டத்திலிருந்து 17,500 அடிஉயரம் கொண்டது. இங்கு நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் வீதிப்போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு வீதி சேதமடைந்துள்ளது. இந்தப்பகுதியில் வசிக்கும் கிராமத்தினர், வாகனங்களில் சென்ற சுற்றுலாப் பயணிகள் என 400 பேர் சிக்கிக் கொண்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவ இடத்துக்கு இராணுவ மீட்புப்படையினர் விரைந்து சென்றுள்ளனர். நிலச் சரிவில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (வ)




## கர்நாடக முதல்வர் ராஜினாமா; அவரது இடத்துக்கு ஜெகதீஷ்

டில்லி, ஜூலை 9

கர்நாடக மாநிலத்தின் முதல்வர் பதவியில் இருந்து சதானந்த கவுடா ராஜினாமா செய்து விட்ட நிலையில் புதிய முதல்வராக ஜெகதீஷ் ஷெட்டரை நியமிக்க முடிவு செய்திருப்பதாக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் நிதின் கத்காரி அறிவித்துள்ளார்.



சதானந்த கவுடா ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்த பின்னர் டில்லியில் செய்தியாளர்களிடம் நிதின் கத்காரி தெரிவித்ததாவது:-

கர்நாடக மாநிலத்தில் முதல்வர் பதவியில் இருந்து சதானந்த கவுடா ராஜினாமாச் செய்துள்ளார். அவரது ராஜினாமாவை பாரதீய ஜனதாக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது. கர்நாடக மாநிலத்தின் புதிய முதல்வராக ஜெகதீஷ் ஷெட்டரை நியமிக்க கட்சி முடிவு செய்துள்ளது. கர்நாடகத்தில் சிறப்பான ஆட்சி நடத்தி கட்சியின் பெயரைக் காப்பாற்றியவர் சதானந்தா- என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைமழை

## ரஷ்யாவில் 144 பேர்சாவு

மொஸ்கோ, ஜூலை 9
ரஷ்யாவில் மோசமான மழை வெள்ளத்தில் சிக்கி 144 பேர் உயிரிழந்துள்ளனர். 13,000 பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். ரஷ்யாவின் தெற்கு மாநிலமான கிரஸ்னோடரில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் கடந்த சில நாள்களாக மோசமான மழை பெய்து வருகிறது.

விடாது பெய்யும் அடைமழையால் ஜெலன்டிசிக் உட்பட பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. நகரங்களில் ஆறு போல வெள்ளம் ஓடுகிறது. வெள்ளத்தில் சிக்கி நேற்று முன்தினம் வரை 144 பேர் உயிரிழந்துள்ளனர். வீடுகளை இழந்துத்தவித்த 13,000 பேர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டனர். ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகள் ஆயிரக்கணக்கில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தன. மழை விடாமல் பெய்து வருவதால் மீட்புப் பணிகளை மேற்கொள்ள முடியாமல் மீட்புப் படையினர் திணறி வருகின்றனர்.



விடாது பெய்யும் அடை மழையால் ஜெலன்டிசிக் உட்பட பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. நகரங்களில் ஆறு போல வெள்ளம் ஓடுகிறது.

## பெனா நீட்டோ ஜனாதிபதியானார்



மெக்சிகோ சிட்டி, ஜூலை 9
மெக்சிகோ ஜனாதிபதித் தேர்தலில் என்ரிக் பெனா நீட்டோ 38 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.மெக்சிகோ ஜனாதிபதி பெலிபி கால்ட்ரனின் பதவிக்காலம் முடிவடைந்ததால் கடந்த வாரம், ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. பி.ஆர்.ஐ. கட்சி சார்பில் மெக்சிகோ மாகாண முன்னாள் கவர்னர் என்ரிக் பெனா நீட்டோ போட்டியிட்டார். பி.ஆர்.டி. கட்சி சார்பில் மெக்சிக்கோ நகர முன்னாள் மேயர் ஆன்ட்ரஸ் மானுவலும் ஆளும் தேசிய செயல் கட்சி சார்பில் வர்த்தகரான ஜோஸ்பனாவும் போட்டியிட்டனர். ஜனாதிபதித் தேர்தலில் நீட்டோவுக்கு அதிக வாக்குகள் கிடைத்ததால் புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார்.

ஆனால், இந்தத் தேர்தலில் மோசடி செய்தே நீட்டோ வெற்றி பெற்று விட்டார் எனவே மீண்டும் வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என பி.ஆர்.டி. கட்சியின் ஆன்ட்ரஸ் மானுவல் தனது ஆதரவாளர்களைத் திரட்டி போராட்டம் நடத்தி வந்தார். இதையடுத்து சந்தேகத்திற்குரிய பகுதிகளில் மீண்டும் வாக்குகள் எண்ணப்பட்டன. முறைகேடு ஏதும் நடக்கவில்லை என கூறியுள்ள தன்னாட்சி பெற்ற தேர்தல் ஆணையம் நீட்டோ 38.21 சதவீத வாக்குகளும் ஆன்ட்ரஸ் மானுவல் 31.59 சதவீத வாக்குகளும் தேசிய செயல் கட்சி 25.41 சதவீத வாக்குகளும் பெற்றுள்ளனர் என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

## லண்டனில் இளம் தீவிரவாதி கைது

லண்டனில் தீவிரவாதிகளுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட இளம் பெண் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

உளவுத்துறை அளித்த தகவலின்படி லண்டனின் ஹேக்னியில் இருந்த அவர் கைது செய்யப்பட்டார் என ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் இவரது பெயரை வெளியிட பொலிஸார் மறுத்து விட்டனர். கடந்த வியாழக்கிழமை தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்பட்ட ஒரு பெண் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

லண்டனில் எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 13ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன. இதையடுத்தே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் இந்தக் கைது நடவடிக்கைக்கும் ஒலிம்பிக் போட்டிக்கும் தொடர்பில்லை என்று லண்டன் பெருநகரப் பொலிஸார் தெளிவுபடுத்தியுள்ளனர்.

## நேட்டோ வாகனங்களை கண்காணிக்கிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஜூலை 9
ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகளுக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களைக் கண்காணிக்கப் பாகிஸ்தானிய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையில் நேட்டோ படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான எரிபொருள்கள் லொறிகள் மூலம், பாகிஸ்தான் வழியாகக் கொண்டு செல்லப்பட்டு வந்தன. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி நேட்டோ படைகள் தவறுதலாக வான்வழித் தாக்குதல் நடத்தியதில் 24 பாகிஸ்தானிய ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானுக்கு பொருள்களைக் கொண்டுசெல்லும் பாதையை, பாகிஸ்தான் மூடி விட்டது.

பாகிஸ்தான் ராணுவத்தினர் கொல்லப்பட்ட விஷயத்தில் அமெரிக்கா வருத்தம் தெரிவித்ததே தவிர மன்னிப்பு கேட்கவில்லை. இதனால் இந்தப் பாதையைத் திறக்க, பாகிஸ்தான் முன்வரவில்லை.

இந்த நிலையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ரபானிகாரிடம் கடந்த 3ஆம் திகதி தொலைபேசி மூலம் 24 ராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு மன்னிப்பு கேட்டார். இது போன்ற சம்பவம் மீண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் செல்லும் பாதையை மீண்டும் திறக்க பாகிஸ்தான் ஒப்புக் கொண்டது. நேட்டோ படைகளுக்காக எரிபொருள் உள்ளிட்டவற்றை எடுத்துச் செல்லும் வாகனப் போக்குவரத்து நான்கு நாள்களுக்கு முன் தொடங்கியது. பலுசிஸ்தானில் உள்ள சமான் எல்லை வழியாகவும் மலைப்பாங்கான கைபர் பகுதியின் டோர்காம் எல்லை வழியாகவும் வாகனங்கள் செல்கின்றன. பாகிஸ்தானிய ராணுவத்தினரைக் கொன்று குவித்த நேட்டோ படைகளுக்கு தேவையான பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு செல்லும் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என தலிபான்கள் எச்சரித்துள்ளனர். நேட்டோ படைகளுக்கான பொருள்களை ஏற்றிச்செல்ல பாகிஸ்தான் வழி பயன்படுத்தப்பட்டாலும் ஆயுதங்கள் எதையும் இந்த வழியாக எடுத்து செல்ல அனுமதிக்க மாட்டோம் என பாகிஸ்தான் உறுதி அளித்துள்ளது.

நேட்டோ வாகனங்களில் ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுகின்றனவா? என்பதைப் பரிசோதிக்கும்படி சுங்க அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. எனவே ஒவ்வொரு வாகனத்தையும் பரிசோதித்து வருகிறோம் என பாகிஸ்தான் சுங்கத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தீவுகளை விலைக்கு வாங்க முடிவு

டோக்கியோ, ஜூலை 9
கிழக்குச் சீனக் கடற்பகுதியில் உள்ள 3 சிறிய தீவுகளை விலை கொடுத்து வாங்க ஜப்பான் முடிவு செய்துள்ளது.


கிழக்குச் சீனக் கடற்பகுதியில் பல்வேறு தீவுகள் உள்ளன. இவை யாருக்குச் சொந்தம் என்பதில் சீனா, தாய்வான், ஜப்பான் ஆகிய நாடுகளிடையே பிரச்சினை உள்ளது. ஜப்பானால் சென்காகு என்று அழைக்கப்படும் இந்தத்தீவுப் பகுதி சீனாவால் தியாயூ என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் இந்தத் தீவுகள் தொடர்பாக ஜப்பான் பிரதமர் யோஷிகிகோ நோடா கூறியுள்ளதாவது:-

சென்காகு தீவுகள் ஜப்பானுக்குச் சொந்தமானவை தான். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இதனை யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது.

அதே நேரத்தில் அந்தப் பகுதியில் உள்ள 3 தீவுகளை விலை கொடுத்து வாங்கி அங்கு தங்கள் ராணுவத்தை நிறுத்தி தீவு மீதான உரிமையை நிலை நாட்ட ஜப்பான் முடிவு செய்துள்ளது. அந்தத் தீவுகளுக்கு ஜப்பானைச் சேர்ந்த சிலரே உரிமையாளர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்குச் சீனக் கடற் பகுதியில் உள்ள தீவுகள் தாது வளம் மிக்கவை. எனவேதான் சீனாவும் தாய்வானும் அந்தப் பகுதித் தீவுகளுக்கு உரிமை கொண்டாடி வருகின்றன. கடந்த வாரத்தில் இந்தப் பகுதியில் ரோந்து சென்ற ஜப்பான் கடற்படையினருக்கும், தாய்வான் படையினருக்கும் இடையே சிறிய மோதல் ஏற்பட்டது.



ஜப்பானிய சிறுவர்கள் சிறு வயதில் இருந்தே யோகா பயிற்சியில் வல்லவர்களாக வளர்க்கப் படுகின்றனர். டோக்கியோவில் உள்ள ஒரு யோகா மையத்தில் பயிற்சியில் ஈடுபடும் சிறார்கள்.

## 75 தாய்லாந்துப் பிரஜைகள் தடுத்து வைப்பு

மியன்மாருக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்த தாய்லாந்துப் பிரஜைகள் 75 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் எல்லைகள் தொடர்பான தெளிவின்மையால் அவர்கள் பிரவேசித்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இந்த விவகாரம் குறித்து மியன்மார் அரசுடன் கலந்துரையாடவுள்ளதாக தாய்லாந்தின் துணைப் பிரதமர் தெரிவித்துள்ளார். ஆனால் சுமார் 50 பேர்மாத்திரமே இவ்வாறுதடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தாய்லாந்து வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை எல்லைப் பகுதியில் தாய்லாந்து இராணுவத்தினரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போராடி உயிரிழந்தோர் குறித்து விசாரிக்க உத்தரவு

### எகிப்தின் ஜனாதிபதி முர்சி அறிவிப்பு

கெய்ரோ, ஜூலை 9
எகிப்தில் முபாரக் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட போராட்டக்காரர்கள் குறித்த விசாரணைக்கு, அந்த நாட்டு ஜனாதிபதி முர்சி உத்தரவிட்டுள்ளார்.

எகிப்து ஜனாதிபதியாக 30 ஆண்டுகளாகக் கோலோச்சி வந்த முபாரக் பொதுமக்களின் கடும் கண்டனம் மற்றும் தொடர் போராட்டம் காரணமாக பதவி விலக நேரிட்டது. அவர் மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு அதிகபட்ச தண்டனையான மரண தண்டனை விதிக்க வேண்டும் என பொதுமக்கள், நீதித் துறையைக் கோரிவருகின்றனர். இதற்கிடையே அங்கு நடந்த ஜனநாயக முறைப்படியான தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி அமோக வெற்றி [illegible] ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ஜனாதிபதியாக முகமது முர்சி பதவி ஏற்றுள்ளார். முபாரக் ஆட்சியை எதிர்த்த ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

முபாரக் ஆட்சியை எதிர்த்த, ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இது குறித்து, இடைக்கால ராணுவ ஆட்சியாளர்கள் விசாரணை நடத்தி வந்தனர். இருப்பினும் தற்போது பதவி ஏற்றுள்ள முர்சி தலைமையிலான அரசு 16 பேர் கொண்ட விசாரணைக்குழுவை அமைத்துள்ளது. நீதிபதிகள் பொலிஸ் அதிகாரிகள் ராணுவத்தினர் போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் உட்பட 16 பேர் இந்த விசாரணைக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். போராட்டத்தில் உயிரிழந்தவர்கள் குறித்த விவரங்களை இரண்டு மாத காலத்துக்குள் இந்த விசாரணை குழு அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்குத் திமோரில் தேர்தல்

கிழக்குத் திமோரின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்த நாட்டு மக்கள் வாக்களித்து வருகின்றனர்.

இந்தத் தேர்தலில் 20இற்கும் அதிகமான கட்சிகள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் சுமுகமாக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் நிலையில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்தே கிழக்குத் திமோரில் உள்ள ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படையினர் நாட்டை விட்டு வெளியேறுவதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படவுள்ளது.

எனினும் ஸ்திரமான அரசு ஒன்று அமையும் பட்சத்தில் தாம் நாட்டை விட்டு வெளியேறுவதாக ஐ.நாவின் அமைதி காக்கும் படையினர் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 ஷியாவினர் சுட்டுக்கொலை

## பாகிஸ்தானில் சம்பவம்



பாகிஸ்தானில் பஸ் பயணிகள் மீது மர்மக் கும்பல் ஒன்று, சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 18 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். பாகிஸ்தானில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலர் சட்டவிரோதமாக குடியேற முயற்சித்து வருகின்றனர்.

அவர்கள் ஈரான், துருக்கி வழியாக ஐரோப்பிய நாடுகள் செல்ல முகவர்கள் உதவி செய்கின்றனர். அதுபோல் பாகிஸ்தானின் பஞ்சாப் மற்றும் கைபர் பக்துன்கவா மாகாணங்களைச் சேர்ந்த ஏராளமானோர் நேற்று முன் தினம் இரவு பஸ்ஸில் ஈரான் எல்லைக்குச் சென்று கொண்டிருந்தனர்.

பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள டர்பத் என்ற பகுதி வழியாகச் சென்ற போது, மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம கும்பல் பஸ்ஸை வழிமறித்துச் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 18 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் கூறினர்.

இந்தத் தாக்குதலுக்குப் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப், ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து விசாரணை நடத்தி குற்றவாளிகளை விரைவில் கைது செய்ய வேண்டும் என்று பலுசிஸ்தான் மாகாண தலைமை செயலருக்குப் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# மீண்டும் மன்னராக விரும்பும் கயனேந்திரா

நேபாளத்தில் பதவியிறக்கப்பட்ட மன்னரான கயனேந்திரா, தான் மீண்டும் மன்னராக விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். 2008 ஆம் ஆண்டு மன்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்டபின்னர் அவர் இவ்வாறான விருப்பத்தைத் தெரிவித்தமை இதுவே முதல் தடவையாகும்.

நியூஸ் 24 தொலைக்காட்சி அலைவரிசைக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தான் நேபாளத்தில் தீவிர அரசியலில் ஈடுபட விரும்பவில்லை. ஆனால், அரசியலமைப்பு ரீதியிலான பெயரளவில் மன்னராக பதவி வகிக்க விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

2006 ஆம் ஆண்டு எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக எதிர்க்கட்சிகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளத் தான் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேபாளத்தில் புதிய அரசியலமைப்பை அங்கீகரிப்பது தொடர்பாக அரசியல் கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு ஏற்படாததை அடுத்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அங்கு எதிர்வரும் நவம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தர் சிலைகள் கடத்தல்

கராச்சி, ஜூலை 9


சுமார் 2,000 ஆண்டுகள் பழமையான புத்தர் சிலைகள் உட்பட அரிய கலைப் பொருள்களைக் கடத்த முயன்றவர்களை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்தனர். பாகிஸ்தானின் தெற்குப் பகுதி துறைமுக நகரான கராச்சியில் பொலிஸார் வாகன சோதனையில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தனர்.

**பொலிஸார் லொறி ஒன்றை நிறுத்திச் சோதனையிட்டனர். அதில் 2,000 ஆண்டுகள் பழமைவாய்ந்த அரிய புத்த மத கலைப் பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.**

அப்போது அந்த வழியாக வந்த லொறி ஒன்றை நிறுத்தி சோதனையிட்டனர். லொறியில் 2,000 ஆண்டுகள் பழமைவாய்ந்த அரிய புத்த மத கலைப் பொருள்கள் மறைத்து வைத்து கடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. ஆளுயர புத்தர் சிலைகள் 10, கல்வெட்டுகள், கலை பாத்திரங்கள் ஆகியவை லொறியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இதையடுத்து, கராச்சி பொலிஸ் நிலையத்துக்கு லொறியைக் கொண்டு சென்ற பொலிஸார், அதில் இருந்த 2 பேரைக் கைது செய்தனர்.

லொறியில் இருந்து புத்தர் சிலைகள் மற்றும் கலைப் பொருள்களை இறக்கிப் பொலிஸ் நிலையத்தில் வைத்தனர். அப்போது தவறாகக் கையாண்டதில் சிலைகள் சேதமடைந்தன. கலைப் பொருள்கள் உடைந்தன. இதற்கிடையே, லொறியில் கடத்தப்பட்ட புத்த மத கலைப் பொருள்களைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கைபர், பக்துங்கவா மாநில அரசு கராச்சி பொலிஸாரிடம் வலியுறுத்தியுள்ளது. வழக்கு நடைமுறைகளுக்குப் பின்னர் அரசு அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்க பொலிஸார் உறுதியளித்தனர்.

# அதி வேக ரயிலுக்கு அனுமதி



அமெரிக்காவில் அதி வேகமாகப் பயணிக்கக் கூடிய ரயில் ஒன்றை உருவாக்குவதற்கு கலிபோர்னிய மாநில சட்டமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நோக்கத்துக்கான நிதியை வழங்க மாநில சட்ட சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

21:16 என்ற வாக்கு வித்தியாசத்தில் இந்தத் திட்டத்துக்கான அனுமதியைக் கலிபோர்னிய மாநில சட்ட சபை வழங்கியுள்ளது.

வேகமான ரயிலை உருவாக்குவதற்கு 68 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்குப் பயன்படுத்தப்படும் நிதி வீணடிக்கப்படுவதாகச் சிலர் விமர்சனம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் அதிகரித்துச் செல்லும் சனத்தொகை மற்றும் விரைவான வாழ்க்கை நடைமுறைகளுக்கு எதிர்காலத்தில் வேகமான ரயில் போக்குவரத்து அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. தம்பு இரகுலேசன்

எமது ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினர் தம்பு இரகுலேசன் அவர்கள் (02.07.2012) அன்று யாழ். நீதிமன்ற நீதிவான் உயர்திரு எம். கணேசராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவர் எமது சமூகத்திற்கு மேலும் பல சேவைகள் செய்து உயர்வு பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவ. இந்துக்கல்லூரி, சாவகச்சேரி

[சி/9335][6-7-8]





பல்சுவை மாத இதழ்
## மணி ஓசை
## Mani Osai

ஒரு பிரசவத்துடன் நின்று விட்ட 'மணி ஓசை' காலத்தின் தேவையாக புதுப்பொலிவுடன் சமய, கலை, இலக்கிய இதழாக மீண்டும் வெளிவருகிறது.
பல்வேறு இரசனைகளைக் கொண்ட வாசகர்களை திருப்திப்படுத்தும் நோக்கில் மணி ஓசை வரவுகள் அமையும்.

வாசகர்கள் ஆக்கங்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரிகள்.

இலங்கையில்
மணி ஓசை
பாரதி இன்ஸ்ரிரியூட்
மீசாலை மேற்கு, மீசாலை
யாழ்ப்பாணம்.

வெளிநாட்டில்
Fossumkroken - 7
0982 Oslo, Norway

மின்அஞ்சல்
Manioosai@gmail.com

(20215)(6-7-8)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 . 05 . 1919



உதிர்வு 22 . 06 . 2011

அமரர் சண்முகம் சுப்பையா

திதி: சஷ்டி 09.07.2012

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உம் நினைவு
என்றென்றும் எம் மனதில்
நிறைந்திருக்கும்
காலங்கள் விடைபெறலாம்
ஆனாலும்
கண்முன்னே நிழலாடும் உம்
நினைவுகள்
ஒரு போதும் எம்மை விட்டு
அகலாது

'அம்பிகை வாசா'
ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்

(19733) (45.6.9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(21)

ஒருவனுக்கு இசை அமைக்கும் ஆர்வம் உள்ளபோது, அவன் இசைக் குறிப்புகளை எழுதிக் கொள்கிறான். ஏனெனில், அவனால் சும்மா இருக்க முடியாது'' என்றார் அந்த பிரபல இசை அமைப்பாளர்.

மோசர்ட் ஆறு வயதில் இசை அமைப்பாளராக மாறியது உண்மையே ஆகும். அவரது பதிமூன்றாவது வயதில் 'பில் ஹார்மோனிக் சொசைட்டி ஆஃப் போலோக்னா'வின் ஒரு அங்கத்தினரானார்.

ஆனாலும், மோசர்ட்டின் மகனிடம் அவர் இசையை விரும்பிக் கேட்டு மகிழ்ச்சி அடைபவராவெனக் கேட்ட போது, அவர் கையிலிருந்த தங்கக் காசுகளை ஒலிக்கச் செய்து கொண்டே பதில் சொன்னார். "இது தான் நான் விரும்பும் இசை.'' அவர் ஒரு விருப்பத்தைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும். லேவா தேவித் தொழில் செய்பவர். அவர் ஓர் இசைவாணர் அல்லர். ஒருவர் தமது தந்தையின் விருப்பத்தை அல்லது பாட்டனாரின் விருப்பத்தைப் பின்பற்றி அல்ல.

மிருகத்தனமான வெறியும் மிகுந்த ஆர்வமும் வலிமையும் முழு நம்பிக்கையும் நிறைந்த இளமைப் பருவத்தில் புத்திசாலித்தனத்துடன் நமது தொழிலைத் தேர்ந்தெடுப்பது வெற்றிப் பயணத்தை விரைவுபடுத்தும், பயணத் தூரத்தையும் மிச்சப்படுத்தும். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு கால் அடியும், ஒவ்வொரு நாளும் செய்யும் வேலையும் மற்றும் நம்மைத் தாக்கும் ஒவ்வொரு ஏமாற்றமும், வாழ்வை விரிவுபடுத்திக் கொள்ள ஆழமான தாக்கிக் கொள்ள, வளப்படுத்திக் கொள்ள உதவுகின்றனவென உணர்ந்து கொள்ள வேண்டும்.

**பொருத்தமாக்கிக் கொள்ளும் சக்தி**

பல பிரபல வியாபாரிகள் வாழ்வில் பெறக்கூடிய வாய்ப்புக்களைக் கண்டறியும் சக்தியையும் உடனடியாகத் தங்களுக்குப் பொருத்தமான பணியைத் தேர்ந்தெடுத்து வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் சக்தியையும் பெற்றிருந்தனர். மேலும், அவற்றுடன் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளும் ஒரு சக்தியையும் பெற்றிருந்ததால், ஓர் இக்கட்டான சமயத்தில், மிகவும் முக்கியமான சில வாய்ப்புக்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. இதை விளக்கமாகச் சொல்ல, வெற்றிபெற்ற சில தனிநபர்களின் வாழ்க்கையை உதாரணமாகக் கூறுகிறேன்.

ஜார்ஜ் எம் புல்மன் வருடத்துக்கு 40 டாலர் சம்பளத்தில் ஒரு ஸ்டோர் கிளார்க்காக தனது வாழ்வைத் துவங்கினான். இந்தச் சம்பளமும் சாப்பாடும் மட்டுமே அவன் மூன்று வருடங்களுக்குப் பெற்றவை ஆகும். பிறகு, இந்த வேலையை விட்டு விட்டு தச்சு வேலை செய்தான். பிறகு, கட்டடங்களிலுள்ள பொருள்களை அகற்றும் வேலையில் சேர்ந்தான். அந்த வேலையில் இருந்த சமயத்தில், எரிக்கால்வாய் ஓரத்தில் அமைந்திருந்த பல பெரிய கிடங்குகளை மூடுவதற்கு நியூயோர்க் மாநில அரசால் நியமிக்கப்பட்டான்.

அவன் இந்த வேலையைச் செய்து முடித்தவுடன் சிக்காகோவிற்குச் சென்று இதே வேலையைச் செய்தான். அங்குபாதாளச் சாக்கடை அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக முழு நகரத்தையும் எட்டு அடி உயரமாக்க வேண்டியிருந்தது. புல்மன் தனது வேலையைச் சிறப்பாகச் செய்ததால் எல்லையற்ற ஆர்டர்களைப் பெற்றான். அவன் சிக்காகோ கட்டடங்களில் வேலை செய்து கொண்டிருந்த சமயத்தில் தான், சிகாகோ அண்டு அல்டன் ரயில்வேயில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நேர்த்தியற்ற தூங்கும் வசதி ரயில் பெட்டிகளைச் சீர்படுத்தும் திட்டத்தை தீட்டினான். ஓடும் ரயிலில் படுக்கை அறைகளும் வரவேற்புக் கூடங்களும் அமைந்திருக்கும் எதிர்காலத்தை முன்னதாகவே அறிந்து கொள்ள முடிந்தது. அவன் முன்பு செய்யப்பட்ட ரயில் பெட்டியை விட நான்கு மடங்கு அதிக விலையில் சொகுசு ரயில் பெட்டியை உருவாக்க ஆரம்பித்தான். அதனால், வாழ்வின் பிரதான சக்திகளை ''புல்மன் கார்ஸ்'' உருவாக்குவதில் செலவழித்தான். ஆனாலும் கூட, அவனது தொழில் வாழ்வின் பிற்காலத்திலும் ஆரம்ப காலத்திலும், தனது மூலதனத்தைப் பெருக்கிக் கொள்ளவும், மேலும் அதிக இலாபத்தை அளிக்கும் வியாபாரத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும் ஒரு புதிய வாய்ப்பைக் கண்ட போது, உடனே தன்னை அந்த வாய்ப்பிற்குப் பொருத்தமாக்கிக் கொண்டனர். அதே சமயம், அது அவனது பிரதான வியாபாரத்தைப் பலவீனப்படுத்தாத விதத்தில் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டான்.

சிறந்த இரும்புப்பாதை அமைப்பாளர் சி.பி ஹண்டிங்டன் ஒரு கானக்டிடே விவசாயியின் மகன். அவர் பண்ணையின் வாய்ப்புக்களைத் தவிர்த்து விட்டு, கலிபோர்னியாவின் சுரங்க மாநிலங்களில் கடிகாரங்களின் பெடல்களை மிதித்துக் கொண்டிருந்தார். அவர் ஓர் இரும்புப் பொருள்களை விற்கும் கடையை வைத்தார். அவர் இரும்புப் பாதை அமைக்கும் பணியில் ஸ்டேன் போர்டு நிறுவனத்துடன் ஒன்று சேர்ந்தார். அவர் ஏற்றுக் கொண்ட ஒரு வேலை மற்றொரு வேலைக்கு வழிகாட்டியது.

அமெரிக்காவின் மற்ற சிறந்த முதலாளிகளான ஆஸ்டர், ஆர்மர், வன்டர் பில்ட், ராக்பெல்லர் ஆகியோருக்கும் இது போலவே நடந்தது எனச் சொல்லலாம். எது என் சரியான இடம்? எவ்விதம் நான் அதைக் கண்டுபிடிப்பது? என்று கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளும்போது- பொருத்தமான மற்றும் பொருத்தமற்ற வாய்ப்புகளைத் தீர்மானிக்கும் போதும்- எந்தத் தொழில் ஆயினும் அதில் வெற்றிபெற உதவக்கூடிய சில குறிப்பிட்ட முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டியது அவசியமானதானாலும் கூட, வாய்ப்பைக் கண்டறியும் திறமை, செயல்படுத்தும் திறமை, மற்றும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னைப் பொருத்தமாக்கிக் கொள்ளும் திறமை ஆகியவற்றைப் பெற வேண்டியது அவசியமானதாகும்.

**-ஓரிசன் ஸ்வெட் மார்டன்-** *(தொடரும்)*

# கூட்டுப்பசளை பயன்பாட்டுக்கு விவசாயிகள் திரும்ப வேண்டும்

## இலங்கை வங்கியின் தலைவர் உரை

அச்சுவேலி, ஜூலை 9

விவசாய உற்பத்திக்குப் பயன்படுத்தும் இரசாயனப் பசளைகள் மற்றும் கிருமி நாசினிகள் எதிர்பாராத பக்கவிளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. இந்த நிலையில் விவசாயிகள் இயற்கை மூலங்களை உள்ளடக்கிய கூட்டுப்பசளை மற்றும் கிருமிநாசினிகளை பயன்பாட்டுக்குக் கொண்டுவரவேண்டும். இதன் மூலம் பக்கவிளைவுகள் இல்லாத விளைபொருள்களை சமூகத்துக்கு வழங்க முடியும்.

இவ்வாறு கூறினார் இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க.

அச்சுவேலி இலங்கை வங்கியின் நீடித்த கருமபீடம் சிறுப்பிட்டியில் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருமபீடத்தை இலங்கை வங்கியின் தலைவர் திறந்து வைத்தார்.

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தொடர்ந்து இலங்கை வங்கியின் தலைவர் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

இலங்கை வங்கி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான சகல மட்டங்களிலும் தனது நிதிகள் உதவிகளையும் நிபுணத்துவம் சார் வழிகாட்டலையும் வழங்கி வருகின்றது, தொடர்ந்தும் வழங்கும். விவசாயம் நாட்டின் உயிர்நாடி அதன் மேம்பாட்டில் இலங்கை வங்கி முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது.

அந்த வகையில் அச்சுவேலி இலங்கை வங்கியின் ஊடாக பெருமளவில் கடன்வசதிகள் மற்றும் விவசாய உபகரணங்களுக்கு குத்தகைக் கடன் வசதி வழங்கப்பட்டு வருகின்றன.

கடன் வழங்கலிலும் கடன் அறவீட்டிலும் அகில இலங்கை ரீதியில் இலங்கை வங்கிக்கு அச்சுவேலிக் கிளை பெருமை சேர்த்துள்ளது. இந்தப் பெருமைக்கு உரியவர்கள் அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையின் முகாமைத்துவமும் வாடிக்கையாளர்களுமே.

விவசாயிகள் இன்று பயன்படுத்தும் இரசாயன உரப்பசளைகள் மற்றும் கிருமி நாசிகளின் அதீத பாவனை சூழலை மாசுபடுத்துவதோடு சமூகத்தில் எதிர்பாராத பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தி நிற்பதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டை மறுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக்குற்றச்சாட்டில் இருந்து விவசாயிகள் சமூகம் விடுபட வேண்டும். அதற்கு ஏதுவாக இயற்கை மூலங்களான விலங்குகளின் கழிவுகள் மற்றும் பசுந்தழைகள் குப்பைகளைக் கொண்டு கூட்டுப்பசளைகளையும், இயற்கை மூலங்களை உள்ளடக்கிய கிருமி நாசினிகளையும் பயன்படுத்த முன்வர வேண்டும். அதன் மூலம் பக்கவிளைவுகள் இல்லாத உற்பத்திகளை சமூகத்துக்கு வழங்க முடியும்.

சமூகத்துக்கும் சூழலுக்கும் தீமை விளைவிக்கும் வகையில் செயற்படுவது வரவேற்கத்தக்கது அல்ல.

அண்மைக்காலத்தில் பசுப்பாலின் தேவை அதிகரித்துள்ளது. இந்தவகையில் பால்மாடு வளர்க்கும் வேலைத்திட்டத்துக்கு முன்னுரிமை அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குவதற்கு இலங்கை வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தவகையில் பால் மாடு வளர்ப்போர் மாட்டுப்பண்ணையாளர்கள் நன்மை அடையவுள்ளனர்.

இலங்கை வங்கி மக்களின் தேவையை கருத்தில் கொண்டு தனது சேவை மட்டத்தை கிராமிய மட்டத்தில் விஸ்தரித்து வருகின்றது.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிராம் அலுவலர் க.ஸ்ரீஸ்கந்தராசா, ஓய்வுபெற்ற அதிபர் அ.கனகராசா உட்பட பலர் உரையாற்றினர்.

(ம-11)

# யாழ்.ஊடகவியலாளருக்கு அமெரிக்க நிறுவனம் விருது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரன், பத்திரிகையாளர்களுக்கான மத்திய நிலையத்தின் (International center for Journalist) தென்னாசியாவுக்கான விருதைப் பெற்றுள்ளார்.

''சண்டே ரைம்ஸ்'' ஆங்கிலப் பத்திரிகையில் அவர் எழுதிய சைக்கிளில் இருந்து மோட்டார் சைக்கிளுக்கு மாறி வரும் யாழ்ப்பாணம் (Jaffna society transforms traditional bicycle to mator bike) என்ற கட்டுரைக்கே விருது வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளருக்கான மத்திய நிலையம் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்குவதாகும். அது தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு



''ஒன் லைன்'' மூலம் நடத்திய பயிற்சியின் பின்னர் இடம்பெற்ற ஆங்கில மூல ஆக்கங்களுக்கான போட்டியிலேயே யாழ்.ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரன் விருது பெற்றுள்ளார். இவர் உதயனிலும் பல கட்டுரைகளைப் படைத்துள்ளார். (அ)

# பதவியுயர்வுடன் இடமாற்றம்

தென்மராட்சி, ஜூலை 9

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தலைமைபீட சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றிய பரம்சோதி பாலகரன் பதவி உயர்வுடன் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட வங்கி மற்றும் மகாசங்க மேற்பார்வை அரசின் பொறுப்பு முகாமையாளராக இன்று தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் சமுர்த்தி அதிகார சபையினால் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

(ம-9)

# நிர்வாகிகள் தெரிவு

சுன்னாகம் மருதனார்மடம் சபாபதிப்பள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தலைவர் வி.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. நடப்பாண்டுக்கான அலுவலர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் வி.ரவீந்திரன், உபதலைவர்.திருமதி இ.மோகனவதனி, செயலாளர் எஸ்.மகாதேவா, உபசெயலாளர் எஸ.ரவிகரன், பொருளாளர் எஸ்.வாமதேவன்.

நிர்வாகக்குழு உறுப்பினர்கள், சி.சுத்தானந்தன், எஸ்.அற்புதராஜ், திருமதி ப.கனகராஜேஸ்வரி, பொ.கமலநாதன், எஸ்.ஜசிந்தன், த.அகிலன்.

(ம-86)

* * *

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றன. இதில் புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர் சி.சிவகுமார், உபதலைவர் செ.காந்தராசா, செயலாளர் கா.குணராசா.

நிர்வாக சபை உறுப்பினர், செ.ரஜனிகாந், தி.மயில்வாகனம், மு.தேவராசா, சி.சந்திரலிங்கம், ப.அல்வின், சு.சின்னராசா. (ம-8)

# ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

**கதைகூறல் போட்டி**

**தரம்-6**

முதலாம் இடம், அமுதசிங்கம் பிரணவரூபன் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.) இரண்டாம் இடம், சிவரூபி சக்திவேல் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.) மூன்றாம் இடம், கஜந்தினி கிரிதரன் (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-7**

முதலாம் இடம்,சுஞ்சியா தவராஜா (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.) இரண்டாம் இடம்,தர்மினி சுரேஸ் குமார் (யாழ்ரன் கல்லூரி) மூன்றாம் இடம்,யாழினி பரமேஸ்வரன்

**தரம்-8**

முதலாம் இடம், உலகுருநாதன் குக்தாசன் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.) இரண்டாம் இடம், சிவகுமார் நவநீதன் (யாழ்ரன் கல்லூரி) மூன்றாம் இடம், சுரேஸ்குமார் கஜந்தன் (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-9**

முதலாம் இடம், வேதாரனி விக்னேஸ்வரன் (யாழ்ரன் கல்லூரி) இரண்டாம் இடம், திருமகள் தயாபரன் (யாழ்ரன் கல்லூரி) மூன்றாம் இடம், பத்மினி விக்னேஸ்வரன் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.)

**பார்த்து வாசித்தல் போட்டி**

**தரம்-6**

முதலாம் இடம், சிவரஜனி பாலேந்திரா (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.) இரண்டாம் இடம், ஏகாம்பரம் கோபிநாத் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.)மூன்றாம் இடம், சக்திதாசன் லக்ஸன் (யாழ்ரன் கல்லூரி)

**தரம் 7**

முதலாம் இடம், நிருபாமா இந்திரகுமார் (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.) இரண்டாம் இடம், சங்கவி தவராசா (யாழ்ரன் கல்லூரி) மூன்றாம் இடம், கம்சிகா தவராசா (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.)

**தரம்-8**

முதலாம் இடம் , பிரியா கிருபானந்தராசா (டாக்டர்.எ. தியா+கராஜா ம.ம.வி.) இரண்டாம் இடம், குலமதி பாலேந்திரா (டாக்டர்.எ. தியாகராஜா ம.ம.வி.) மூன்றாம் இடம், கவினா சுதாகரன் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.)

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மானுசந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# பிரிகோடாகும் தமிழகமும் இலங்கையும்

ஈழப் போர் முடிவோடு தமிழர் மனதில் உருவாகி விட்ட சிங்களவர் மீதான எதிர் மனோநிலை ஆறாத வடுவாக இருக்கின்றது. இதே மனோநிலை தமிழக மக்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கின்றது. அது தமிழக-இந்திய-இலங்கை அரசியலின் முக்கோணத் தொடரை முற்றுமுழுதாகப் பாதிக்கும் காரணியாகவும் மாறிவருகின்றது.

முள்ளிவாய்க்காலில் இலங்கை அரசு தமிழர்கள் மீது இன அழிப்பைக் கட்டவிழ்த்துவிடும்போது என்றும் இல்லாதவாறு ஈழ ஆதரவு நிலையைத் தமிழகத் தமிழர்கள் எடுத்துக்கொண்டனர். இங்கு நடக்கும் படுகொலைகளை சர்வதேசமயப்படுத்த தம்மாலான அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுத்தனர். முத்துக்குமார் ஈழத்துக்காக உயிர்துறந்த முதல் முத்தானான். அப்போதிருந்து பற்றிக்கொண்ட இலங்கை அரசுக்கு எதிரான தீ இப்போது பற்றி எரிகின்றது.

இலங்கையில் இருந்து செல்லும் முக்கிய அதிகாரிகள் தமிழகத்தில் தலைநிமிர்ந்து நடக்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இலங்கை அமைச்சர்கள் வெளிப்படையான பயணங்களை தமிழகத்துக்கு மேற்கொள்வதில் என்றுமில்லாத எதிர்ப்பலைகளைச் சந்தித்து வருகின்றனர்.

அண்மையில் கூட இந்திய-இலங்கை அரசியல் உறவைப் பாதிக்குமளவுக்கு தமது எதிர்ப்பை தமிழக மக்கள் வெளிக்காட்டியிருந்தனர். சார்க் நாடுகளுக்கு இந்தியா வழங்கும் பயிற்சித் திட்டத்துக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த விமானப்படையினருக்கான பயிற்சியை இலங்கை விமானப்படையினர் பெற்றுக்கொள்ள முடியாத சூழலை இந்த எதிர்ப்பு ஏற்படுத்தியிருந்தது.

அதுமட்டுமல்லாது தமிழக கலைஞர்கள் இலங்கைக்கு வந்து நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதைக்கூட தமிழ் உணர்வாளர்கள் தடுத்து வருகின்றனர். கடந்த வருடத்தில் பாடகர் மனோ, மஹிந்தவின் மகன் நாமல் ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகைதர இருந்தார். இறுதி நேரத்தில் தமிழ் உணர்வாளர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக தமது பயணத்தை நிறுத்திக்கொண்டார். அதுபோலவே இந்த வருடமும் பெரும்பான்மையினத்தவர் ஒருவரின் ஊடகநிறுவனம் நடத்தவிருந்த நிகழ்வுக்கு பாடகர் ஹரிகரன் அழைக்கப்பட்டிருந்தார். இறுதி நேரத்தில் மே.17 இயக்கத்தின் அழைப்புக்கு இணங்க அவரும் தனது பயணத்தை நிறுத்திக்கொண்டார். இதனையும் மீறி இலங்கைக்கு வரும் தமிழகக் கலைஞர்கள் குறித்த களத்திலிருந்தே நீக்கப்படும் சந்தர்ப்பங்கள் தமிழகத்தில் உருவாகியிருக்கின்றது.

இவ்வாறு தமிழகம்-இலங்கைக்கு இடையிலான அரசியல் உறவு ஒட்டவைக்க முடியாத இரு துருவங்களாக மாறிவருகின்றது. முன்பெல்லாம் இலங்கை அரசியல் விடயம் தொடர்பில், தமிழகத்தை ஆளும் அரசியல் கட்சி ஆதரவான நிலையை எடுத்தால் எதிர்க்கட்சி கட்டாயம் அதனை எதிர்க்கும் நிலை காணப்பட்டது. இந்த நிலைப்பாட்டால் தி.மு.க தனது ஆட்சியைக் கூட இழந்த சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது இலங்கையை முன்மொழியும் எந்த அரசியல் விடயத்தையும் கட்சி பேதமின்றி அனைவரும் எதிர்க்கும் மனோ நிலையே உருவாகி இருக்கின்றது. இது ஈழத்து ஆதரவாளர்களின் அல்லது தமிழ் உணர்வாளர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலை மீறி தமிழக அரசியல் போக்கு அமைய முடியாது என்பதைச் சுட்டிக்காட்டி நின்றாலும், காலப்போக்கில் அதுவே வடுவாக மாறி இலங்கை-தமிழக உறவை முற்றாக பிரித்துவிடக் கூடும். இப்போதே தமிழக மக்கள் இலங்கை அரசை எதிர்க்கும் மனநிலையில் அரைவாசிக்கும் மேற்பட்ட பங்கைக் கடந்துவிட்டனர். இனிவரப்போகும் காலங்களில் அது முற்றுமுழுதான எதிர்ப்பாக மாறும் என்பதில் ஐயமில்லை.

# புரட்சியாளனின் நிழலில் விழுந்த மஹிந்த

**ஈஸ்வரன்**

மக்களின் நலன்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து செயற்படும் ஒரு புரட்சிவாதி, வாழ்நாளின் போது பயங்கரவாதி எனவும் மனிதாபிமானம் அற்றவர் எனவும், கொலைவெறியன் எனவும் பிற்போக்குவாதிகளால் அவதூறு செய்யப்படுகிறான். ஆனால் அவன் இறந்த பின்பு அதே பிற்போக்கு சக்திகள் அவனை யேசுவைப் போல், புத்தரைப் போல் ஒரு மகான் எனப் போற்றி அந்தப் புரட்சியாளனின் பெயரையும் மக்கள் மத்தியில் அவனுக்குள்ள செல்வாக்கையும் பாவித்துத் தங்கள் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு ஒரு கவசமாகப் பாவிக்கின்றனர். ஆனால் இத்தகைய ஏமாற்றுகள் தற்காலிகமானவையே என்பதை அவர்களுக்கு மக்கள் விரைவிலேயே உணர்த்தி விடுவதுண்டு.

இது சோவியத் யூனியன் புரட்சியைத் தலைமையேற்று வழிநடத்தி கொடிய ஜார் மன்னனின் சர்வாதிகார, ஆட்சியை வீழ்த்தி ஒரு பொதுவுடமை நாட்டை உருவாக்கிய மாமேதை லெனின் அவர்கள் வெளியிட்ட கருத்தாகும்.

இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது கியூபா பயணத்தின் போது உலகின் மிகச் சிறந்த புரட்சித் தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படும் சேகுவேராவின் மனைவியையும் மகனையும் சந்தித்து மிக நெருக்கமான முறையில் உரையாடினார் என்ற செய்தி வெளிவந்த போது மாமேதை லெனின் அவர்களின் மேற்கண்ட கருத்து மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டதை உணர முடிந்தது.

தோழர் சேகுவேராவைப் போன்றே தனது மக்களின் விடுதலைக்கான அர்ப்பண உணர்வுடன் ஒரு பெரிய தியாக வாழ்வை வளர்த்துக் கொண்டு போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், அவரின் விடுதலைப் புலிகள் அமைப்பையும் நயவஞ்சக நடவடிக்கைகள் மூலம் தோற்கடித்தது மட்டுமன்றி, அதற்காக இன்றுவரை பெருமை பேசி வரும் மஹிந்த ராஜபக்ஷ சேகுவேராவின் உறவினரைச் சந்தித்து மரியாதை செலுத்தினார் என்றால் அது எத்தகைய ஒரு பெரிய ஏமாற்று என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

போரின் இறுதி நாள்களில் நாற்பதினாயிரம் தமிழ் மக்களை நரவேட்டையாடிய இரத்தக் கறை இன்னும் கைகளில் காய்ந்து விடாத நிலையில் ஒரு உலகப் புரட்சித் தலைவனின் மனைவியின் கரங்களை அதே கரங்களால் குலுக்குகிறார் என்றால் எவ்வளவு ஒரு அபத்தமான காட்சி என்பதைப் புரட்சியாளர்கள் நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

ஆர்ஜென்ரீனா உலகிலேயே மிக உயர்ந்த பிரதேசங்களில் அமைந்த நாடுகளில் ஒன்று. தகரமும், தாமிரமும் அந்த நாட்டுக்கு இயற்கை வழங்கிய கொடை. அந்த நாட்டு மக்கள் உயிரைப் பணயம் வைத்து சுரங்கங்களில் தோண்டி எடுக்கும் இந்தக் கனிமங்களால் பெரும் இலாபமீட்டுவது ஐரோப்பிய அமெரிக்க நிறுவனங்களே. ஆனால் கடுமையாக உழைக்கும் அந்த நாட்டு மக்களுக்குக் கிடைப்பதெல்லாம் வறுமையும், பசியும், பற்றாக்குறைகளும் தான். உடலையே விறைக்க வைக்கும் கடும் குளிர் நிலவும் அந்த நாட்டில் ஒரு பெண் 40 வயதிலேயே 70 வயதுத் தோற்றத்தை அடைந்து விடுவாள். அந்த நாட்டு மக்களின் சராசரி வயது 50 தான்.

இந்த ஆர்ஜென்ரீனா நாட்டில்தான் சேகுவேரா பிறந்தார். ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த அவர் மருத்துவக் கல்வி பயின்றார். ஆனால் தன் நாட்டு மக்களின் வறுமையும் துயரங்களும் அந்நிய நாட்டினரின் இரக்கமற்ற சுரண்டலும் அவருக்குள் ஒரு புரட்சிவாதி உருவாவதை அவருக்கு உணர்த்தின.

எனவே, மருத்துவப் படிப்பை இடைநிறுத்தி விட்டு லத்தீன் அமெரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். கால் நடையாகவும், மிதிவண்டியிலும், பொது வாகனங்களிலும் என அவரின் பயணம் தொடர்ந்தது.

பிரேஸிலின் கோப்பியும், ஆர்ஜென்ரீனாவின் கனிமங்களும், கியூபாவின் கரும்பும், மெக்ஸிக்கோ, வெனிசுலா ஆகிய நாடுகளின் எண்ணெய் வளமும் அந்தந்த நாட்டு மக்களின் உதிரத்துடன் கலந்து அந்நிய நாடுகளால் உறிஞ்சப்படுவதைக் கண்டார்.

அந்தந்த நாடுகளின் அரசுகளும் அரசுத் தலைவர்களும் அந்நிய நாடுகளின் தரகர்களாக விளங்கி, தங்கள் நாட்டு மக்களை வாட்டுவதைக் கண்டு கொதித்தார். இவையெல்லாம் முழு லத்தீன் அமெரிக்க நாடுகளுமே விடுவிக்கப்பட வேண்டும் என்ற உத்வேகத்தை அவரில் மூட்டின.

எனவே இவர் இந்தப் பயணங்களின் போது பல்வேறு லத்தீன் அமெரிக்க நாடுகளின் புரட்சியாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தியவுடன் பல போராட்டங்களிலும் பங்கு கொண்டார். அதன் காரணமாக அவர் பிரேசில் நாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். எனினும் ஒரு சிறைக்காவலரின் உதவியுடன் தப்பிய இவர் மெக்சிக்கோ சென்றடைந்தார்.

அங்கு கியூபா புரட்சித் தலைவர் பிடல் காஸ்ரோவைச் சந்தித்த இவர் கியூபா புரட்சிப்படையில் இணைந்தார். ஒரு படையணியின் தளபதியாக அந்தப் படையணியுடன் மெக்சிக்கோவிலிருந்து ஒரு கப்பலில் புறப்பட்டு கியூபா மண்ணில் இறங்குகிறார். அங்கு தரையிறங்கும் போதே இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து முன்னேறிச் செல்கின்றனர்.

இறுதியில் பிடல்காஸ்ரோ தலைமையில் சர்வாதிகாரி பட்டிஸ்லோ வீழ்த்தப்பட்டு கியூபாவில் மக்களாட்சி மலர்கிறது. அதில் ஒரு அமைச்சராகிறார்.

ஆனால் அவர் அத்துடன் அமைதியடையவில்லை. மெக்சிக்கோ, பொலிவியா போன்ற நாடுகளுக்குப் புரட்சியை விரிவாக்கும் முகமாக கியூபாவை விட்டு வெளியேறுகிறார்.

பொலிவியாவில் அவரும் அவரது தோழர்களும் ஒரு தாக்குதலுக்கான தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஒரு துரோகியின் காட்டிக் கொடுப்பில் கைது செய்யப்படுகிறார். பின்பு சுட்டுக் கொல்லப்படுகிறார்.

இவ்வாறு லத்தீன் அமெரிக்க மக்களின் மேல் அதிகாரபீடங்களால் இழைக்கப்பட்ட கொடுமைகளும், அதனால் அவர்கள் அனுபவித்த வறுமை, நோய், மரணம் போன்ற துயரங்களும் தோழர் சேகுவேராவை எவ்வாறு ஒரு புரட்சிவாதியாக மாற்றியதோ அவ்வாறே 1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொலைகள், கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள் பிரபாகரனைச் சிறு வயதிலேயே தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகச் சிந்திக்கத் தூண்டியது. தொடர்ந்து தமிழ் மக்கள் மேல் ஆயுதப்படையினராலும், சிங்கள அதிகார பீடங்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஆயுத வன்முறைகள் அவரை ஆயுதப் போராட்டத்தில் இறங்க நிர்ப்பந்தித்தன. தனி நாடு ஒன்று மட்டுமே தமிழ் மக்களுக்கு நியாயமான நிரந்தரமான தீர்வை வழங்க முடியும் என உணர வைத்தன.

எனவே, விடுதலைப்புலிகள் இயக்கம் வேகமாக வளர்ச்சி பெற்று, விடுதலைப் பிரதேசங்களை உருவாக்குமளவுக்குப் பலம் பெற்றது. எனினும் இலங்கை ஆட்சியாளர்களின் அழுத்தத்தின் பேரில் அமெரிக்கா முதலில் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்து தடை செய்தது. அதை அடுத்துப் பல மேற்கு நாடுகள் தடை செய்தன.

சர்வதேசத்தின் உதவிகளைப் பெற்று விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த இலங்கை அரசு, பயங்கரவாதத்தை அழித்துவிட்டதாகத் தம்பட்டமடித்தது. மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் பிரபாகரனும் விடுதலைப்புலிகளும் இன்றுவரை பயங்கரவாதிகள்.

சேகுவேரா உயிருடன் இருந்த காலத்தில் அவரை அமெரிக்காவும் ஏனைய மேலாதிக்க சக்திகளும் பயங்கரவாதிகள் என்றனர். ஒரு போர் வெறியன் என்றனர். மனிதாபிமானம் அற்றவன் என்றனர். ஆனால் அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது லத்தீன் அமெரிக்க மக்களின் விடுதலை என்ற உன்னத இலட்சியத்திற்குத் தான். எனினும் அவரை வேட்டையாட அனைத்து வழிகளையும் பிரயோகித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ அரசும் சேகுவேராவின் எதிரிகள் கையாண்ட அத்தனை வழிமுறைகளையும் பிரபாகரனுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிராகக் கையாண்டார். சேகுவேராவும் பிரபாகரனும் மக்களின் விடுதலை என்ற பேரில் ஒரே புரட்சிகர பாதையில் பயணம் செய்தனர். சேகுவேராவின் எதிரிகளும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியும் மக்கள் விரோதப் பாதையில் நடந்தன.

சேகுவேராவைக் கொன்றவர்களின் இலட்சியத்தையே இன்றுவரை தனது இலட்சியமாகக் கொண்டு இயங்கும் மஹிந்த ராஜபக்ஷ அவரின் மனைவியையும் மகளையும் சந்தித்தார் என்றால் ஆச்சரியம் எதுவுமில்லை. சே என்ற அந்த மாபெரும் புரட்சிவாதியின் நிழலில் பதுங்கி நின்று, அதன் கீழ் தன் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்குக் கடைவிரிக்கும் தந்திரம் தான் அது. சேகுவேராவை மதிப்பவன், அணிசேரா நாடுகளின் நண்பன் போன்ற வேஷங்கள் இப்போது மஹிந்தவின் மனித குல விரோத நடவடிக்கைகளுக்கான தண்டனைகளிலிருந்து தப்பத் தேவைப்படுகின்றன.

ஆனால் சேகுவேராவின் மனைவி மஹிந்த ராஜபக்ஷவிடம் சே பற்றிய இரு நூல்களை வழங்கியதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அதைப்படித்துப் பார்த்தால், மஹிந்த சேயின் விரோதி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கூட அந்த நூல்கள் வழங்கப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலையின் சாட்சி

■ குருமுருகன்

மக்களின்மனதில்ஆறாத ஒரு வடுவாக நவாலி படுகொலை இன்றும் உள்ளது.

கடந்த 09.07.1995 இல் இடம்பெற்ற நவாலி தேவாலயம் மீதான தாக்குதலின் 17ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று ஆகும்.

வரலாற்றில் அந்த இரத்தக் கறை படிந்த நாளின் துன்ப-துயரங்களை மக்கள் இலகுவில் மறந்துவிட முடியாது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமார துங்க ஆட்சி பொறுப்பேற்று குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழர் மீதான இனக் குரோத படுகொலை இதுவாகும்.

இலங்கை விமானப்படை விமானங்கள் மூன்று இந்த படு பயங்கரமான கோரத்தாக்குதலை மேற்கொண்டன.

லீப்போர்வேர்ட் என்ற முன்னோக்கி இராணுவ நடவடிக்கையினை யாழ்.குடா பகுதியில் வலிகாமம் ஊடாக ஆரம்பித்தனர் இராணுவத்தினர்.

பலாலி இராணுவ முகாமில் இருந்தும் அளவெட்டி, சண்டிலிப்பாய் பகுதிகளிலிருந்தும் ஊர்மனை நோக்கி நாலாபுறமும் மிகக் கொடூரமான முறையில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**நவாலி தேவாலயம் மீது இலங்கை விமானப்படையினர் தாக்குதல் நடத்தி இன்றோடு 17 ஆண்டுகள்**

**இந்தக் கொடூரச் சம்பவத்தில் 147 பேர் அந்த இடத்தில் உயிரிழந்தனர். அந்த வேளையிலும் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக நவாலி வடக்கு கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா, கிராம அலுவலர் பி.சுபிரியேல்பிள்ளை ஆகியோர் மக்கள் பணியின் போது உடல் சிதறி பலியாகினர்.**



திடீரென 09.07.1995 அன்று வலிகாமம் தென்மேற்கு, வலி. மேற்கு, வலி. தெற்கு பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் நோக்கி காலை 5.40 மணியளவில் இருந்து மும்முனைத்தாக்குதல்கள் படையினரால் மேற்கொள்ளப்பட்டன.

அன்றைய தினம் காலை வலிகாமம் பகுதியில் உள்ள மக்கள் உடுத்த உடைகளுடனும், அகப்பட்ட உடைமைகளுடனும் கண்ணீரும், கம்பலையுமா இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர்.

மாட்டு வண்டிகளிலும், சைக்கிள்களிலும், கால்நடையாகவும், லான்ட்மாஸ்ரர்களிலும், வட்டுக்கோட்டை, நவாலி வீதி, வழுக்கையாறு வெளி, நவாலி-ஆனைக்கோட்டை- மானிப்பாய் பிரதான வீதி வழியாக மக்கள் அலை அலையாக சென்று கொண்டிருந்தனர்.

அந்த வேளையில் சகல வீதிகளிலும் தாக்குதல்கள் நடந்தன. வீதிக்கு வீதி சடலங்கள் காயமடைந்தவர்களை எடுத்துச் செல்லக் கூடிய அளவுக்கு வாகன வசதிகளோ, மருந்தகங்களோ, வைத்தியசாலைகளோ இல்லை.

காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி, சிகிச்சை பயனின்றி இறந்த கொடுமைகளை நினைக்கவே முடியாது.

அன்றைய தினம் குடாநாட்டின் பல்வேறு வீதிகளின் ஊடாக நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம் பெயர்ந்தோர் தஞ்சமடைந்தனர்.

அந்த வேளையில் விமானம் மூலம் 13 குண்டுகள் தொடர்ச்சியாக இரு ஆலயங்கள் மீதும் மாறி, மாறிப் பொழியப்பட்டன.

சிறிது நேரத்தில் அவலக் குரல்கள் அந்தப் பகுதியை அதிர வைத்தன. 147 பேர் உடல் சிதறிப் பலியாகியிருந்தனர். கையிழந்து, கால் இழந்து, குற்றுயிராகக் கிடந்த கொடூரக் காட்சி இன ஒழிப்பு நடவடிக்கைக்குச் சாட்சியாக அதிர வைத்தது.

அந்த வேளையில் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஹேமலதா செல்வராஜா, கிராம அலுவலர் பி.சுபிரியேல்பிள்ளை ஆகியோர் மக்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது உடல் சிதறிப் பலியாகினர்.

இந்தத் தாக்குதலின் நினைவாக நவாலி புனித பேதுருவானர் தேவாலயத்தில் படுகொலை நினைவுச் சின்னங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

# அழிவடையும் ஈழத்துத் தமிழர்களின் வரலாற்று எச்சங்கள்

■ மு.புவீஸ்வரன்

ஈழத் தமிழர்களது வரலாற்றைத் தெளிவாக அறிய முடியாத நிலையே இன்றும் நீடிக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் முக்கியமானது, வரலாற்றுப் பின்னணிகளைச் சிதைய விடுதல் ஆகும். நாம் தொடர்ந்தும் வரலாற்றைச் சிதையவிடும் சமூகமாக மாறிவருகின்றோம்.

தமிழர் வரலாற்றைப் பிரதிபலிக்கும் சங்கிலி மன்னனின் நல்லூர் ராசதானிக்கு அடையாளமாக இருக்கும் மந்திரி மனை, யமுனா ஏரி, அரண்மனை தோரண வாயில் போன்றன சிதைத்து கொண்டே போகின்றன. அர்த்தமற்ற, அனாவசியமான ஆடம்பர செலவினத்தை விரும்பும் எம் சமூகம், எமது வரலாற்றுச் சின்னங்களை சிதைய விடுவது கவலைக்குரிய விடயமாகும்.

ஈழத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்களையும், அவற்றின் மகத்துவங்களையும் அறிய முடியாது இருப்பதற்குக் காரணம், இரண்டு நூல் நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் எரிக்கப்பட்டமை ஆகும். 1983 ஆம் ஆண்டு யாழ்.நூல் நிலையம் எரிக்கப்பட்டது. இது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் அது யாழ்ப்பாணத்தில் ஏரிக்கப்பட்ட இரண்டாவது நூல் நிலையம் என்பது எமது தமிழ் மக்கள் யாருக்கும் தெரியாது. ஈழத்தவர்களது இலக்கிய பொக்கிஷங்களை தன்னகத்தே கொண்டு ''சரஸ்வதி பண்டாரம்'' என்னும் நூல் நிலையம் தமிழ் மன்னர் காலத்தில் இருந்தது. பின்வந்த சில ஆட்சியாளர்களினால் இந்த நூல் நிலையம் எரிக்கப்பட்டது. நல்லூர் சட்டநாதர் கோயிலின் வடக்குப் புறமாக இன்றும் எரிக்கப்பட்ட நூல் நிலையத்தின் எச்சமாக மேடை ஒன்று இருக்கின்றது. இதனால் ஈழத்தவர்களது இலக்கிய வரலாற்றுப் பின்னணிகள் அனைத்தும் அடியோடு அழிக்கப்பட்டு அல்லது சிதைக்கப்பட்டு விட்டன. இவ்வாறு வெந்ததும் நொந்ததுமாக எமது வரலாறுகள் இடை நடுவே அநாதரவாக இருப்பது யாவருக்கும் தெரிந்ததே. தொடர்ந்தும் அதே தவறுகளை நாளுக்கு நாள் இழைத்து வருகின்றனர்.

யமுனா ஏரியின் வரலாறு வியக்கத்தக்கது. சங்கிலிய மன்னனின் மனைவி குளிப்பதற்காக அந்தப்புரத்தின் அருகே இது கட்டப்பட்டதாகவும், இந்தியாவின் யமுனா நதியிலிருந்து நீர் கொண்டு வந்து இதற்குத் தெளித்தமையால் இது யமுனா ஏரி எனும் பெயரைப் பெற்றதாகவும் ஒரு ஐதீகக் கதையுண்டு. இவ்வளவு ஆழம் கூடிய இந்த ஏரியை மனைவி குளிப்பதற்காக மட்டும் சங்கிலியன் கட்டியிருக்க மாட்டான் என மறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அன்றைய காலத்தில் மன்னர்களின் புகழ், அவர்களின் முரசொலியின் உரப்பில் இருந்தே தீர்மானிக்கப்பட்டது. முரசொலி உரத்து ஒலிக்க வேண்டுமானால் இதற்குப் பயன்படும் தோல் செம்மையாக பதனிடவேண்டும். இதற்காகவே சங்கிலிய மன்னன் யமுனா ஏரியைக் கட்டுவித்தான் எனக் கூறப்படும் வரலாறும் உண்டு. யமுனா ஏரியின் நடுவில் ஏர்மேடை உள்ளது. இந்த மேடையில் மிருகங்களின் தோல்களை உலர வைப்பார்களாம். வெய்யிலின் வெம்மையால் நன்கு உலர்ந்த பின்னர் ஈரலிப்புக் காற்றினால் இழகி பின்பு காய்ந்து தோல் சிறப்பாக பதனிடப்படும் என்பதற்காகவே இந்த யமுனா ஏரியைச் சங்கிலிய மன்னன் கட்டினான் எனவும் வரலாறு கூறுகின்றது.



இப்படிப்பட்ட சிறப்பான வரலாற்றைக் கொண்ட வரலாற்று ஆதாரங்கள் இன்று அழிந்து கொண்டு போகின்றன. இதனைக் கவனிப்பார் யாருமில்லை. இப்போது மந்திரிமனை ஆட்டு மந்தைகள் குடியிருக்கும் இடமாக உள்ளது. வரல்ாற்று சுவர்களில் எல்லாம் வன்முறை வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன. சுயநலமாக, நாம் வாழ்வது தவறில்லை. ஆனால் பொது நலனை சற்றேனும் சிந்திக்காது தொழிற்படுவதுதான் தவறு.

யாழ். மாநகர சபைக்கே சொந்தமான யமுனா ஏரியின் பின்புற அத்திபாரம் சிதைந்து வருகின்றது. யாழ்.மாநகர சபை ஏன் இதைக் கவனிக்காமல் இருக்கின்றது?

வரலாறே இல்லாத இனங்கள் கூட வரலாற்றை உருவாக்குகின்ற இந்த வேளையில், இருக்கின்ற வரலாற்றுத் தடயங்களைக் கூட இப்படிக் கைவிடுவது நியாயமானதா? ''பூர்வீகத் தமிழரின் ஆதிக்குடி கந்தரோடை'' என்றோம். ஆதாரங்கள் எவ்வளவோ இருந்தும் அது திசைமாற்றப்பட்டுள்ளது. ஏன் இவற்றை எல்லாம் சிந்திக்க மறுக்கின்றோம். அரசியலுக்கு அப்பால் எமது வரலாறுகளைச் சிதைய விடாது காப்பது எமது உரிமைகள் அல்லவா. சேர,சோழ,பாண்டிய என்ற அர்த்தமற்ற அந்நிய அரசர்களின் நாமங்களை அன்று சூட்டினோம். ஆனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க எமது தமிழ் மன்னர்களின் தடயங்களைச் சிதைய விடுகின்றோம்.

நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை சிதைகின்றது. ஊர்காவற்றுறையில் இருகோட்டைகள் இல்லாமல் போகின்றன. சங்கானையில் ஒரு கோட்டை சந்திக்கருகில் இடிகிறது. இவ்வாறு ஈழத்தமிழர்களது வரலாற்றுப் பொக்கிஷங்கள் அனைத்தும் சிதைந்து வருவதோடு, கால நீரோட்டத்தில் முற்றாக அழிந்து கொண்டே வருகின்றன. இவற்றையெல்லாம் எமது தமிழ் பெரியவர்கள் கண்டுகொள்ள மறுக்கின்றனர். அரசியலுக்கு வருபவர்களும் தமது சுயநலனைக் காப்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.

வரலாற்றின் உண்மையான கதைகளெல்லாம் சந்தைக்கு வர ஏன் மறுக்கின்றது. பயமா? நீதியில்லையா? அக்கறையில்லையா? சுயநலப்போக்கா? தமிழர் தம் சரித்திரத்துக்குச் சாவு மணியா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு தர்மங்கள்

ஆன்மீகப் பேச்சாளர் ஒருவர் எனக்குச் சம்பந்தமில்லாத ஒரு கேள்வியை என்னிடம் கேட்டார்.

''தசரதனுக்குஏன் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள்?''இது தான் அவர் என்னைக் கேட்ட கேள்வி.

''எனக்கு என்ன தெரியும்... இது தசரதனிடம் நீங்கள் கேட்க வேண்டிய கேள்வி!என்று நான் பதிலளித்தேன்.

''தசரதன் கேட்டது ஒரு பிள்ளைதான்'' என்றார் அவர்.

தனக்குப் பின்னால் நாட்டை ஆளவும்..., தான் நல்ல கதி அடைய உதவவும் தசரதன் கேட்டது ஒரு பிள்ளை தான். அது போலவே தேவர்களும் ராவணவதம் செய்வதற்கு ஒரு ராமனைத் தான் கேட்டார்கள்...

அப்படி இருக்கும் போது நான்கு பிள்ளைகள் எதற்கு?இந்தக் கேள்விக்குஅந்த ஆன்மீகப் பேச்சாளர் கூறிய விளக்கம் இது.

இந்த உலகில்நான்கு வகையான தர்மங்கள் உள்ளன. அந்த நான்கு வகையான தர்மங்களையும் மக்கள் பின்பற்றி வாழவேண்டும் என்பதைக் காட்டுவதற்காகத் தான் அந்த நான்கு சகோதரகள் தோன்றினார்களே தவிர,ராவணனை வதம் செய்வதற்காக அல்ல.

அது என்ன நான்கு வகையான தர்மம்?

முதலில் வருவது சாமானிய தர்மம்.

அதாவது, ' பிள்ளைகள் பெற்றோரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? சீடன் குருவிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? மனைவி கணவனிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?' -இது போன்ற அனைத்தும் 'சாமானிய தர்மங்கள்' எனப்படும்.

இந்தச் சாமானிய தர்மங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீராமர்.

சாமானிய தர்மங்களை ஒருவர் ஒழுங்காகச் செய்துகொண்டு வந்தால் கடைசியில் ஒரு நிலை வருமாம்.அந்த நிலையில், 'இறைவன் திருவடி ஒன்றே நிரந்தரம் ... ஏனைய எதுவும் நிலையல்ல' என்ற எண்ணம் வருமாம்.

அதனால்தான் குலசேகர ஆழ்வார், ''இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'' என்று கூறினார்.

'கிருஷ்ண லீலா தரங்கிணி' என்ற நூலின் ஆசிரியர், ''கிருஷ்ணா!தாமரை போன்ற உன் பாதங்களைச் சுற்றி நான் தேன் வண்டு போல வந்து கொண்டிருக்க வேண்டும்''என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய தர்மத்திற்கு சேஷதர்மம்' என்று பெயர் . இந்த சேஷதர்மத்தைப் பின்பற்றி வாழ்ந்து காட்டியவன் லட்சுமணன்.

மூன்றாவது வகையான தர்மத்திற்கு 'விசேஷதர்மம் என்று பெயர்.

அதாவது தூரத்தில் இருந்தபடியே எப்போதும் இறைவன் நினைவாகவே இருப்பது 'விசேஷதர்மம்' ஆகும்.

சேஷ தர்மத்தைவிட விசேஷதர்மத்தை பின்பற்றுவது கடினம்.

இறைவனுக்கு அருகிலேயே இருந்து கொண்டு இறைவன் நினைவாகவே இருப்பதுகஷ்டமல்ல. ஆனால் தூரத்தில் இருந்துகொண்டு இறைவன் நினைவாகவே வாழ்வது என்பது கடினமான காரியம்.

அதைச்செய்து காட்டியவன் பரதன்.

நான்காவது தர்மம் 'விசேஷ தர தர்மம் ' எனப்படும்

இறைவ்னைவிட அவனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்வது விசேஷ தர தர்மம்ஆகும்.இதைக் கடைப்பிடித்துக் காட்டியவன் சத்ருக்கனன்

அதனால்தான் சத்ருக்கனன் பரதனுக்கு விடாமல் தொண்டுகள் செய்தான். இப்படி நான்கு வகையான தர்மங்களையும் கடைப்பிடித்துக் மக்களுக்குக் காட்டுவதற்காகத்தான் இறைவன் நான்கு பேர்களாக அவதரித்தான்.


ஆன்மீக வாதி கூறிமுடித்ததும் பிறவிகள் அனைத்திற்கும் ஒவ்வோர் அர்த்தம் இருக்கிறது என்பதை எல்லாம் இவர் அறிந்து வைத்திருக்கிறாரே என்று ஆச்சரியப்பட்டேன். ''ஐயா தசரதன் பிள்ளைகள் பிறப்புக்கு விளக்க மளித்தீர்கள், கிருஷ்ணபிரானின் நண்பர் குசேலரின் அத்தனை குழந்தைகளின் பிறப்பிலும் அர்த்தம் இருக்குமே அதையும் கொஞ்சம் கூறுவீர்களா'' என்றேன். ஆன்மீக போச்சாளர் வாயடைத்து நின்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# ஈழத்தில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான திருக்கேதீச்சரம்



பிறவிப்பிணியில் அகப்பட்டு அல்லற்படும் உயிர்களின் வினை நீங்கி ஈடேற்றம் அடைய உதவு முகமாக, முன்னோர்கள் ஆலயங்களைக் கட்டுவித்தனர். ஆலயங்கள் அறச்சாலைகளாகவும், அறிவை வளர்க்கும் நிலையமாகவும், மனிதகுலத்தை மேம்படுத்த வல்லவையாகவும் காணப்பட்டன.

இதனால் முன்னோர்கள் கோயில்களைக் கட்டி, அங்கு திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்தனர். பூசை, திருவிழா முதலியவற்றை ஏற்படுத்தி, நம் சிந்தனையை இறைவனைச் சாரும் நியைில் நிறுத்தினர். ஓர் செயலைச் செய்யும்பொழுது காலம், இடம், கருவி இவற்றின் துணைகொண்டு செயற்பட்டாலும், சில வேளைகளில் நாம் நினைப்பதும், நடப்பதும் வேறு வேறுவிதமாக அமைந்து விடுகின்றன. இதன்மூலம் மனித ஆற்றலுக்கு மீறிய ஒரு ஆற்றல் (Supreme Power) இருப்பதை மனிதகுலம் ஏற்றுள்ளது. இந்த ஆற்றலை ஆத்திகர்கள் இறைசக்தி எனப் போற்றினர். இறைசக்தியைப் பெற கோயில்கள் ஆதாரமாக இருந்தன. கோயிலும், அங்கெழுந்தருளியுள்ள விக்கிரங்களும், வழிபாட்டிற்குத் துணைபுரிந்து வாழ்வு மேம்பட உதவின. இவ்வாறான கோயில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. ஈழத்திலுள்ள கோயில்களைத் தொன்மைச் சிறப்புக் கொண்டவை, பாடல் பெற்றவை, கிராமியக் கோயில்கள் என மூவகையாகப் பாகுபடுத்தலாம். இவற்றுள் தொன்மைச் சிறப்பும், பாடல் பெற்ற திருத்தலமாகவும் விளங்கும் சிறப்பைப் பெற்ற கோவில்களுள் ஒன்றாகப் போற்றப்படுவது திரக்கேதீச்சரம்.

இலங்கையிலுள்ள மன்னார் என்னும் சிறுதீவு இருபகுதிகளைக் கொண்டது. இவ்விரு பகுதிகளையும் தலைமன்னார் என்றும், கோட்டை மன்னார் என்றும் குறிப்பிடுவர். தலைமன்னார் துறைமுகத்திலிருந்து சுமார் முப்பத்தைந்து கிலோமீற்றர் தூரத்தில், பாலாவித் தீர்த்தக்கரையில் திருக்கேதீச்சரம் என்னும் திருத்தலம் தற்காலத்தில் காணப்படுகின்றது. ஆதியில் மாந்தை, மாதோட்டம் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்ட நகரில், இக்கோயில் அமைந்திருந்தது. பின்னர்ஊரின் பெயரும், கோயிலின் பெயரும் ஒன்றாகித் திருக்கேதீச்சரம் எனப் பொதுப்பட வழங்கப்பட்டு வருகின்றது.

(தொடரும்)

## லெம்பேட்

# 200 வருட பழமைவாய்ந்த மகிழ மரத்தை உடைய பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயம்



(கடந்தவாரத் தொடர்ச்சி)

சக்கரியாசுக்கு கபிரியேல் தூதரையும், தொபியாசுக்கு இறப்பாயேல் தூதரையும், மரியாளுக்கு கபிரியேல் தூதரையும் அனுப்பினார். மிக்கேல் தூதரைப் பற்றி திருவெளிப்பாடு குறிப்பிடுகின்றது (12:07). கடவுளை செரூபீம் தூதர்கள் ஆராதித்த வண்ணமே இருக்கின்றார்கள் என்பதை இசையாஸ் 6:02ல் காண்கின்றோம். மனிதர் ஒவ்வொருவருக்கும் சிறப்பாக ஆயர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட காவற் தூதர்கள் உள்ளார்கள் என்று புனித பிரான்சீஸ் டீ சேல்ஸ் கூறுகின்றார். யேருசலேம் தேவாலயத்தில் உள்ள தூதரின் இடைக்கச்சையில் எழுதும் கருவி ஒன்று தொங்கிக்கொண்டு இருப்பதாக எசேக்கியல் இறைவாக்கினரும் இவ்வாலயத் தூதர்கள் மக்களின் அநாசார நடவடிக்கைகளை எழுதிக்கொண்டு இருக்கிறார்கள் என்றும் புனித பசில் குறிப்பிடுகின்றார்.

**புனித பிராசிஸ்கு சவேரியார் சிலை**

முகப்பின் வலது பக்கத்தில் வேதபோதக நாடுகளின் பாதுகாவலர்களில் ஒருவரான புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் சொரூபம் வைக்கப் பட்டுள்ளது.

**புனித தோமையார் சிலை**

முகப்பின் இடது புறத்தில் இந்தியாவின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் பன்னிருவர்களில் ஒருவரான புனித தோமையார் வலது கரத்தில் ஆயனுக்குரிய அடையாளமாகிய கோலுடனும், இடது கரத்தில் விவிலிய நூலைத் தாங்கியவாறும் காணப்படுகிறார். இவர் கி.பி. 53ம் ஆண்டிலே மலபாரில் உள்ள கிறங்கனூர் துறை முகம் வழியாக இந்தியாவை அடைந்தார். 29 பேருக்கு உயிரளித்தும், பசாசினால் பீடிக்கப்பட்ட 250 பேரை விடுவித்தும், தொழுநோயாளர் 330 பேரையும், 250 குருடரையும், 120 முடவர்களையும், 20 ஊமையர்களையும், வைத்தியர்களால் கைவிடப்பட்ட 280 தீராத நோயாளார்களையும் குணமாக்கி வாழ்வளித்தார். மேலும் 17,280 பிராமணர்களையும, 350 வைசியர்களையும், 4,289 சுத்ராஸ்களையும் (untouchables) புனித தோமாஸ் மனந்திருப்பி கிறிஸ்தவர்களாக்கினார்.

**மகிழமரம்**

[illegible] தமிழ் மக்கள் பாரிய கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்கும்போது மகிழமரக் கன்று ஒன்றை நட்டு மகிழ்ந்தார்கள். மகிழ மரமும் அதன் மலரின் மணமும் வித்தும் பலத்த விருத்தழயையும் பல ரோகங்களை நீக்கும் சக்தியையும் கொண்டவை.

*தாதுவைநன் மெய்யழகைச்*
*சக்தியை உண்டாக்கிவிடுஞ்*
*சீதளமென்பார் கலிங்கச்*
*செய்மருந்தாம் வாதை*
*மலத்தைவிழித் தோஷத்தை*
*வலவிஷத்தை வெப்பை*
*விலக்கும் மகிழம் விதை*
*வெகு வனலமாகு விரதமிக வுண்டா*
*முகர வரோசக முறியு மிகவு*
*மகிழத் துரு மலர்க்க*

என்கிறார் முகையதீன் ராவுத்தர் (பதார்த்க குண சிந்தாமணி)

ஏறத்தாழ 200 வருடப் பழமையான மகிழ மரம் ஒன்று புனித வெற்றிநாயகி ஆலய வளவினுள் தென் கிழக்குப் பகுதியில் செழித்தோங்கி வளர்ந்திருப்பதைக் காணலாம். இவ்வாலய கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டபோது இம்மகிழ மரம் நடப்பட்டிருக்க வேண்டும். இப்பாரம்பரிய வழக்கை உணர்ந்தவராக 2001ஆம் ஆண்டு தைமாதம் இடம்பெற்ற ஆலய அடிக்கல் நடும் வைபவ ஞாபகமாக சந்தியா பிளேசியஸ டயஸ் அவர்கள் ஆலயத்தின் வலது புறத்தில் சிறிய மகிழ மரக்கன்று ஒன்றை எவ்வித ஆடம்பரமுமின்றி நட்டு பராமரித்து வந்துள்ளார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரி பயிலுநர் நியமனம்

# சாய்ந்தமருது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அதிருப்தி

தென்கிழக்குப் பல்கலைக்கழக உள்வாரிப் பட்டதாரி மாணவர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தின்போது தம்மை கவனத்தில் கொள்ளாமல் நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பது குறித்து சாய்ந்தமருது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையான கண்டனத்தையும் கவலையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத்தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2006/2007 ஆகிய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டு கல்வியைத் தொடர்ந்த உள்வாரிப் பட்டதாரி மாணவர்களுக்கு அந்தப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த கல்விசார், கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம், சென்ற வருடம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு போன்ற காரணங்களால் 2011இல் இடம்பெற வேண்டிய இறுதி வருடப் பரீட்சை 2012 ஆம் ஆண்டுக்குப் பிற்போடப்பட்டது. இதனால் 2011 இல் பரீட்சை எழுதி வெளியேற வேண்டிய மாணவர்கள் 2012 இல் பரீட்சை எழுதி வெளியேற வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இதனால் அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிற்சி நியமனத்தில் 2011 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் வெளியேறிய பட்டதாரிகள் மட்டும் கணக்கில்கொள்ளப்பட்டதால் 2006/2007 கல்வியாண்டில் பதிவு செய்யப்பட்டு வெளியேறிய பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதேவேளை, 2006/2007 கல்வியாண்டுக்கு பதிவு செய்யப்பட்ட இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டப்படிப்பு முடிவுத் திகதி 2011 இல் அமைந்துள்ளதால் அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து 2011 இல் உள்வாரி பட்டதாரி மாணவர்கள் வெளியேறவில்லை. அதற்கு முற்றிலும் தகுதியானவர்கள் 2012 இல் முதற் பகுதியில் வெளியேறிய இம்மாணவர்களே. அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியமனம் கிடைக்காமல் போனதால் பெரும் வேதனையுடனும் மன உளைச்சலுடனும் காணப்படுகின்றனர். பாதிக்கப்பட்டுள்ள இந்தப் பட்டதாரி மாணவர்கள் பற்றி எவரும் கவனத்தில் கொள்ளாமல் இருப்பது இவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

எனவே அரசியல்வாதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பட்டதாரிப் பயிற்சி நியமனம் கிடைக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப் பட்ட மாணவர்கள் சார்பாக வேண்டுகிறோம்- என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவில் ரூ.190 மில். செலவில் அபிவிருத்தி

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவில் 190.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில்; அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான அங்கீகாரம் பிரதேச செயலகத்தில்நடைபெற்றகூட்டத்தின்போது வழங்கப்பட்டது.

தேசத்திற்கு மகுடம் திட்டத்தில் ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி பணிகள் தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களும் பிரதி அமைச்சர்களுமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மற்றும் பஸீர் சேகுதாவூத் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.ஜவாஹிர் சாலி, எம்.எச்.எஸ்.இஸ்மாயில், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.சத்தியானந்தி ஓட்டமாவடி பிரதேச சபைத் தலைவர் கே.பி.எஸ்.ஹமீட் நிதி திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகள், ஓட்டமாவடி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ. றியாஸ், மற்றும் பிரதேச திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது கல்வி அபிவிருத்திக்காக 68.5 மில்லியன் ரூபாவும், வீதி அபிவிருத்திக்கு 68 மில்லியன் ரூபாவும், சுகாதார அபிவிருத்திக்கு 13 மில்லியன் ரூபாவும், விவசாய அபிவிருத்திக்கு 18.3 மில்லியன் ரூபாவும், நீர்ப்பாசன அபிவிருத்திக்கு 20.5 மில்லியன் ரூபாவும், பிரதேச நிர்வாகச் செலவுக்கு 2.5 மில்லியன் ரூபாவுமாக ஆறு திட்டங்களுக்கு 190.8 மில்லியன் ரூபாவுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ் தெரிவித்தார். (வ)



## சட்டவிரோத மது உற்பத்தி நிலையம் முற்றுகை; மூவர் கைது

வென்னப்புவ பொலிஸ் பிரிவில் கம்மல - கிங்கங்கை வனப்பகுதியில் செயற்பட்டு வந்த சட்டவிரோத மது உற்பத்தி நிலையமொன்றை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

வென்னப்புவ பொலிஸ் விசேட தேடுதல் பிரிவால் நேற்று அதிகாலை 5 மணியளவில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றிவளைப்பின்போது 28 பெரல்கள், 450 மது போத்தல்கள், 48 கோடா பெரல்கள், 8 தண்டு சுழல் மற்றும் மது கொண்டுசெல்லப் பயன்படுத்தப்பட்ட படகு என்பவற்றுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## ஆயுள்வேத நிலையம் என்ற பெயரில் நிலாவெளியில் விபசார விடுதி முற்றுகையில் சிக்கினர் ஐவர்

திருகோணமலை, ஜூலை 9

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்வத்தை - நிலாவெளி பகுதியில் செயற்பட்டு வந்த விபசார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

ஆயுள்வேத சிகிச்சை நிலையம் என்ற பெயரில் குறித்த விபசார விடுதி இயங்கி வந்துள்ளது. உப்புவெளி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது குறித்த மேற்படி விபசார விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளது.

இந்த விபசார விடுதியில் இருந்து மூன்று ஆண்களும் இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் திருகோண மலை நீதிவான் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தப்படுவர். உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## ஆஸி. செல்ல முயன்ற 37 பேருக்கு ஜூலை 20வரை விளக்கமறியல்

மட்டக்களப்பு, ஜூலை 9

மட்டக்களப்பு வாகரை மாங்கேணியில் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்ட 40 பேரில் 37 பேரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

2 சிறுவர்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். மேற்படி 40 பேரையும் வாழைச்சேனை பொலி ஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர்.

பொலிஸாரின் வாக்குமூலத்தைக் கேட்டறிந்த மாவட்ட நீதிபதி ஏ.எம்.எம். றியாழ், ஒரு பெண் உட்பட 37 பேர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படியும் உத்தர விட்டார்.

14 வயது சிறுவனை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்ட அவர், 3 வயது சிறுமியை விடுதலை செய்தார்.

5 வயதான மற்றொரு சிறுவன் தாயாரிடம் எச்சரிக்கப்பட்டு ஒப்படைக்கப் பட்டதாக வாகரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜ.பி.ஜெயசீலன் தெரிவித்தார். (வ)

## தேவாலய குளத்தில் வீழ்ந்த சிறுவன் சாவு

பொத்துவில் - களுவாஞ்சிக்குடி - களுதாவளை பகுதியில் உள்ள தேவாலயத் தின் குளமொன்றில் தவறி விழுந்த 13 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குளத்தில் விழுந்து தத்தளித்த சிறுவன் மீட்கப்பட்டு உடனடியாக பாணம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி அவன் உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவத்தில் களு வாஞ்சிக்குடி- களுதாவளைப் பகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய ராஜ்குமார் நிவினிகரன் என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். (வ)

## வாழைச்சேனையில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை 9

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேத்தாழை பிரதேசத்தில் ஒரு தொகை ஆயுதங்கள் வெலிக்கந்தை சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த ஆயுதங்கள் மீட்கப் பட்டதாக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

பேத்தாழை, விநாயகபுரம் பகுதியில் மக்கள் நடமாற்றம் அற்ற பகுதியிலேயே குறித்த ஆயுதங்கள் மீட்கப் பட்டுள்ளன. மீட்கப்பட்ட ஆயுதங்கள் வாழைச் சேனை பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளும் இடம் பெற்று வருகின்றன.

ரி56 ரக துப்பாக்கி-1, கைக் குண்டு -1, மிதிவெடி உள்ளிட்ட பொருள்களே புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. இவைவிடுதலைப்புலிகளால் போர் நடைபெற்ற காலங்களில் மறைத்து வைக்கப்பட்டவையாக இருக்கலாம் என்று சிவில் பாதுகாப்புப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## 'தேசத்தின் மகுடம்' திட்டத்தின் கீழ்

# சம்மாந்துறை செயலர் பிரிவில் பெரியளவில் நடமாடும் சேவை

சம்மாந்துறை, ஜூலை 9

'தேசத்துக்கு மகுடம்' திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் சகல திணைக்களங்களினதும் பங்களிப்புடன் பெரியளவிலான நடமாடும் சேவைக்கான ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

இதனை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தர்கள் பிரிவுகள் தோறும் நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளை இனங்காணும் வகையிலான முன்னோடி நடமாடும் சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஏ.மன்சூர் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.அப்துல் லத்தீப், கணக்காளர் ஏ.எல். மஹ்றூப், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். [illegible] பிரதேச [illegible] சகல பிரிவுகளினதும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.



சம்மாந்துறை பிரதேசத்தை நான்கு பிரிவுகளாக பிரித்து நடைபெறும் இந்தநடமாடும் சேவையில் நேற்று முன்தினம் விளினையடி - 1,2,3. மலையடிக்கிராமம் - 1,2,3,4. புளக் ஜே கிழக்கு -1,2,3. கல்லரிச்சல் -1,2,3 புளக் ஜே மேற்கு - 1, 2 ஆகிய பிரிவுகளுக்கு நடைபெற்றது.

எதிர்வரும் 12ஆம் திகதி சம்மாந்துறை 1,2,3,4,5,6,7,8 தமிழ் பிரிவு 1,2,3,4, மட்டக்களப் புத்தரவை 1,2 ஆகிய பிரிவுகளுக்கு சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்திலும்.

எதிர்வரும் 14ஆம் திகதி சம்மாந்துறை 9,10,11,12, கருவாட்டுக்கல் - 1,2,3 வீரமுனை 1,2,3,4. ஆகிய பிரிவுகளுக்கு வீரமுனை ஆர்.கே எம். வித்தியாலயத்திலும் எதிர்வரும் 17ஆம் திகதி உடங்கா 1,2 சேந்நெல் கிராமம் - 1,2 மல்வத்தை 1,2,3,4 வளத்தாப்பிட்டி 1,2 மல்கம்பிட்டி ஆகிய பிரிவுக ளுக்கு சம்மாந்துறை பிரதேசத்திலும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பணிகளுக்காக புறப்பட்டுக்கொண்டிருக்கும்போது, எதிர்பாராதவிதமாக நண்பர் ஒருவர் குறுக்கிட்டு, உங்களுடைய சூழ்நிலையை கருத்தில் கொள்ளாமல் நேரத்தை வீணடிக்கலாம். பெற்றோருக்காக மருத்துவச் செலவுகள் இருக்கும்.

**இடபம்:** காலைப்பொழுதில் தேவையற்ற அலைச்சல் ஏற்பட்டபோதும், மாலையில் உபயோகமான விடயங்களை மேற்கொள்வீர்கள். புதிய தொழில் முயற்சிக்கான உங்களின் நடவடிக்கைகள் வெற்றி அளிக்கும்.

**மிதுனம்:** ஒவ்வொரு விவகாரங்களிலும் எது சரி எது தவறு என்று மனதில் ஒரு பட்டிமன்றமே நடக்கும். முதலில் மனதை ஒருநிலைப்படுத்திக் கொள்ளுங்கள். எதிர்பார்த்த பண வரவுகள், சற்று தாமதத்திற்குபின் வரும். வழக்கு சம்பந்தப்பட்ட வகையில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் தடை தாமதங்களைச் சந்திக்கலாம். முக்கியஸ்தர் ஒருவரின் நட்பு, மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும். வீட்டில் கூட்டு முயற்சியில் ஒரு காரியத்துக்குத் திட்டம் போடுவீர்கள். அலுவலகத்தில் சக ஊழியரின் செயற்பாடு அதிகம் யோசிக்க வைக்கும்.

**சிங்கம்:** உற்சாகமான சூழ்நிலை என்றபோதும் சில வகையில் மனச்சங்கடங்களைத் தவிர்க்க முடியாததாக இருக்கும். பெற்றோரின் செயற்பாடுகள் சற்று அதிகமாக யோசிக்க வைக்கும். பயணங்களில் கவனம் தேவை.

**கன்னி:** நீங்கள் எதிர்பார்த்த தகவல் கிடைக்கப்பெறும். அதனால், மனநிலை, உடல் நிலையில் உற்சாகம் அதிகரிக்கும். புதியவர்களின் சந்திப்பும் ஏற்படும். சில விவகாரங்களை பற்றி, கூடுதலான சிந்தனை காணப்படும்.

**நாளை**

ஆனி 26 செவ்வாய்க்கிழமை 10.07.2012
திதி: ஸப்தமி மு.இ. 09.57 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மா. 06.23 வரை
சுபநேரம்: 10.29- 11.59 வரை
ராகு காலம்: 02.29- 04.29 வரை

**துலாம்:** பல விடயங்களையும் போட்டு மனதை குழப்பிக்கொள்வீர்கள். மேலும், போட்டிகள் மற்றும் பொறாமைகள் கூடுதலாக இருக்கும். தவிர்த்துக் கொள்ளுதல் உங்களின் புகழை அதிகரிக்கும். உறவினர் ஒருவரின் வருகை இருக்கும். தொழில் நிமித்தமாக பயணம் ஒன்று ஏற்படும்.

**விருச்சிகம்:** சில விவகாரங்களில் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். அதே நேரத்தில் உங்களின் மகிழ்ச்சிகள் அடுத்தவர்களின் மனநிலையைப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ளுங்கள். பெரியோர்களின் வார்த்தைகளுக்கும் மதிப்புக் கொடுங்கள்.

**தனுசு:** சில காரியங்களை நேர்த்தியுடன் செய்து முடிக்கத் திட்டமிடுவீர்கள். ஆனால், அது முடியாமல் போகும். சுற்றியுள்ள நபர்களின் செயற்பாடுகளால் உங்களுக்கு அதிருப்தி ஏற்பட்டபோதும் இன்று வெளிக்காட்டிக் கொள்ளாதீர்கள். பயணங்களில் பாதுகாப்பை கவனத்தில் கொள்ளுங்கள்.

**மகரம்:** சில வகையில் மனக்குறைகள் இருந்தபோதும் சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. எதிர்பார்த்த நண்பர் ஒருவர் குறிப்பிட்ட நேரத்துக்கு வராததால், உங்கள் திட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டியிருக்கும்.

**கும்பம்:** வெளியில் உங்கள் செயற்பாடுகள் பாராட்டுக்குரியதாக இருந்தபோதும், மனதில் கவலைகள் சற்று கூடுதலாகவே இருக்கும். உடன்பிறப்புகளால் உதவிகளை எதிர்பார்க்கலாம். கடனாக கொடுத்த தொகை ஒன்று வந்து சேரும்.

**மீனம்:** சில விடயங்களை மேற்கொள்ள திட்டமிடுவீர்கள். ஆனால் தாமதமாக செயற்படுவீர்கள். உறவினர்களின் சந்திப்புகளால் மன உற்சாகம் அதிகரிக்கும். பண நிலையில் சற்று பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 1 | | | | | | 7 |
| 5 | | 4 | 9 | | | 1 | | |
| | 6 | | | | 1 | 8 | 3 | 4 |
| | | | | | | 7 | | |
| 3 | | 8 | 7 | 6 | 5 | 4 | | 9 |
| | | 5 | | | | | | |
| 1 | 5 | 6 | 3 | | | | 7 | |
| | | 7 | | | 8 | 3 | | 1 |
| 9 | | | | | | 5 | 4 | 6 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 6 | 2 | 3 | 9 | 8 | 5 | 4 |
| 9 | 2 | 8 | 4 | 1 | 5 | 6 | 7 | 3 |
| 3 | 5 | 4 | 6 | 8 | 7 | 9 | 2 | 1 |
| 4 | 9 | 1 | 3 | 5 | 6 | 2 | 8 | 7 |
| 6 | 8 | 3 | 1 | 7 | 2 | 5 | 4 | 9 |
| 2 | 7 | 5 | 9 | 4 | 8 | 3 | 1 | 6 |
| 1 | 3 | 9 | 8 | 2 | 4 | 7 | 6 | 5 |
| 5 | 6 | 2 | 7 | 9 | 1 | 4 | 3 | 8 |
| 8 | 4 | 7 | 5 | 6 | 3 | 1 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நீங்கா நினைவுகளுடன் நன்றி நவில்கின்றோம்



## அமரர் அருணாசலம் கோபாலரத்தினம்


அழுத விழி காயவில்லை
பொழுதெல்லாம் உம் நினைவே
எம் மனத்து ஆசைகளை
நிறைவேற்றி வைப்பதற்கு
நித்தமும் நீர் எமக்கு
ஒளி விளக்காய் வாருமய்யா!

எமது அன்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாகி எம்மோடு இனிமையாக வாழ்ந்து கடந்த (21.06.2012) அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத்தலைவர் அமரர் அருணாசலம் கோபாலரத்தினம் அவர்களின் மறைவைக் கேள்வியுற்று மனமுடைந்து எமது இல்லங்களுக்கு வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை நேரிலும், தொலைபேசி மூலமும், அஞ்சலி மூலமும் அனுப்பிய உள்ளங்களுக்கும், வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் மலர் வளையங்கள் அனுப்பி அஞ்சலி செய்த உள்ளங்களுக்கும் மற்றும் சகலவிதத்திலும் தோளோடு தோள் நின்று உதவிய அன்பர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைத்து இனிய உள்ளங்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

88, பருத்தித்துறை வீதி,
நல்லூர் மார்க்கட்.
(20183) (45.6.7)

**குடும்பத்தினர்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



## அமரர் Dr. சிதம்பரப்பிள்ளை கந்தையா

**[ஆயுள்வேத வைத்தியர்]**

கடந்த 09.06.2012 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் Dr. சிதம்பரப்பிள்ளை கந்தையா (ஆயுள்வேத வைத்தியர்) அவர்களின் அந்தியேட்டிக்கிரியை கடந்த 07.07.2012 சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (09.07.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தோடு நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அவரின் இறுதி வழியனுப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி தெற்கு,
கற்கேணியடி
(20180)(6-7-8)

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பில் மோசடி

# பெண் கொன்ஸ்டபிள் குற்றவாளியென தீர்ப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி, இருவரிடம் மோசடி செய்ததாக கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பெண் கொன்ஸ்டபிள் ஒருவரை குற்றவாளியென கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்திலேயே இடம்பெற்றதாகவும் நீதிமன்றில் தெரிய வந்தது.

ஜப்பானில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பேருவளை மற்றும் மாத்தளையைச் சேர்ந்த இருவரிடம் மேற்படி பொலிஸ் கொன்ஸ்டபிள் மோசடி செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

இந்தப் பெண் கொன்ஸ்டபிள் குற்றவாளி என்று அறிவித்த நீதிவான் கனிஷ்க விஜேரட்ண, அவருக்கான தண்டனையை ஓகஸ்ட் 10 ஆம் திகதி அறிவிப்பதாக தெரிவித்தார். (வ)

# டி.என்.எஸ்.சேன்ஜர் வைரஸால் கணினிகளுக்கு இன்று பாதிப்பு

கொழும்பு, ஜூலை 9

டி.என்.எஸ்.சேன்ஜர் எனப்படும் வைரஸால் பாதிக்கப்படவுள்ள கணினிகள்மூலம் இன்று இணையத் தொடர்புகளைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்ளும் என்று இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.


மூன்று மாதங்களுக்கு முன்னர் டி.என்.எஸ்.சேன்ஜர் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரோகண பல்லியகுரு தெரிவித்தார்.

இந்த வைரஸ் கணினிகளில் உள்ள டி.என்.எஸ் தரவுகளை மாற்றிவிடும் என்றும் அவ்வாறான போலி டி.என்.எஸ். தரவுகளை அகற்ற எப்.பி.ஐ. நிறுவனம் இன்று முதல் நடவடிக்கை எடுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அதனால் இந்த வைரஸ் இருக்கும் கணினிகளில் இன்று இணையத் தொடர்புகளைப் பெறுவதில் சிக்கல் ஏற்படும் என்று அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (வ)

# வெட்கப்படும் விடயமாகிறது இலங்கையில் வாழ்வதென்பது

## பொன்சேகா தாக்கு



கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் வாழ்வது வெட்கப்பட வேண்டிய விடயமாக மாறக்கூடிய அபாயம் நிலவி வருகின்றது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வத்தளை என்டேரமுல்ல பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

மேல் மட்ட அரசியல்வாதிகள் மட்டுமன்றி நடுத்தர மட்ட மற்றும் கீழ்மட்ட அரசியல்வாதிகளும் ஒரேவிதமாகவே பயணிக்கின்றனர்.

கஹாவத்தையில் தாயையும் மகளையும் கொலை செய்தமை, தங்காலையில் வெளிநாட்டு பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை, கட்டுவனவில் தாயையும் மகளையும் கொலை செய்தமை, தங்காலை மற்றும் அக்குரஸ்ஸ பகுதிகளில் சிறுமிகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை போன்ற சம்பவங்கள் நடுத்தர அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்பட்டவை.

மேல் மட்ட அரசியல்வாதிகள் இந்த நாட்டை சுரண்டிச் சுரண்டி திகட்டிய பின்னர், நடுத்தரமட்ட அரசியல்வாதிகளுக்கு நாட்டு மக்களை சுரண்டுவது திகட்டாது. அவ்வாறு உயர்மட்ட அரசியல்வாதிகள் நாட்டை சுரண்டி இறந்து போனால் இந்த நடுத்தரமட்டத்திலான அரசியல்வாதிகள் நாட்டை பொறுப்பேற்றுக் கொள்வார்கள்.

எனவே இந்தக் குற்றச் செயல்கள் தொடர்ச்சியாக இடம்பெறும். இது ஓர் ஆபத்தான நிலைமையாகும், இன்னும் சில காலத்தில் இலங்கையில் வாழ்கின்றோம் என்று தெரிவிப்பதே வெட்கப்பட வேண்டிய விடயமாக மாற்றமடையும்-என்றார். (வ)

# படையினருக்கான பயிற்சிகள் தமிழக எதிர்ப்பால் நிறுத்தப்படாது

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 9

இலங்கை விமானப் படையினர் இந்தியாவில் பயிற்சி பெறுவதற்கு தமிழ் நாட்டு அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பினாலும், படையினர் தொடர்ந்தும் இந்தியாவுக்குப் பயிற்சிக்கு அனுப்பப்படுவர் என்று அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவித்ததாவது:-

இலங்கை விமானப் படையினரின் வெளிநாட்டில் உள்ள மிகப்பெரிய பயிற்சித் தளமாக இந்தியா உள்ளது. இந்தநிலையில், தமிழ்நாட்டில் தாம்பரம் விமானப் படைத்தளத்தில் ஒன்பது விமானப் படையினருக்குப் பயிற்சி அளிக்கப்படுவதற்கு எதிர்ப்புக் கிளம்பிய விவகாரம் ஒரு தீவிரமான விடயமே அல்ல.

ஏனெனில், தற்போது இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் 1500 தொடக்கம் 2000 வரையிலான இலங்கை படையினர் பயிற்சி பெற்று வருகின்றனர். இது பிராந்திய அரசியல் தலைவர்களினால் அரசியல் நோக்கத்துடன் கிளப்பப்பட்டுள்ள பிரச்சினை. இது இரு நாடுகளினதும் இராணுவ ஒத்துழைப்பில் பாதிப்பை ஏற்ப டுத்தாது.

> தற்போது இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் 1500 தொடக்கம் 2000 வரையிலான இலங்கைப் படையினர் பயிற்சி பெற்று வருகின்றனர்



தாம்பரத்தில் பயிற்சி பெற்றுவந்த ஒன்பது இலங்கை விமானப் படையினரையும் இந்திய மத்திய அரசு, பெங்களூருக்கு மாற்றியதற்கு உள்ளூர் அரசியல் நெருக்கடிகள் தான் காரணம்-என்றார்.

இதேவேளை, இலங்கை விமானப்படையினர் இந்தியாவின் எந்த இடத்திலும் பயிற்சி வழங்கக் கூடாது என்று தமிழகத்தில் தொடர்ச்சியாக தமிழக அரசியல்வாதிகளால் வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

# சுவிஸில் கணக்குகளை பேணுவோர் விவரத்தை வெளியிடக் கோரிக்கை

சுவிற்ஸர்லாந்தில் கணக்குகளைப் பேணி வருவோர் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று ஊழல் ஒழிப்புக்கான குரல் அமைப்பின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகள் மற்றும் நிறுவனங்கள் சுவிற்ஸர்லாந்து வங்கிகளில் கோடிக் கணக்கான ரூபா பணத்தை வைப்பிலிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு வைப்பிலிடப்பட்ட பணம் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட வேண்டும்.

தேசிய வருமானத்திணைக்களம், நிறுவனப் பதிவாளர் திணைக்களம் மற்றும் செலாவணி கட்டுப்பாட்டாளர் திணைக்களம் ஆகியவற்றினால் இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். தங்களது பெயர்களில் சுவிஸ் வங்கிகளில் கணக்குகள் பேணப்படவில்லை. வேறு நபர்களின் பெயர்களில் வங்கிக் கணக்குகள் பேணப்பட்டு வருகின்றன.

இதனால் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் நிலைமை நீடித்து வருகின்றது. ஊழல் மோசடிகளினால் ஈட்டப்பட்ட கறுப்புப் பணம் இரகசியமான முறையில் சுவிஸ் வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை வைப்புச் செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய எந்தவொரு சட்ட திட்டங்களும் பேணப்படவில்லை. எனவே இது தொடர்பில் லஞ்ச அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.-என்றார். (வ)

# அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய அவசியமில்லை

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

நாட்டில் அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. தெற்கில் மக்கள் வாழ்க்கை சுமுக நிலைக்குத் திரும்பியுள்ளது. எனவே அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்தும் நீடிக்க வேண் டிய அவசியமில்லை.

எனினும், அவசரகாலச் சட்டத்தை நீக்குவது குறித்து அரசு இன்னமும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாட்டை ஆட்சி செய்வது ஜனநாயகத்துக்கு விரோதமானது.

முறையாக அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு நாம் அரசிடம் கோருகின்றோம். 'சனல்-4' காணொலி மற் றும் தருஸ்மன் அறிக்கை தொடர்பில் இராஜதந்திர ரீதியில் அரசு இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.-என்றார் அத்தநாயக்க. (வ)

# ஆஸிக்கு இலங்கை ஆலோசனை

கொழும்பு, ஜூலை 9

ஆஸ்திரேலிய அரசு தமது குடிவரவுத் சட்டதிட்டங்களை அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை அரசு ஆலோசனை வழங்கியுள்ளது.

இலங்கையில் இருந்து அதிகளவான அகதிகள் ஆஸ்திரேலியாவுக்கே செல்கின்றனர். ஆஸ்திரேலியாவின் சட்டத் திட்டங்கள் சட்டவிரோத குடிப் பெயர்வுக்கு சாதகமாக இருக்கிறது.

எனினும் பிரிட்டன் போன்ற நாடுகள் தமது சட்ட திட்டங்களை இறுக்கப்படுத்தி இருப்பதால், அங்கு செல்லும் அகதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்படுகிறது.

எனவே அகதிகள் விடயத்தில் ஆஸ்திரேலியா அரசு தமது சட்டதிட்டங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளியுறவுகள் துறை அமைச்சு என்பன ஆஸ்திரேலியாவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளன.

> பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளியுறவுகள் துறை அமைச்சு என்பன ஆஸ்திரேலியாவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளன

இதேவேளை, சட்டவிரோத ஆள்கடத்தல் செயற்பாடுகளைத் தடுக்க அரசு உச்சக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (வ)

# தாய்மார் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வதைத் தடுக்கச் சட்டம்

கொழும்பு, ஜூலை 9

தொழில்வாய்ப்புக்காக 18 வயதுக்குக் குறைவான குழந்தைகள் உள்ள தாய்மார்கள் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.

அவ்வாறான குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

சட்டம் வகுக்கப்படுவதற்கு முன்னர் சமூகத்தை தெளிவுபடுத்தி வேண்டுகோள் ஒன்றை முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி சேவைகள் அமைச்சுடன் ஒன்றிணைந்து அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

18 வயதுக்குக் குறைவான குழந்தைகள் உள்ள தாய்மார்கள் வேலை வாய்ப்புக்கள் பெற்று வெளிநாடு செல்வதைத் தவிர்க்குமாறு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vacancy

Plumber, Electrician Maintenances Supervisor (Plumbing, Electrical, A/C) மூன்று வேலையும் தெரிந்தவர்கள் சுயவிவரக்கோவையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு வரும் புதன்கிழமை (11.07.2012) பிற்பகல் 3 மணியில் இருந்து 6 மணிக்கு இடையில் நேரில் சமுகம் அளிக்கவும். **Tilko Jaffna City Hotel 70/6, K.K.S. Road, Jaffna**

(சி/1280)(6-7-8)

# 45 ஆவது நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1988 ★ 01 ★ 11



ஆண்டவன் அடியில் 2012 ★ 05 ★ 26

அமரர் **தனபாலசிங்கம் சங்கர்**

எங்கள் பாசமிகு சங்கரே - நீ எம்மை விட்டு எங்கு சென்றாய்
அன்னை மடியில் அவதரித்து - இந்த
உலகத்தில் நல்ல மாண்புமிகு மகனாய் - நீ
இருந்து வந்தாய் சங்கர் - உன்
புன் சிரிப்பும் குறும்புத்தனமும் - எங்கள்
உள்ளத்தில் என்றும் அணையாத தீபமாய்
ஒளிர்ந்து கொண்டு இருக்குதடா - சங்கர்
பெற்ற தாய், சகோதரம் இருந்தும் - எம்முடனே
ஓடோடி வருவாயே சங்கர் - இனிமேல்
எப்போது எம்முடன் ஓடி வருவாய் சங்கர்
எம்மையெல்லாம் தவிக்க வைத்து விட்டு நீ
தனியே சென்று விட்டாயே - உன்
ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் வேண்டி நிற்கின்றோம்.

இன்று (09.07.2012) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

உன் பிரிவால் துயருறும்:
சிறியதாய் குடும்பத்தினர்
(நிசாம் புண்ணியம்)

வீரபாலன் தோட்டம்,
நாவெட்டி மேற்கு, நாவெட்டி

(F/1278)(6-7-8)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில
BY. த.விக்கினேஸ்வரன் ஆசிரியர் 426, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம், ரிளக் வீதி, சங்கானை.
T.P 077 675 1649

(20187)(45.6.7)

## கடை விற்பனைக்கு

யாழ். ஆனைப்பந்திச் சந்தியில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள கடை ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 8494 917

(20184)(45-6-7)

## T V மலிவு விற்பனை

Sony (Japan) Flat WagaT Vகள் 14"-10000/=, 21"-13000/=, 29"-15000/=,
அம்பிளிபயர் - 12000/=, 12"Box 12000/=,
ரேடியோ கசெற் - 2000
தொடர்புகளுக்கு: 077 044 0570 (அப்பளம்)
சொனி றேட்றசென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக,
56, K.K.S. வீதி, சுன்னாகம்.

(20189)(45-6-7)

## வாடகைக்கு

245, பலாலி வீதி, கந்தர்மடம்
(இந்திய தூதரகத்திற்கு முன்பாக)
20' x12' கட்டடம் வாடகைக்கு விடப்படவுள்ளது.
தொடர்பு : 077 2840 177, 021 222 0255

(20186)(45.6.7)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, வாகையடிச்சந்திக்கு அண்மையில் தென்னை மரங்களும், நன்னீர்க்கிணற்றுடன் கூடிய 10 பரப்புக்காணியும் கச்சாய் றோட், அல்லாரை (தம்பு தோட்டம்)இல் நன்னீர் கிணற்றுடன் தோட்டம் செய்வதற்கு உகந்த 16பரப்புக்காணியும் விற்பனைக்கு உண்டு.


T.P : 072 5000501, 021 2270271

(16110)(6-7-8)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 ★ 06 ★ 1966



மறைவு 09 ★ 07 ★ 02010

## கந்தையா சிவகுமார்

திதி: திரயோதசி

எங்கள் அன்புச் செல்வமே
காலன் உங்களைக் கவர்ந்து சென்று
ஈராண்டு சென்றாலும் உங்கள்
திருமுகத்தை எங்களால் மறக்க முடியவில்லை
செல்வமே வாழ்ந்தோம் சிலகாலம்
உங்களோடு, வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்
மிகுதிக்காலம் உங்கள் நினைவோடும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு என்றும்
எங்கள் நெஞ்சோடு இருக்கும்

சிவா இல்லம்
மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவில்
**குடும்பத்தினர்**

(20178)(45.6.7)

# மூன்றாம் மாத நினைவலைகள்

மலர்வு 18 . 12 . 1946



உதிர்வு 09 . 04 . 2012

அமரர்
## தம்பிராசா விக்கினேஸ்வரன்

[ஓய்வு நிலை ஆசிரியர், யா /அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை]
திதி: திருதியை

புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரதேசசபை வீதி, கொல்லங்கலட்டியை நிரந்தர வதி விடமாகவும், ஊரெழுவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அமரர் தம்பிராசா விக்கினேஸ்வரன் அவர்களின் மூன்றாம் மாத நினைவலைகள்.

தித்திக்கும் உன் ஞாபகங்கள் ஈரவிழிகளில்
நின் கால் தடம் தேடி அலைகின்றேன்
அன்பின் கணவனே உங்கள் விகடபேச்சுகள்
கேட்டு காலாண்டு கழிந்தும் கலங்குகிறேன்.

ஊரெழு


தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி

(20188) ) (45.6.7)

# கண்ணீர் அஞ்சலி

அமரர் **செல்லையா இலகுப்பிள்ளை**

( இளைப்பாறிய அதிபர், புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாலயம், திருநாவுக்கரசு வித்தியாலயம்)



புங்கைநகர் தந்த புனிதமிகு ஐயா
இறுப்பிட்டிக் கிராமத்தின் மைந்தனாய் பிறந்தாய்
மாணவரின் கல்விக்காய் ஆசிரியராய், அதிபராய் பல
கல்விச்சாலையில் கடமையாற்றினாய்
நிமிர்ந்த நடை நேர் கொண்ட பார்வை
நானிலம் போற்றும் கல்விமான்
நல்லறிவுடனே நாணயமாய் உழைத்த அதிபராம்

இறுப்பிட்டி கொம்மாபிட்டி ஸ்ரீ விரகத்திவிநாயகர்
ஆலயத்தில் பல ஆண்டுகள் நிர்வாகியாய் இருந்தாய்
ஆலயத்தின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டாய்
ஆலய கும்பாபிஷேகம் நடைபெற தன்னாலான
பல உதவிகள் புரிந்தாய்
அன்னதான மண்டபம் கட்டினாய் கும்பாபிஷேகத்தை
நேரில் பார்க்க ஆவலாய் இருந்தாய்
ஒளிப்படத்தின் மூலம் பார்த்து சந்தோஷப்பட்டாய்

இறுப்பிட்டி சனசமுக நிலையத்தில் பல ஆண்டுகள்
நிர்வாகியாக இருந்து செயலாற்றினாய்
கோயில் விழாக்கள் சமூக கலாசார
நிகழ்வுகளில் கலந்து கொண்டாய்
புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும்
ஊர் பற்றை மறவாதவனாய் வாழ்ந்தாய்
விநாயகர் பாதம் அடைந்துள்ளாய்

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

புங்குடுதீவு - 04

இறுப்பிட்டி மூத்தநயினார்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினர்,
இறுப்பிட்டி சனசமூக நிலையத்தினர்.

(20190)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

# நில அபகரிப்புப் போராட்டத்துக்கு வலுவூட்ட லண்டனிலும் கவனயீர்ப்பு

## பிரிட்டன் வாசஸ்தலத்துக்கு முன்பாக



மன்னார் மாவட்டத்தில், இலங்கை அரசால் தமிழ் மீனவர்கள் மீது நடைமுறைப்படுத் தப்பட்டு வரும் பாஸ் நடைமுறைக்கு எதிராகவும் மற்றும் நில அபகரிப்புக்கு எதிராகவும் இடம்பெற்ற போராட்டத் திற்கு வலுவூட்டல் லண்டனிலும் கவனயீர்ப்பு போராட் டம் இடம்பெற்றது.

நாடுகடந்த தமிழீழ அரசின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் பிரிட்டன் பிரதமரின் வாசஸ்தலத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

நில அபகரிப்புக்கு எதிராக தாயகத்திலும் புலத்திலும் மேற்கொள்ளப்படும் நியாயப் பாடுகளை விளக்கி பிரிட்டிஷ் பிரதமருக்கான மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஊடாக புலம்பெயர் தமிழர்களின் தோழமையுணர்வைத் தாயக மக்களுக்கு தெரிவிக்கவும், போராட்டத்தின் நியாயப்பாடுகளை வெளியுலகிற்கு கொண்டு செல்லவும், இந்தக் கவனயீர்ப்பு போராட்டங்கள் சமாந்திரமாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

மற்றைய நாடுகளிலும் இவ்வாறான போராட்டங் களை முன்னெடுப்பதற்கு இளையோர் அமைப்புகள் தயாராகி வருகின்றன. (வ)

# சத்தியசாயி நிறுவனங்களின் தலைவர் யாழ். வருகை


யாழ்ப்பாணம், ஜூலை 9

சர்வதேச ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனங்களின் தலைவரும்-பிரசாந்தி சபையின் தலைவருமான டாக்டர் நரேந்திர நாத் ரெட்டி நாளை மறுதினம் புதன்கிழமை யாழ். வருகின்றார்.

தெய்விகத்தின் உருவ- அருவநிலைகள் பற்றி அவர் ஆன்மிக உரை நிகழ்த்தவுள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அன்றைய தினம் மாலை 4 மணிக்கு இந்த ஆன்மிக உரை இடம்பெறும். யாழ். சத்தியசாயி சேவா நிலையம் இதற்கான ஏற்பாடுகளை எடுத்துள்ளது. (வ-50)

# கே.கே.எஸ். வீதி அகலிப்பு துரிதம்



வலி.வடக்கு, ஜூலை 9

யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை வீதி அகலிப்புப் பணியைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சிவன்கோயிலடியில் உள்ள வர்த்தக நிலையங்கள் இடிக்கப் பட்டு வீதி அகலிப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட கடைகள் இந்த வீதி அகலிப்புப் பணிக்காக உடைத்து அகற்றப்படுகின்றன. இதனால் யாழ்ப் பாணம் சிவன்கோயிலடியில் இருந்து இந்த வீதி மூடப் பட்டுள்ளதுடன் கடைகள் இடிக்கப்படும் பணிகள் முழு வீச்சில் இடம்பெறுகின்றன.

இதன்காரணமாக இந்தக் கடைத்தொகுதியில் கடந்த சில தினங்களாக வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப் பட்டுள்ளதுடன் இந்த வீதியூடாகஇடம்பெற்றபோக்கு வரத்தும் இடைநிறுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை அகலிப்புக்கு வேண்டிய அளவுக்குக் கடைக் கட்டடங்கள் உடைக்கப்படுகின்ற அதே வேளை குறிப்பிட்ட கடைகளின் ஏனைய பகுதி களை திருத்தும் பணிகளும் உடனடியாக வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்க தாகும். (வ-86)

# கொழும்பிலிருந்து தங்கம் கடத்தியவர் சென்னையில் கைதானார்

சென்னை, ஜூலை 9

கொழும்பிலிருந்து சென்னைக்கு விமானம் மூலம் கடத்தி வரப்பட்ட ரூ.25 லட்சம் பெறுதியுள்ள தங்க நகையை இந்திய சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

சென்னையைச் சேர்ந்த காஜா மொஹிதீன் (வயது 38) என்பவர் கொழும்பிலிருந்து தனியார் விமானம் மூலம் சென்னை வந்தார்.

பெரிய சூட்கேஸுடன் கிரீன் சிக்னல் வழியாக அவர் செல்வதற்கு முயற்சித்தார். அப்போது அவர் மீது சந்தேகப்பட்ட சுங்கத்துறை அதிகாரிகள் அவருடைய சூட்கேஸை சோதனையிட்டனர்.

அந்தச் சோதனையின் போது சூட்கேஸுக்குள் காஜாமொஹிதீன் மறைத்து வைத்திருந்த சுமார் 25 லட்சம் மதிப்புள்ள 900 கிராம் எடையுள்ள தங்கநகைகள் இருந்தது தெரியவந்தது.

நகைகளைச் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும் அவர் மீது வழக் குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.(வ)

# சமய சந்நிதிகளில்

காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம் பெறவுள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.(வ-50)

* * *

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் உள்ள வைரவர் ஆலய வருடாந்த பொங்கல்விழா ஆனிமாத கடைசி வெள்ளிக்கிழமை இடம்பெறும். (வ-9)

* * *

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயிலின் வருடாந்த திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல்10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வ)

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஊடாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலம் B.A. தமிழ் சிறப்புப்பட்டம்

✱ க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி
✱ இம் மாதம் 15 ஆம் திகதிக்குள் பதிவுகளை மேற்கொள்பவர்கள் எதிர்வரும் டிசெம்பரில் நடைபெறும் பரீட்சையில் தோற்றமுடியும்

தொடர்புகளுக்கு:

தென்மராட்சியில்
பாரதி இன்ஸ்ரிரியூட்,
மீசாலை மேற்கு, மீசாலை
077 8051173

யாழ். நகரில்
ஞானக்குழந்தை இல்லம்,
யாழ். வீதி, யாழ்ப்பாணம்
077 5835372

(20218)(6-7-8)

விற்பனைக்கு உண்டு

135 மெசி பேர்குஷன் DL Model 270 -xxxx என்ற தொடர் இலக்கத்தையுடைய நல்ல நிலையிலுள்ள உழவு இயந்திரம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 4275557

(19279)(6-8)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 ★ 12 ★ 1937



மறைவு 24 ★ 06 ★ 2008

## திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்

(கிளுவானை ஒழுங்கை, கோப்பாய்)

திதி: ஆனித்திங்கள் அபரபக்க சஷ்டி

அன்புத் தெய்வமே ஆண்டு நான்கு
ஆனாலென்ன நூறானாலும் மறவாது
நினைவில் தியானிக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்தனை செய்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிளுவானை
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

குடும்பத்தினர்.

(20125)(45.6.9)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"



## மரியநாயகம் றொய்ஸ் கொண்ஸ்ரன்ரைன்

(மதன்)

தோற்றம் 02.12.1966

மறைவு 09.06.2012

எங்கள் குடும்பத்தின் தலைச் சுடரே
வாழ்வில் வீசியோய்ந்த தென்றல் காற்றேஉன்
நினைவுகளால் ஓடும்விழி நீர் ஓயவில்லை
மறுவுலக வாழ்வினிலே உனை
மறுபடியும் காணும் நம்பிக்கையில்
மண்ணுலக பயணத்தில் எம்
வாழ் நாளைக் கழிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள் - குடும்பத்தினர்
பெரியம்மா, சின்னையா - குடும்பத்தினர்.
24/5, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

(20126)(45.6.7)




உங்கள் முன்னேற்றத்தின் ஊன்றுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank
Nations Leasing

(சி/1198)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் வேலைக்குப் போகும் பெண்களா...

## உங்களுக்காகச் சில ஆலோசனைகள்



அருவி

தொழில் என்பது ஒருவருடைய லட்சியக் கனவு. முதலில் அந்தத் தொழிலை நாம் மானசீகமாக நேசிக்க வேண்டும். நாம் தொழில் செய்யும் நிறுவனமோ,அலுவலகமோ அதைப் பற்றி நீங்கள் முழுதாக அறிந்திருக்க வேண்டும்.

பணி செய்யும் இடத்தில் எப்போதும் பிரச்சினைக்குரியவர்களாக இல்லாமல் மற்றவர்களின் மதிப்புக்கும் மரியாதைக் கும் உரியவர்களாக உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ளுங்கள். அதிகம் அலட்டிக் கொள்ளாமல் சக பணியாளர்கள் மத்தியில் எப்போதும் ஒரு புன்சிரிப்பை மட்டும் பதிலாக்கிக் கொள்ளுங்கள்.

காலையில் வேலைக்கென்று புறப்பட்டால் சொந்தப் பிரச்சினைகளையும் அதன் பாதிப்புக்களையும் வீட்டோடு விட்டு விட்டு புதியவர்களாக பணியிடத்துக்குச் செல்லுங்கள் .

பணியின் ஆரம்பத்திலேயே அன்று செய்ய வேண்டிய வேலைகளை திட்டமிடுங்கள். திட்டமிட்ட பணியை அன்றே செய்து முடித்து விடுங்கள். வேலைக்கு சேர்ந்த முதல் நாள் உங்களது மனதில் இருக்கும் ஈடுபாடும் உற்சாகமும் துடிப்பும் எப்போதும் உங்களோடே தொடர வேண்டும்.

உங்கள் திறமையை,புத்தி சாதுரியத்தை,திட்டமிடலின் நேர்த்தியை முடிந்த பொழுதெல்லாம் செய்து காட்டுங்கள். ஆனால் நீங்களாக உங்கள் திறமை பற்றி மூச்சுக் கூட விடக் கூடாது.உங்கள் திறமையை உங்கள் செயல்களின் மூலம் மேலதிகாரிகள் இனங்கண்டு பாராட்டும்படி உங்கள் பணியின் விளைவுகளைக் காட்டுங்கள். உங்களுக்கு மேல் இருக்கும் உயர் அதிகாரிகளுக்கு மரியாதை கொடுப்பவர்களாகவும்,உங்களை வழிநடத்துபவரை மானசீகமாக மதிப்பவராகவும் இருக்க முயற்சி செய்யுங்கள்.

நல்ல வாய்ப்புகள் கிடைத்து புதிய பணிக்குச் செல்லும் போது முறையாக விலகிக் கொள்ளுங்கள். நீங்கள் முதல் பணி செய்த இடம் பற்றி யாரிடனும் விமர்சிக்கவோ, குறைகூறவோ வேண்டாம் அப்படி நீங்கள் செய்தால் உங்களின் கடந்த காலம் பற்றி நீங்களே விமர்சிப்பது போல் ஆகும் .

# சமுதாயப் பார்வையில் பெண்



எமது சமுதாயத்தில் பெண்ணானவள் இரண்டாந்தரப் பிரஜையாகவே நோக்கப்படுகின்றாள். மனிதவர்க்கம் மாண்புமிகு வளர்ச்சியையும், உயர்ச்சியையும் நோக்கிச் சென்று கொண்டிருந்தாலும், அந்த வர்க்கத்தின் பிரதான பாத்திரமான பெண்ணினம் சமூகத்திலே பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன், சமூக நடி பங்கில் அவர்களது உணர்வுகளும், உணர்ச்சிகளும் உறைந்து போய்க் கொண்டிருக்கின்றன. இதற்கு காரணந்தான் என்ன? ஆணும் பெண்ணும் சேர்ந்திருக்கும் மனித வர்க்கத்தில் பெண்ணுக்கு மட்டும் இத்தகைய நியதி விதிக்கப்பட்ட ஒன்றா? ஒரு பெண்ணானவள் வீட்டுக் குரியவள், அடக்கத்துக்குரியவள் பொறுமைக்குரியவள் மென்மைக்குரியவள் என்று வேலிக் கயிறுபோன்று தாலிக்கயிற்றுடன் தலைகுனிய வைப்பது ஏன்? சமத்துவம், சகோதரத்துவம் பேசும் சமூகத்திலே இத்தகைய வேறுபாடுகள் இன்றும் நாம் கண்கூடாக நோக்கக்கூடிய ஒரு விடயமாகும்.

ஆணாதிக்க சமுதாய அமைப்பின் தலையெடுப்பில் பெண்களுக்கும், அவர்களது உணர்வுகளுக்கும் பால்ரீதியான ஒடுக்குமுறை எந்த சமூகத்தைப் பொறுத்தவரையிலும் ஏதோ ஓர் மூலையில் துளிர்விட்டுக்கொண்டே இருக்கின்றது. ஆணாதிக்க சுகங்கண்ட ஆடவரும், பெண்ணடிமைத் தனத்தை பெருமையாகக் கருதும் பெண்டிரும் இருக்கும்வரை சமுதாயத்திலே பெண்கள் வாழ்க்கை முறையில் மட்டுமின்றி, கல்வி அறிவு நடைமுறையிலும் கூட பின்னோக்கிச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்களே உள்ளன. ''அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு'' என்ற வகையில் பெண்களைக் கிணற்றுத் தவளைகளாக்கும் சமூகத்தின் பிடிக்குள் இருந்து மீண்டு, பெண்கள் இன்னும் முழுமையாக விடுதலைபெற வேண்டியதான சிந்தனைகள் வளரவேண்டும்.

எமது சமுதாயத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். உடல் உழைப்பிற்கேற்ற தகுந்த ஊதியத்தினைப் பெற்றுக்கொள்ளாமையுடன், வழியிலும் தெருவிலும் ஏன் அலுவலகங்களிலும்கூட வெறும் காட்சிப் பொருளாகவும், போகப் பொருளாகவும் நோக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல் பாலியற் பண்டமாகவும், உணர்வற்ற இயந்திரமாகவும், உணர்வுகளுக்கும் தாபங்களுக்கும் உரமளிக்கும் உலக்கைகளாகவும் பெண்கள் சமுதாயத்தில் நோக்கப்படுகிறார்கள். காலைச் சுற்றிய நாகம்போல பெண் கற்பைச் சூறையாட எத்தனிக்கும் கூட்டம் இருக்கும் வரையில் பெண்கள் சமூகப் பார்வையில் வெறும் அடிமைகளே.

கற்புநிலை என்ற விடயத்தை எடுத்து நோக்கினால்கூட அது பெண்ணுக்கு மட்டும்தான் என்று சமூகம் வகுத்து வைத்திருக்கின்றது. ''கற்பிழந்தவள்'' என்று கூறியும், காறித்துப்பியும் சிரிக்கும் சமுதாயம் ''கற்பிழந்தவன்'' என்று கூற மறுப்பதேன்? திருமணச் சந்தையில் பேரம் பேசப்படும் பெண்ணை மனைவி என்ற அந்தஸ்து நிலைக்குரியவளாக்கி நோக்கும் சமுதாயம், அவள் தாய்மை அடையத் தவறும் நிலையில் மலடி என்று மறுநிமிடமே கூறிவிடுவது ஏன்? இதைவிடக் கொடுமையானது எதுவெனில், விதிவசத்தால் சில சந்தர்ப்பங்களில் பெண்ணானவள் கணவனை இழந்துவிடும்போது ''விதவை'' என்ற பெயரில் கட்டிய தாலியும் அறுக்கப்பட்டு, பொட்டும் பூவும் பறிக்கப்பட்டு ஆசைகளும் உணர்வுகளும் அகழிக்குள் அமுக்கப்படுவது என்பவையெல்லாம் சமுதாயத்திலே பெண்களது தேவைகளும், உணர்வுகளும் அவமதிக்கப்படுகின்றன என்ற பெரும் உண்மையை வெளிப்படையாக சுட்டிநிற்கின்றன. ஏன் பிறப்பு நிலையில் கூட ஒரு குடும்பத்திலே ஆண்பிள்ளை பிறப்பில் மகிழ்வடைவதும், பெண்பிள்ளை பிறந்துவிட்டால் பெண்ணா? என கேள்விக்குறியோடும் கவலையோடும் நிற்கும் பெற்றவர்கள் மாறாதவரை அவர்களது மனநிலை மாறாதவரை பெண்கள் என்றும் அடிமைகளே.

எது எவ்வாறாயினும் பெண்கள் சமுதாயத்திலே மதிக்கப்படவேண்டும். அவர்களது உணர்வுகளும் உணர்ச்சிகளும் மதிக்கப்படவேண்டும். ஆசைகளும் அபிலாஷைகளும் அரங்கேற்றப்பட வேண்டும். ஒட்டுமொத்தத்தில் பெண்கள் பெண்களாகவும், கண்களாகவும் பேணப்படவேண்டும்.அதுவே ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியின் அதி உச்ச வெற்றியாகும்.

மு.சுகந்தினி அச்சுவேலி, தெற்கு.

# அன்புள்ள அம்மாவுக்கு



பத்து மாதம் என்னைச் சுமந்து
பக்குவமாய் பெற்றெடுத்து
பாசத்தில் எனை வளர்த்து
பாலமுதம் எனக்கு ஊட்டி
தோளில் என்னைத் தூக்கி
தொட்டிலில் எனை ஆட்டி
பாடலோடு என்னை வளர்த்து
பாட்டில் உறங்க வைத்து
பள்ளிக்கு அழைத்துச் சென்று
பாடங்கள் கற்க வைத்து
உன் வியர்வையில் என்னை உயர்த்தி
உறங்காமல் எனைக் காத்து
பட்டங்கள் பல பெற்று
பரிசுகள் பல பெற்றேன் அன்னையே!
உன் அன்பான பண்பையும்
பரிவான பாசத்தையும் நான்
அனுதினமும் ஆராதிக்கிறேன்.

காவேரி, மானிப்பாய்

# கலாசார சீர்கேடு என்றால் என்ன?



இன்றைய கலாசார சீரழிவுகளுக்கு காரணம் பெண்களது அரை குறை ஆடைகள் மட்டும் தான் என்று சொல்கிறது இன்றைய சமுதாயம். பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படாமையே இதற்கு மூல காரணம் என்றுசொன்னால் யாரும் நம்பப் போவதில்லை. இப்போது கலாசாரத்தைப் பெண்களது ஆடைகள் தான் தீர்மானிக்கின்றன என்றால் அன்றைய காலத்தில் மேற்சட்டை இல்லாமல் தானே பெண்கள் புடைவை கட்டினார்கள். அது மட்டும் கலாசாரம் என்றாகிவிடுமா?

முதலில் நம்மவர்கள் கலாச்சாரம் என்றால் என்ன என்பதனை அறிந்து கொள்ள வேண்டும்.கலாச்சாரம் என்பது என்ன என்றே தெரியாதவர்கள் கலாச்சாரம் பற்றிப் பேசுவது வெட்கப்பட வேண்டிய விடயம். ஒருநாட்டின் கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டியது பெண்கள் தான் என்றால் ஆண்கள் எதற்கு? வீட்டில் இருந்து சமையலாவது செய்யலாமே. எதற்கு வீண் பொய்ப் பிரசாரங்கள் செய்கிறார்கள். பெண் சேலை கட்டுவதுதான் கலாச்சாரம் என்று கூறுவோரும் உள்ளனர். இவர்கள் புடைவையை மட்டுமே கலாசாரம் என்கின்றனர்.

இன்று எந்தக் கூட்டத்திலாயினும் இன்றைய கலாசாரம் பற்றி ஒரு கதை எழுப்பி விடுகின்றனர். உடனே பெண்களது ஆடைகள் மட்டுமே கலாசாரம் என்ற தொனிப் பொருளில் ஆண்கள்வாய்கிழியப்பேசியும் விடுவார்கள். பெண்களது ஆடைகள் மட்டுமல்ல கலாசாரம் ஆண்களது ஆடைகளும்தான். இன்றைய உலகில் பெண்கள் எந்தத்தொழில் செய்யவில்லை. எல்லாத் தொழில்களையும் செய்கிறார்கள். எல்லா தொழிலுக்கும் சேலையுடன் செல்லமுடியுமா என்ன? பொலிஸ் தொழிலில் ஈடுபடும் பெண் ஒருத்தி சேலையுடன் தொழிலுக்கு போக வேண்டும் என்றால் நடக்கிற காரியமா? இடத்துக்கும் தேவைக்கும் ஏற்ற மாதிரி ஆடைகளை மாற்றத்தான் வேண்டும்.

நீங்கள் ஜீன்ஸ் போட்டால் நாங்கள்என்ன பாவாடை தாவணியா போடுறது என்று கேட்கும் ஆண்களிடம் நாம் ஒரு விடயத்தை கேட்க வேண்டும். உங்களது பாரம்பரிய உடை வேட்டி, சேட் தானே! நாங்கள் வேட்டி சேட்டை அணியவில்லையே!

கலாசாரம் என்பது மனிதன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் செயற்பாட்டிலும் தான் உள்ளது. கலாசாரம் என்றால் பெண்களது ஆடைகள்தான் என்றால் இந்த மூடர்களைத் தட்டியெழுப்ப இன்னுமொரு பாரதி பிறந்துதான் வரவேண்டும். என்று மாறுமோ இந்த நிலை?....

சுஜி – யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஜூலை 9

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பொதுசன மாதாந்த உதவி மற்றும் தனிநபர்களாக உள்ள சமுர்த்தி உதவி பெறும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கான பதிவுகள் கிராம அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை இந்தப் பதிவுகளை மேற்கொள்ளாத முதியவர்கள் இன்று திங்கட்கிழமை உரிய கிராம அலுவலரிடமோ அல்லது பிரதேச செயலகத்தில் உள்ள சமூக சேவைக் கிளையிலோ தமது வயதை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் போட்டோ பிரதியை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (16)


## முக்கிய அறிவித்தல்

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

**மேற்படி தேவஸ்தானத்துக்குச் சொந்தமான குடியிருப்பு ஆதனங்களில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான கட்டட வரைபடங்கள் எவற்றுக்கும் நாம் ஒப்புதல் கையொப்பம் வைக்கவில்லை என்பதையும், புதிய குத்தகை எதனையும் செய்யவில்லை என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.**

V.S. கிருஷ்ணமூர்த்தி
தலைவர்

(20194)

K.C. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்.



துணுக்காய் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர் 101/07

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள மேற்படி பதவிக்கு தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01.சம்பள அளவுத்திட்டம் 11450-14500 / 145x10 -160x10

(சம்பளத்திற்கு மேலதிகமாகக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுச் சுற்றுநிருபத்திற்கமைவான இதர படிகளும் வழங்கப்படும்).

(அடிப்படை சம்பளத்தில் 15% +வாழ்க்கைப்படி 5850)

02.வயதெல்லை:-18-45 வயது வரை

03.விண்ணப்ப முடிவுத் திகதி:-30/07/2012

04.தகைமை

அ) கூட்டுறவு பணியாளர் 08 ஆவது சம்பள அளவுத் திட்டப் பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்குக்குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பள அளவுத்திட்ட முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு(06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப்பதவி ஒன்றில் ஆறு(06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.உயர்தரம் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் முகாமை மட்டப் பதவியில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

05) பிணை:- பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணம் செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

06) மேலதிக விவரங்களைச் சங்கப் பணிமனையில் T.P 024-3248256, 024-3841945 இலக்கம் ஊடாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம்.

07) நிபந்தனைகள்:-கூட்டுறவு சங்கத்தில் கடமைபுரிபவராயின் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது. சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்கள், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் என்பன இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும், சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிராத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ''தலைவர்'', துணுக்காய் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், துணுக்காய் எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளர், 101/07 பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டு நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**

(சி/1258)

**துணுக்காய் ப.ப.நோ.கூ.சங்கம், துணுக்காய்.**


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வேலுப்பிள்ளை குமாரசுவாமி**

*மண்ணில்*
*1936.04.01*

*விண்ணில்*
*2004.07.07*


திதி: (ஷஷ்டி 9.07.2012)

எட்டாண்டு சென்றதப்பா - நீங்கள்
எம்மை விட்டுச்சென்று ஆனாலும்
நீங்காது எம் பாசம் - மாறாது
எம் துயரம் அப்பா
எம் வாழ்வில் விளக்கேற்றிய எம் தந்தையே
ஆண்டெட்டு ஆனாலும் ஆறாதையா உம் நினைவு
எம் உயிர் உள்ளவரை
உம் பணி தொடரும்.........

கைதடி மேற்கு, கைதடி. (சி/1285) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆச்சிப்பிள்ளை கதிரேசு



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரேசு ஆச்சிப்பிள்ளை நேற்று (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - லக்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரி - சின்னன் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் முத்துப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் சகோதரியும் பரிமளத்தின் தாயும் கனகலிங்கத்தின் மாமியும் கிருஸ்ணசுகி, புஸ்பன் ஆகியோரின் பேர்த்தியும் யசிராஜ், கமல்ராஜ், பிரபாஸ்ராஜ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2012) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு புத்தூர் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''புஸ்பவனம்'',*
*புத்தூர் கிழக்கு, புத்தூர்.* (20191)

தகவல்:
**புஸ்பானந்தன்.(பேரன்).**

### திருமதி நாகம்மா அம்பலவாணர் (நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை 83/3, W.A. சில்வா மாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அம்பலவாணர் நாகம்மா கடந்த 07.07.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் புறக்கோட்டை லெட்சுமிபவான் உரிமையாளர் காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, சிவானந்தராசா (சிவா - Pearlites), சர்வானந்தராசா (Luchshmi Bhawan Pharmacy), நித்தியானந்தராஜா (Avro Travels), சச்சிதானந்தராஜா, பஞ்சானந்தராஜா, காலஞ்சென்ற தயானந்தராஜா மற்றும் சதானந்தராஜா ஆகியோரின் அன்புத் தாயும் சச்சிதானந்தன் (Chartered Accountant - Kanesalingam & Co), மரகதமணி, தவரூபராணி, சகுந்தலாதேவி, ஜெயலலிதா, ரோகிணி, கிருபாநிதி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரி, சந்திரசேகரம், கணபதிப்பிள்ளை, பரமானந்தன் மற்றும் விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கமுத்து மற்றும் கந்தப்பு, நடராஜா, காலஞ்சென்றவர்களான சவுந்தரம், முத்தையா மற்றும் செல்லம்மா, காலஞ்சென்ற கனகசபை மற்றும் கனகாம்பிகை, பூபாலசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் அனுஷா கிருஸ்ணராஜ், விமல்ராஜ், அர்ச்சனா, அபிஷிகா, அமலினி, ஞானகன், நிர்சாந்த், அபிராமி, அபிஷனா, நிவாணன், சந்தியா, ஆதித்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 83/3, W.A. சில்வா மாவத்தையிலுள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் தகனத்துக்காக பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83/3, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு - 6 (சி/1199)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண தடகளப் போட்டிகள் யாழ். மாவட்டத்துக்கு முதலிடம்




யாழ்ப்பாணம், ஜூலை 9

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் முதலாம் இடத்தை யாழ். மாவட்டம் தனதாக்கிக்கொண்டது.

கடந்த 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் மற்றும் ஏற்கனவே நடைபெற்று முடிந்த பெருவிளையாட்டுகள் என்பவற்றில் வெற்றிகளைக் குவித்த யாழ். மாவட்டம் 2175 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

576 புள்ளிகளைப் பெற்ற வவுனியா மாவட்டம் இரண்டாம் இடத்தினையும், 475 புள்ளிகளைப் பெற்ற மன்னார் மாவட்டம் 3 ஆம் இடத்தினையும், 214 புள்ளிகளைப் பெற்ற முல்லைத் தீவு மாவட்டம் 4 ஆம் இடத்தினையும் 142 புள்ளிகளைப் பெற்ற கிளிநொச்சி மாவட்டம் 5 ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

இதில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சிறந்த தட வீரருக்கான விருதை கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியைச் சேர்ந்த என்.சுமன் 515 புள்ளிகளைப் பெற்று தனதாக்கிக்கொண்டார்.

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சிறந்த கள வீரராக 515 புள்ளிகளைப் பெற்ற மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த என்.நிப்ராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சிறந்த தட வீரராக 633 புள்ளிகளைப் பெற்ற யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம்.நிலோசன், 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சிறந்த கள வீரராக 745 புள்ளிகளைப் பெற்ற மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.ஜே.ஈ வொய் டிலான் சூசை, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சிறந்த தட வீரராக 735 புள்ளிகளைப் பெற்ற வவுனியா நெளுக்குளம் கலைமகள் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சுவேந்திரன், 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சிறந்த கள வீரராக 838 புள்ளிகளைப் பெற்ற யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வி.யஸ்மினன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதேவேளை 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சிறந்த தட வீரராகவும் (745 புள்ளிகள்), சிறந்த கள வீரராகவும் (850 புள்ளிகள்) மட்டுவில் சந்திரபுர சந்திரோதய வித்தியாலயத்தை சேர்ந்த எம்.ராஜ்கரன் தெரிவு செய்யப்பட்டார்.

**பெண்கள் பிரிவில் சாதனை படைத்தோர்**

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான சிறந்த தட வீராங்கனையாக 731 புள்ளிகளைப் பெற்ற உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.ஆரணி, 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான சிறந்த கள வீராங்கனையாக 701 புள்ளிகளைப் பெற்ற மன்னார் கௌரி அம்பாள் அ.த.க பாடசாலையைச் சேர்ந்த எஸ்.பிரியதர்சினி, 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான சிறந்த தட வீராங்கனையாக 808 புள்ளிகளைப் பெற்ற யாழ்.மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எ.அனற், 17வயதுப் பிரிவு பெண்களுக்கான சிறந்த கள வீராங்கனையாக 753 புள்ளிகளைப் பெற்ற சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எம்.ஜோய் காரூணியா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான சிறந்த தட வீராங்கனையாகவும் (831 புள்ளிகள்), சிறந்த கள வீராங்கனையாகவும் (745 புள்ளிகள்) வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.கமலினி தெரிவுசெய்யப்பட்டார்.

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான சிறந்த தட வீராங்கனையாக 822 புள்ளிகளைப்பெற்ற வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.லேகாஜினி, 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான சிறந்த கள வீராங்கனையாக 734 புள்ளிகளைப் பெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பானுஜா தெரிவு செய்யப்பட்டனர்.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற தடகளப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் சிறந்த வீரனாக 850 புள்ளிகளைப் பெற்ற மட்டுவில் சந்திரபுர சந்திரோதய வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.ரஜ்க ரன் தெரிவானார். பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனை யாக 839 புள்ளிகளைப் பெற்ற வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.கமலினி தெரிவு செய்யப்பட்டார். (ங-23-86)

## யாழ்ப்பாணத்தில் இருந்து ஒலிம்பிக் தீபம் தென்பகுதிக்கு



வலி.வடக்கு, ஜூலை 9

சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு ஒலிம்பிக் தீபம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை பருத்தித்துறை முனையில் இருந்து தென்னிலங்கை நோக்கி பயணமானது.

பருத்தித்துறை பிரதேச இளைஞர் யுவதிகளால் ஏந்தி வரப்பட்ட இந்த ஒலிம்பிக் தீபத்தை கோப்பாய் பிரதேச செயலக எல்லையில் வைத்து கோப்பாய் பிரதேச செயலக வீர, வீராங்கனைகள் பெற்றுக் கொண்டனர். பின்னர் அங்கிருந்து எடுத்துவரப்பட்ட தீபம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா சதுக்கத்தில் வைத்து, யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வீர வீராங்கனைகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மகேஸ் மற்றும் வடமாகாண விளையாட்டுத் துறை பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, தேசிய இளைஞர் சேவைகள்மன்ற பிரதிப்பணிப்பாளர் ஈஸ்வரராஜா மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். நகரில் இருந்து ஏந்திச் செல்லப்பட்ட ஒலிம்பிக் தீபம், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு வீர, வீராங்கனைகளிடம் கையளிக்கப்பட்டது.

இந்த ஒலிம்பிக்தீபம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் நேற்று வவுனியா மாவட்டத்தைச் சென்றடைந்தது. அங்கிருந்து ஒலிம்பிக் தீபம் தென்னிலங்கை நோக்கி ஏந்திச் செல்லப்படவுள்ளது. (ங-23-86)

## சைக்கிள் ஓட்டத்தில் வென்றோர்



யாழ்ப்பாணம், ஜூலை 9

90 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சபை அங்கத்தவர்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டனர்.

**வென்றோர் விவரம்**

த.தனிஸ்(முதலாமிடம்), அ.சலக்ஸன் (இரண்டாமிடம்) , தி.கமல்ராஜ் (மூன்றாமிடம்)

கூட்டுறவு அங்கத்துவப் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர்-

ஆர்.பருவநிலா- முதலாமிடம் - (தெல்லிப்பழை ப.நோ.கூ.ச), இ.தனுசா இரண்டாமிடம்-(பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.ச), பு.மாலா -மூன்றாமிடம் (கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச) (ங-17)

## கூடைப்பந்தில் யாழ். அணி சம்பியன்




வலி.வடக்கு, ஜூலை 9

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி வட மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியும், வவுனியா மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியும் மோதிக் கொண்டன.

நான்கு கால்பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில், முதல் பாதி ஆட்டத்தின் தொடக்கத்தில் வவுனியா மாவட்ட அணி முன்னிலையில் காணப்பட்டது. இருப்பினும் மனம் தளராமல் தொடர்ந்து போராடிய யாழ். அணி புள்ளிகளைக் குவிக்கத் தொடங்கியது. இதனால் முதல்கால்பாதி ஆட்டத்தில் 15:9 புள்ளிகள் என்ற நிலையில் யாழ்.மாவட்ட அணி முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் கால் பாதி ஆட்டத்திலும் 27:3 புள்ளிகள் என்ற நிலையில் யாழ். மாவட்ட அணியே முன்னிலை பெற்றது.

தொடர்ந்தும் வவுனியா மாவட்ட அணி புள்ளிகளைப் பெற எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

யாழ்.மாவட்ட அணியே தொடர்ந்தும் மூன்றாம், நான்காம் பாதி ஆட்டங்களில் முறையே 23:6, 25:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்று வெற்றியைத் தன் வசமாக்கியது.

யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த பி.பிரசாத்மன் 19 புள்ளிகளையும், சசிந்திரன் 14 புள்ளிகளையும் தயாளன் 12 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த செந்தில்குமார், மயூரன் ஆகியோர் தலா 6 புள்ளிகளைப் பெற்றனர்.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி 90 :26 புள்ளிகள் என்ற அடிப்படையில் வவுனியாவை வீழ்த்தி வட மாகாணக் கூடைப்பந்தாட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ங-86-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக்முறையிலான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று திங்கட் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு,

பி.ப 4 மணிக்கு

எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் எதிர் பாஷையூர் சென். அன்ர[illegible]

பி.ப 5 மணிக்கு

மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செரினா வில்லியம்ஸ்

விம்பிள்டன் ரெனிஸ்:

## பட்டம் வென்றார் செரினா வில்லியம்ஸ்

விம்பிள்டன் ரெனிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 5ஆவது முறையாகவும் சம்பியன் பட்டம் வென்று சாதித்தார். விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் தொடர் பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச் சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், போலந்தின் ரட்வன்ஸ்காவை சந்தித்தார். முதல் செற்றை 6-1 என எளிதாக வென்றார் செரினா. எனினும் இரண்டாவது செற்றில் எழுச்சி பெற்றார் ரட்வன்ஸ்கா. இரண்டாவது செற்றை 7-5 என்று கைப்பற்றி செரினாவுக்கு அதிர்ச்சி கொடுத்தார்.


வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் ஆதிக்கம் செலுத்திய செரினா 6-2 என ரட்வன்ஸ்காவை மிக எளிதாக வென்றார். முடிவில் 6-1, 5-7, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்ற செரினா சம்பியன் பட்டம் வென்றார்.

கடந்த 2010 விம்பிள்டன் ரெனிஸ் தொடரில் கிண்ணத்தை வென்ற பின்னர் கிராண்ட்ஸ்லாம் தொடர் எதிலும் செரினா பட்டம் வெல்லவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தற்போது ஐந்தாவது முறையாக விம்பிள்டனில் பட்டம் வென்று அசத்தியுள்ளார். இது தவிர செரினா கைப்பற்றும் 14ஆவது கிராண்ட்ஸ்லாம் தொடர் இதுவாகும்.

அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றவர்களின் பட்டியலில் அவர் 6ஆவது இடத்தில் இருக்கிறார். 1990ஆம் ஆண்டு விம்பிள்டன் பட்டத்தை தனது 33 வயதில் மார்ட்டினா நவரத்திலோவோ கைப்பற்றினார். அதன்பின்னர் அதிக வயதில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் என்ற பெருமை 30 வயதான செரீனாவுக்கு தற்போது கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் செரினாவுக்குத் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. அவரது நுரையீரலில் ரத்தம் உறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்து குணமடைந்த அவர் மீண்டும் ரெனிஸ் விளையாடுவதே சந்தேகம் என்று கூறப்பட்டது.

ஆனாலும் நம்பிக்கை இழக்காமல் மீண்டும் களம் திரும்பிய அவர் ரெனிஸில் செரினாவின் ஆதிக்கம் முடிந்து விட்டது என்று விமர்சித்தவர்களுக்கும் பதிலடி கொடுத்துள்ளார். சம்பியன் பட்டத்தை கைப்பற்றியமைக்காக செரினாவுக்கு சுமார் ரூ.10 கோடி பரிசுத்தொகையாக கிடைத்துள்ளது.



**அதிக வயதில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் என்ற பெருமை 30 வயதான செரீனாவுக்கு தற்போது கிடைத்துள்ளது.**


ரட்வன்ஸ்கா

இலங்கை – பாகிஸ்தான் 3ஆவது டெஸ்ட்

## ஆதிக்கம் செலுத்தும் பந்துவீச்சாளர்கள்

பாகிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் 226 ஓட்டங்கள் இலக்குடன் இலங்கை அணி துடுப்பெடுத்தாடி வருகிறது.

இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் போட்டியில் இலங்கை அணி 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி சமன் ஆனது.

மூன்றாவது போட்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்மூலம் பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. தொடக்க வீரராக களமிறங்கிய மொகமட் ஹபிஸ் 22 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பெரேராவின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய அசார் அலி, யூனிஸ்கான் ஆகிய இருவரும் ஓட்டங்கள் ஏதுமின்றி ஆட்டமிழந்தனர். மற்றொரு தொடக்க வீரரான தவ்பிக் உமர் 29 ஓட்டங்களைப் பெற்று பெரேராவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்பு களமிறங்கிய அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆசாத் ஷாபிக் மட்டும் 10 பவுண்டரிகளுடன் 75 ஓட்டங்களை எடுத்து நம்பிக்கை அளித்தார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

முடிவில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்சில் 72.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 226 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து தனது முதல் இனிங்ஸில் இலங்கை அணி 226 ஓட்டங்கள் என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

ஆரம்ப வீரராகக் களமிறங்கிய தினேஷ் சண்டிமால் 8 ஓட்டங்களும், குமார் சங்ககாரா ஓட்டங்கள் ஏதுமின்றியும் ஆட்டமிழந்தனர். அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 12 ஓட்டங்களுடன் சமியின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். மற்றொரு தொடக்க வீரரான பரணவிதாரண 13 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். நேற்றைய ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 44 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது. போட்டியின் இரண்டாம் நாள் இன்றாகும்.

## கெய்ல், சாமுவேல்ஸ் அதிரடி; வீழ்ந்தது நியூஸிலாந்து



மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 55 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஜமைக்காவின் சபீனா பார்க் மைதானத்தில் இடம் பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிறிஸ் கெயில் 107 பந்துகளில் 125 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ் 103 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும், டெரன் சமி 21 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 3 இலக்குகளையும், கைல் மில்ஸ், தருண் நேதுல்லா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

316 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய நியூசிலாந்து அணி 47 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 260 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக பீ.ஜே.வற்லிங் 62 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 72, அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன் 65 பந்துகளில் 58 ஓட்டங்களையும், மார்ட்டின் கப்ரில் 81 பந்துகளில் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ரவி ராம்போல் 3 இலக்குகளையும், மார்லன், சுனில் நரைன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், அன்ட்ரே ரசல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் மார்லன் சாமுவேல்ஸ் தெரிவானார்.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண 20/20 அணியில் இடம்பிடிப்பேன் - யுவராஜ் நம்பிக்கை

உலகக்கிண்ண '20/20' அணியில், இடம் பிடிக்க வேண்டும். இதற்கு முன், நியூசிலாந்துக்கு எதிரான '20/20' தொடரில் விளையாட வேண்டும்-என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறார் யுவராஜ் சிங்.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரரான யுவராஜ் சிங் சமீபத்தில் புற்றுநோயால் பாதிக்கப் பட்டு, தற்போது சிகிச்சையின் பின் அந்த நோயிலிருந்து முழுமையாக மீண்டு வந்துள்ளார். தற்போது தீவிர பயிற்சியில் ஈடுபட்டுவரும் இவர், மீண்டும் இந்திய அணியில் இடம்பெற முயற்சித்து வருகிறார்.

''இந்திய அணியில் மீண்டும் இடம் பெறுவது எனது கனவு. இலங்கையில் நடக்கவுள்ள '20/20' உலகக் கிண்ணத் தொடருக்கான அணியில் இடம் பெற்றுவிட வேண்டும் என்று முயற்சிக்கிறேன். இதற்கு முன் ரஞ்சிக் கோப்பை போட்டி, மன்-உத் தவ்லா தொடர், புச்சி பாபு கிரிக்கெட் தொடர் என சகல வகையான உள்ளூர்ப் போட்டிகளிலும் விளையாட முடிவு செய்துள்ளேன். ஆனால், இவை எப்போது நடக்கும் என்று சரியாகத் தெரியவில்லை.

'20/20' உலகக் கிண்ண அணியில் நானும் இடம் பெற்றால் நல்லது என்று தேர்வுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்த கருத்து, எனக்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது. ஒன்றரை மாதங்களாக பயிற்சி செய்து வருகிறேன். அடுத்த இரு மாதத்தில் தொடர்ந்து பயிற்சி செய்யும் பட்சத்தில், மீண்டு விடுவேன்.

என்னைப் பொறுத்தவரை '20/20' அல்லது ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவுள்ளேன். வரும் நியூசிலாந்து தொடரில், '20/20' போட்டிகளில் விளையாடலாம் என்று நினைக்கிறேன். தற்போதைய நிலையில், டெஸ்ட் போட்டிகள் குறித்து எதுவும் நினைக்கவில்லை. அது உடற் தகுதி, ஆட்டத் திறன் மற்றும் அப்போதைய சூழ்நிலை என்பவற்றைப் பொறுத்தே அமையும் - இவ்வாறு யுவராஜ் சிங் மேலும் கூறினார்.

(ந)

மணல் விற்பனைக்குண்டு
கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 21, 000/=
தொடர்புகளுக்கு: ரமேஸ் 072 2694462
(20192)(6-7-8)

VIVEKANANDA ACADEMY
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தூதரகப் பரீட்சைகளுக்கான
ஜேர்மன் - Deutsch (டொச்)
நெதர்லாந்து - Dutch (டச்)
மற்றும் French, Italian
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
VIVEKANANDA ACADEMY
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 0393, 021 3216928, 077 4842464
குறிப்பு:
எமது அக்கடமி அரசாங்க மற்றும் தூதரகப் பதிவு பெற்ற வெளிநாட்டு மொழிக்கற்கை நிறுவனம் ஆகும்
Gov. Reg No - W/A 76795
(சி/1264)(6-7-8)

செங்கல் விற்பனைக்கு
மொத்தமாகவும், சில்லறையாகவும் செங்கற்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
பிரணவன் என்ரபிறைசஸ்
முத்திரைச்சந்தி, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P :077 381 8799
(20126)(6-7-8)

English / French
புதிய பிரிவு ஆரம்பம்
காலம் : 1 – 3 மாதங்கள்
சனி, ஞாயிறு மற்றும் வாரநாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
MyWay 077 33 63 456

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
Batch I: 14-07-2012 09.00 - 12.00
Batch II: 15.07.2012 03.00 - 5.00
Batch III : 14.07.2012 09.00 - 12.00
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
2 Months
IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months
A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
2 Months
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074
(சி/1268)(6-7-8)

இரண்டுமே எம்மிடம்...
1st Quality Banner
80/=
நீண்டகாலப் பாவனைக்கு மிகவும் சிறந்தது.

பார்ப்பதற்கு இரண்டும் ஒன்றுதான், ஆனால்...

எதுதான் தரம் ?

2nd Quality Banner
40/=
குறுகியகாலப் பாவனைக்கு சிறந்தது.

300 இற்கும் மேற்பட்ட புதிய டிசைன்களில் அலங்காரப் பந்தல் பனர்கள், விசேடமான விலைக்கழிவுகளில்...
உங்கள் விளம்பரப் பலகைகள் மங்குகிறதா? இதற்கான தீர்வு எம்மிடம் மட்டுமே.
தேர்ந்தெடுக்கப்பட்ட டிசைனர்கள் மூலம் துல்லியமான புதிய படைப்புக்கள்.
ANDRA DIGITAL PRINTING
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696
(சி/1287)(6-7-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.